www.tamilarangam.net

සරිනිහර
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழவமிந்த நாட்டிலே - பாரதி

**விளையாட்டு**

பேசுங்கள்; பேசிக் களைக்கையிலே பிளேனேறி
வீசுங்கள்; வீசிக் களைக்கையிலே - பேசுங்கள்
பேசிக் களைத்தாற்பின் வீசிடலாம்; விளையாட்டில்
வேசமெதற் கஃதெல்லாம் வீண்!

-ஈழமோகம்

இதழ் 68 மார்ச்.23 - ஏப்ரல்.05, 1995 விலை 7.00



## சமாதான கயிறிழுப்பு!



தாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக அரசு எதிர்வரும் மார்ச் 28ம் திகதிக்கு முன்பாக எத்தகைய சாதகமான பதிலையும் தெரிவிக்காவிட்டால் வேதனைக்குரிய முடிவொன்றை-சமாதான முயற்சிகளை தொடர்வதா இல்லையா என் பதை-எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம் என்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஜனாதிபதிக்கு எழுதியதாகக் கூறப்படும் கடிதத்தையடுத்து ஜனாதிபதி அவசர அவசரமாக மந்திரிசபையை கூட்டி நிலைமையை ஆராய்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகள் தடுப்புக் காவலில் உண்ணாவிரதத்தை மேற்கொண்ட பொலீஸாரை விடுவித்திருப்பது ஒரு நல்ல அறிகுறி என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதும், பொலிஸாரின் விடுதலைக்கு அரசின் மீது புலிகள் கொண்ட நம்பிக்கையை விட அவர்களின் உடல்நிலை மோசமடைந்திருந்ததும், தமது போராட்டத்தில் அவர்கள் உறுதியாக இருந்ததுமே என்று

→15

# தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்!

## – தெரிவுக் குழுவுக்கு தமிழ் கட்சிகள் கூட்டாக யோசனை!

**வடகிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனமாக உள்ளார்கள் என்றும் அவர்களுடைய சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் எனவும், இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஒரு சமஷ்டிக் கூட்டாட்சி முறை கொண்டு வரப்பட வேண்டும் என்றும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய தமிழ்க் கட்சிகள் கூட்டாகத் தமது யோசனைகளை முன்வைத்துள்ளன.**

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் சமர்ப்பித்துள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளின் போது இக் கட்சிகள் மேலும் ''வடக்கு கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் ஒரு தேசிய இனமாக இருக்கின்றனர். அவர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். சமஷ்டிக் கூட்டாட்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்'' என்றும் தெரிவித்துள்ளன. இக் கோரிக்கைகள் முன்னர் திம்புப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட தேசிய இனம் தொடர்பான அடிப்படைகளை அப்படியே கொண்டிருக்கின்றன என்பதுவும், இவை புலிகளாலும் ஏற்கெனவே அடிப்படையான விடயங்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதைதவிர வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு வடக்கு கிழக்கின் மீதுள்ள உரிமையையும், அவர்களது தனித்துவத்தையும் அங்கீகரித்துள்ள இக் கோரிக்கைகள் அவர்களுக்கான ஒரு 'சுயாதிக்க' சபையையும் கோரியுள்ளன. மலையக மக்களது பிரஜா உரிமை தொடர்பாகவும், அவர்களது சமத்துவ உரிமை தொடர்பாகவும், பிற இனக் குழுக்களது உரிமைகள் தொடர்பாகவும் உள்ளூராட்சி சபைகள் இனத்துவ அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் தெரிவித்துள்ளன.

''தமிழ் மக்களின் கடந்த கால அரசியல் வரலாற்றில், திம்புப் பேச்சுவார்த்தைக்குப் பின் தமிழ்க் கட்சிகள் இவ்வாறு முன்வந்து பெருமளவுக்கு ஒத்துப் போகக் கூடிய கோரிக்கைகளை முன் வைத்திருப்பது இதுவே முதற் தடவை என்றும், இதர கட்சிகளான ஈ.பி.ஆர்.

→15

## ஜனாதிபதி விசேட ஆணைக்குழு:
## குற்றவாளிகளைத் தேடி...

கடந்த 17 ஆண்டகால ஐ.தே.க. ஆட்சியில் ஊழல், மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் என்பவற்றை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசேட ஆணைக்குழு தனது விசாரணையை பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்துள்ளது.

ஹில்டன் ஹொட்டேல் திட்டம், எயர் லங்கா மற்றும் அதன் விமானக் கொள்வனவுகள் தொடர்பான விடயங்கள், இலங்கை அரச புகையிரத சேவை, நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை துறைமுக அதிகார சபை, இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் இலங்கை தொலைத்தொடர்பு சேவைகள் நிலையம் மற்றும் தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட பதினெட்டு நிறுவனங்கள் மீது சாட்டப்பட்டுள்ள 10 மில்லியன் ரூபாக்களுக்கு மேற்பட்ட மோசடி தொடர்பான விசாரணைகளை இந்த ஆணைக்குழு மேற்கொள்ளும்.

உள்நாட்டில் பஸ் வண்டிகளை நிர்மாணித்தல், தோட்டத்துறை முகாமைத்துவம், லொத்தர் சபையின் விற்பனைப் பங்கு போன்றவை தொடர்பாக வழங்கப்பட்ட கொந்தராத்துக்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மோசடிகளையும் இந்த ஆணைக்குழு ஆராயும்.

இவை தவிர நிதி கொள்கை திட்டமிடல் அமைச்சு, மகாவலி அமைச்சு ஆகியவற்றையும் அவற்றின் கீழ்வரும் பொது ஜன சேவை (Public service) அமைப்புக்களும் இத்தொடரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு இவை தொடர்பான தீர்ப்பு அறிக்கைகள் தனியாக வழங்கப்படும் என்றும் தெரியவருகிறது.

ஏற்கெனவே ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசாங்க காலத்தில் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு போன்ற அதிகாரங்களை கொண்ட இக் குழுவில் குற்றவாளியாகக் காணப்படுபவர் தமது குடியியல் உரிமைகளை இழப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா அப்போது குடியியல் பறிக்

→15



நீதிபதிகள் ,ஹெக்டர் யாபா, எப்.என்.டி ஜயசூரிய, பிரியந்த பெரேரா (தலைவர்)

## இளவரசிக்காக நகர்ந்த முகாம்!

திருகோணமலை லிங்கநகரில் ஒரு பொலிஸ் சென்றி பொயின்ற் இருக்கிறது. 83 இனப்படுகொலையோடு போடப்பட்ட இந்த சென்றி பொயின்ற் கடந்த 12 வருடங்களாக அகற்றப்படவே இல்லை. யுத்தம் நடந்து கொண்டிருந்த காலங்களில் இம்முகாமைத் தாண்டி பிரயாணம் செய்வது இளைஞர், யுவதிகளைப் பொறுத்தவில் சிரமமான காரியம். இப்போது கெடுபிடியில் சற்றுத் தளர்வு. ஆனால் அகற்றப்படவே இல்லை. இம்மாத ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இளவரசி ஆன் இலங்கை வந்திருந்தார். திருமலைக்கு விஜயம் செய்த இளவரசியார் லிங்கநகரூடாகப் பிரயாணம் செய்ய வேண்டியேற்பட்டது. என்ன ஆச்சரியம், 12 வருடங்களாக அகற்றப்படாதிருந்த முகாம் அகற்றப்பட்டிருந்தது. லிங்கநகர் வாசிகளுக்கும், அதனூடாகப் பிரயாணம் செய்பவர்களுக்கும் மகிழ்ச்சி. இப்போதாவது முகாம் அகற்றப்பட்டதே என்று. முகாம் அகற்றப்பட்ட செய்தி லிங்கநகரைச் சுற்றி வருவதற்குள் வந்த அதிர்ச்சியான செய்தி மீளவும் முகாம் போடப்பட்டுவிட்டது என்பதுதான்.

முகாம் அகற்றப்பட்டது மக்களுடைய இலகுவான பயணத்துக்காக அல்ல. இளவரசியவர்கள் வருகைக்காக. அவர்கள் வந்து போனதும் சில மணித்தியாலங்களுள் முகாம் வந்தது பழையபடி.

## வருகிறது பிரசுரப் போர்!

சம்பந்தர் - தங்கத்துரை விவகாரம் தொடர்பாக கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்தை மார்ச் 4ஆம் திகதியன்று கூடிய கூட்டணியின் திருமலைக்கிளை நிராகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் விவகாரம் தொடர்பாக சம்பந்தரும், தங்கத்துரைக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் கூட்டணியின் தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசிக்காமல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்றும், எனவே அதற்கு தலைமைப்பீடம் பொறுப்பேற்க முடியாதென்றும் சிவசிதம்பரம் அனுப்பி வைத்திருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. சிவசிதம்பரம் செயற்குழுவைக்கூடாமல் தன்னிச்சையாக இம்முடிவையெடுத்து கடிதத்தை அனுப்பி உள்ளதாகக் கூறி இக்கடிதத்தை திருமலைக் கிளை நிராகரித்துள்ளதோடு, ஆறு மாதங்களாகக் கூடாமல் இருக்கும் செயற்குழுவைக் கூடுமாறு தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுப்பது எனவும் தீர்மானித்துள்ளது.

தங்கத்துரை தனது நிலைப்பாட்டினை நியாயப்படுத்தி துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளதால், பதிலாக திருமலைக் கிளையும் தனது நிலைப்பாட்டினை துண்டுப்பிரசுரம் மூலம் வெளியிடுவது என்றும், சம்பந்தனுக்கும் தங்கத்துரைக்குமான ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்துவது என்றும், திருமலைக் கிளையால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டக்களப்பு ஊழல்கள்:

## 1 சொல்லாமல் கொள்ளாமல் வந்திறங்கிய தளபாடங்கள்!

மட்டக்களப்பில் ஊழலுக்குப் பெயர் போன மற்றுமொரு நிறுவனம் மட்டக்களப்பு கல்வித்திணைக்களம். மட்டக்களப்பில் உள்ள அரச ஸ்தாபனங்களும் ஒழுங்கீனங்களும் மோசடிகள் நிறைந்து காணப்படும் ஸ்தாபனம் இது.

கடந்த வருடத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் கல்வித்திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கென பல மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியிருந்தன. ஆனால் ஒதுக்கப்பட்ட பணத்திற்கு உரிய வேலைகள் எதுவும் செய்து முடிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது. குறிப்பாகத் தளபாடங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி பெருமளவில் மோசடி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. கல்வித்திணைக்களத்தில் இவ்வேலைகளுக்குப் பொறுப்பாயிருக்கும் தேவதீபன் என்னும் அதிகாரி தரம் குறைந்த தளபாடங்களை வினியோகம் செய்துள்ளார் என்பதோடு தனது இச்சைப்படி தான் விரும்பியவர்களுக்கு தளபாடங்கள் வினியோகிக்க அனுமதியையும் வழங்கியுள்ளார் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. இவர் தளபாடம் கொள்வனவு செய்யும் முக்கியமான நிறுவனம் மட்டக்களப்பிலுள்ள ஆஞ்சநேயர் மரக்காலையாகும். இம்மரக்காலை உரிமையாளரான அஞ்சலா சண்முகராஜா என்பவரிடம் இருந்து பெருந்தொகைப்பணம் தேவதீபனுக்கு சன்மானமாக வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது தவிர மட்/கல்வித்திணைக்களத்தின் நேர்மையற்ற போக்கிற்கு இன்னுமொரு எடுத்துக்காட்டு, மட்/ கல்வித்திணைக்களத்தின் வங்கிக்கணக்கில் 9 மில்லியன் ரூபா யார் அனுப்பிய பணம் என்று தெரியாமல் வைப்பில் இடப்பட்டுள்ளது. இதை யார் அனுப்பியது என்பதை அறிந்து கொள்வதிலோ, அல்லது அப்பணத்தை உரிய முறையில் செலவு செய்வதிலோ இதுவரை எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. இவ்வாறான பல நடவடிக்கையையிட்டு கடந்தமாதம் மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரின்ஸ் காசிநாதனால் ஒரு முறைப்பாடு கணக்காய்வாளர் நாயகத்திற்குக் கொடுக்கப்பட்டு, அதன் பேரில் ஒரு கணக்காய்வு அத்தியட்சர் கொழும்பில் இருந்து வந்து கல்வித்திணைக்களத்தின் கணக்குகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

உண்மையில் பிரின்ஸ் காசிநாதர் இதைச் செய்வதானால் அவர் அதிகாரத்தில் இருக்கும் போதே செய்திருக்கலாம். ஆனால் உண்மையான காரணம் தற்போதைய மட்/ கல்வித்திணைக்களத்தின் கல்விப்பணிப்பாளர் எஸ்.எஸ்.மனோகரனும், பிரின்ஸ் காசிநாதரும் உறவினர் என்பதும் அவர்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட குரோதத்தின் காரணமாகவே பிரின்ஸ் காசிநாதன் கணக்காய்வாளர் நாயகத்திடம் தனது முன்னைய செல்வாக்கைப் பாவித்து முறைப்பாடு செய்து கல்வித்திணைக்களத்தின் கணக்குகளைப் பார்வையிட வைத்தார் என்றும் கூறப்படுகின்றது இது ஒரு உள் தகவல். இப்படி நிகழ்வது மாவட்ட மட்டத்தில் என்றால் மாகாண மட்டத்தில் நிலைமை இதைவிட மோசமாக உள்ளது. மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் நாணயக்கார அனைத்திற்குமே லஞ்சம் வாங்கும் பேர்வழி என்றும் இவர் தனது மனைவியினூடாகவே லஞ்சம் வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும் பேசப்படுகிறது. இறுதியில் மனைவி கையும் களவுமாகப் பிடிப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகிறது. நாணயக்கார அமைச்சின் செயலாளராக இருந்த போது மட்டக்களப்பிற்கென மாகாணக்கல்வியமைச்சினால் 15 லட்ச ரூபாய் தளபாடத்திற்கென ஒதுக்கப்பட்டது என்றும் இதை அவர் திருமலையிலுள்ள தனக்குத் தெரிந்த ஒரு மர வியாபாரியிடம் தளபாடங்களை வாங்கி மட்டக்களப்பிற்கு அனுப்பிவிட்டு இரண்டாவது பேருக்கும் தெரியாமல் பல லட்சத்தை அமுக்கிவிட்டார் என்றும் மட்டக்களப்பிற்குத் தளபாடங்கள் வந்து சேர்ந்த போது மட்டக்களப்பு அதிகாரிகளுக்கு தளபாடம் எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது என்பது போன்ற விடயங்கள் கூட அறவே புரியவில்லை என்றும் இறுதியில் திருமலையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போதும் அங்கும் சரியான பதில் கிடைக்கவில்லை என்றும் ஒரு மட்டுநகர் கல்விப்பணிப்பாளரும் வந்தவகையில் இலாபம் எனக் கருதி தளபாடங்களைப் பொறுப்பேற்றுவிட்டார். பின்பு தான் இது நாணயக்காராவின் கைங்கரியம் எனத்தெரியவந்தது. இது தொடர்பாக மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் ''தளபாடங்கள் மட்டக்களப்பில் செய்தாலும் திருமலையில் செய்தாலும் இப்படியான தளபாடங்கள் தான் கிடைத்திருக்கும். பணம் மட்டக்களப்பிற்கு வந்து இங்கிருப்பவர்கள் பங்கிடுவதைவிட்டு, தனியே நாணயக்காரா எடுத்துவிட்டார். இதுதான் வித்தியாசம்'' என்றாீர் அவர்.

-ஏ

## 2 திருப்பி அனுப்பப்படும் அபிவிருத்திப் பணம்!

அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை திருப்பி அரசாங்கத்திற்கு அனுப்புவதில் மற்றெல்லா மாவட்டங்களையும் விட முன்னணியில் நிற்பது மட்டக்களப்பு மாவட்டமே!

ஒவ்வொரு வருடத்திலும் அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் பணத்தின் பலமில்லியன் ரூபாய்கள் திரும்பிச் செல்வதே இம்மாவட்டத்தில் வழக்கமாக இருந்துவருகிறது.

1992ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணத்தில் 28 மில்லியன் ரூபாய்களும், 1993ஆம் ஆண்டில் 25 மில்லியன் ரூபாய்களும், 1994இல் 20 மில்லியன் ரூபாய்களும் இவ்வாறு மீண்டும் அரசாங்கத்துக்கே திருப்பி அனுப்பட்டுள்ளன. ஒவ்வொரு திணைக்களமும் சரியான முறையில் திட்டங்களை தயாரிக்காததும், வருகின்ற பணத்தை எப்படியாவது செலவு செய்து அதில் தங்களுக்குக் கிடைக்கும் கமிசனைப் பெற்றுக் கொள்வதில் அவ்வத்திணைக்களத்தின் அதிகாரிகள் கரிசனையுடன் இருந்ததுமே இவற்றிற்கு காரணம் என்று தெரியவருகிறது.

சிறு நீர்ப்பாசனக்குளங்களைப் புனரமைக்கவென பல மில்லியன் ரூபாய்கள் கமநலச்சேவைகள் நிலையத்திற்குக் கொடுக்கப்பட்டன. அதே சமயம் கடந்த வருடத்தில் இதே நோக்கத்திற்காக ''கெயார்'' நிறுவனமும் ஒவ்வொரு குளத்திற்கும் ரூபாய் 2 லட்சம் செலவு செய்துள்ளது.

ஆனால் உண்மையில் நடைபெற்றவற்றைப் பார்க்கும் போது செலவு செய்யப்பட்ட பணத்திற்குரிய அரைவாசி வேலைகள் கூட நடைபெறவில்லை. ஆனால் வேலைகள் முழுவதும் முடிவடைந்ததாகக்கூறி முழுப்பணமும் பெறப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் செயற்பட்டவர் முன்பு மட்டக்களப்பில் சமாதானச் சேவைகள் உதவி ஆணையாளராக இருந்த கமலநாதன் அவர்களே என்று பேசப்படுகிறது. மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஏ.கே.பத்மநாதனோடும், ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியோடும் முரண்பட்டதையடுத்து தற்போது வவுனியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த கமலநாதன் முன்னைய மட்/அரச அதிபர் மோனகுருசாமியினால் அவருடைய வாரிசாக கமநலச்சேவைகள் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டவர். எல்லாத் திணைக்களங்களும் இராணுவத்தினரால் சுத்திகரிக்கப்பட்ட பகுதி எனக்கருதப்படும் பிரதேசங்களில் தங்கள் செயற்பாடுகளைச் செய்யும் வேளையில் இவர் மட்டும் சுத்திகரிக்கப்படாத பகுதிகள் எனக்கருதப்படும் இடங்களில் தனது திணைக்களத்தின் செயற்பாடுகளைச் செய்தவர். இதற்கு இவர் கூறும் காரணம் அப்பகுதி மக்கள்தான் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுக்குத்தான் உதவி செய்ய வேண்டும் என்பது. இவருடைய இக்கூற்றைப் பலமாக ஆதரித்தவர் முன்னாள் அரச அதிபர் மோனகுருசாமி. உண்மையில் அப்பகுதி மக்கள் தான் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்குத்தான் உதவி செய்யவேண்டும். ஆனால் உண்மையில் அப்பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறி இவர் செய்ததெல்லாம் தன்னை அபிவிருத்தி செய்து கொண்டதே என்று பேசப்படுகிறது.

இவர் முன்னாள் எம்.பி. ஜனா, முன்னாள் அரச அதிபர் மோனகுருசாமி ஆகியோரின் நெருங்கிய உறவினர் என்பதால் ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் இவரை எவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும், தற்போது புதிய அரசாங்கம் வந்தபின் மாற்றம் செய்யப்பட்டு வவுனியாவிற்கு இவர் போக வேண்டியேற்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

-ஏ

## "இதோ புலிகளின் மந்திரி 'சபை"






'திரிசூலே' எனும் சிங்கள வாரப் பத்திரிகையில் மார்ச் 8ம் திகதி இதழின் முன்பக்க தலைப்பே இது.

இத்தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட செய்தியில் ''எமது தேசம் எனக்கூறிக் கொள்ளும் பத்திரிகைகள் கூட இது வரை வெளியிடாத 'வடக்கில் புலிகள் அமைப்பு அமைத்திருக்கிற மந்திரி சபை' பற்றிய செய்தியை இன்று நாங்கள் வெளியிடுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் புதிய மந்திரி சபை அமைத்தாகிவிட்டது தேசிய நிர்வாக, நீதித்துறை அமைச்சர் ரவிடொமினிக், நிதியமைச்சர் தமிழேந்தி,பாதுகாப்பு அமைச்சர் பாலதாஸ், தமிழீழ அரசின் நிறைவேற்று அதிகாரமுடைய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

மத்திய அரசின் அனுமதி கூட இன்றி இப்படி ஒரு மந்திரி சபை வடக்கில் இயங்கிவருகிறது. எங்களது மத்திய அரசாங்கம் இதற்கென்ன சொல்லப் போகிறது.'' எனக் கேள்வி எழுப்பி உள்ளது.

திரிசூலே' பத்திரிகையின் விற்பனை இனவாதத்திலேயே தங்கியுள்ளது என்பதை பலர் அறிவர்-அப்பத்திரிகை சிங்களத்தில் வெளிவரும் இனவாதப் பத்திரிகையில் முன்னணியில் உள்ள ஒரு பத்திரிகை. இனவாதத்தைப் பரப்புவதில் பெரும் பங்கு அதற்கு உண்டு.

கடந்த தேர்தற் காலத்தின் போது மிக மோசமான இனவாதக் கருத்துக்களை தாங்கிய செய்திகளை இப்பத்திரிகை வெளியிட்டிருந்தது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அல்லாமல் 'இவ்வரசாங்கம் தமிழர்களுக்கு அதிகம் வழங்கிவிடப் போகிறது, கவனம்' என்ற தொனியிலேயே இப்பத்திரிகையின் ஆக்கங்கள் இதுவரை வெளிவந்திருக்கின்றன.

## இப்படியும் சில கேள்விக்ள்!

அரசாங்கத்தின் அரசியலமைப்பு தொடர்பான தெரிவுக்குழுவுக்கு யோசனைகளை முன்வைத்த அரசியற் குழுக்கள் பல தற்போது தெரிவுக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கன்றன.

இவ்வாறு யோசனைகளை சமர்ப்பித்த அரசியற் கட்சிகளில் இதுவரை மலையக மக்கள் முன்னணி, புதிய ஜனநாயகக் கட்சி ஆகியன தெரிவுக்குழு முன் சாட்சியமளித்துவிட்டதாகவும் மலையகமக்கள் முன்னணி தனது 24 பக்கங்களைக் கொண்ட சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையொன்றை தெரிவுக்குழு முன் வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது. இந்தத் தெரிவுக் குழுவில் அமைச்சர் தொண்டமான், அமைச்சர் ஜீ.எல் பிரிஸ், ஏ.சீ.எஸ். ஹமீட் ஆகியோரும் அங்கம் வகிப்பது தெரிந்ததே.

மலையக மக்கள் முன்னணியின் சிபார்சுகள் தொடர்பான விசாரணையின் போது தெரிவுக்குழு உறுப்பினர்களில் ஒருவரான ஏ.சி.எஸ் ஹமீது அவர்கள் பிரதிநிதிகளிடம் இவ்வாறு கேட்டார்: ''நீங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல் மலையக மக்கள் ஏனைய இனங்களோடு ஒப்பிடுகையில் தாழ்ந்த வாழ்க்

→15

## புத்தளம் சீமெந்து ஆலை: "அங்கு குடியிருக்கக் கூடாது!"

புத்தளம் சீமெந்து தொழிற்சாலையின் புகைபோக்கியிலிருந்து வெளியாகும் தூசுகளால் அப்பகுதியிலுள்ள மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களது விளை பயிர்கள் உட்பட சகலதும் வெண்தூசுப்படலங்களால் மூடப்பட்டுக் காணப்படுகின்றன. சூழலைப் பாதிப்புறச்செய்யும் இப்புகை மண்டலத்தைக் கட்டுப்படுத்த ஆவன செய்யுமாறு அங்குள்ள மக்கள் புகார் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, இப்புகார் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அப்பிராந்திய பொது சன சுகாதார அதிகாரி இந்த தொழிற்சாலைப் பிரதேசத்தில் மக்கள் குடியிருப்பது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்செய்தியை இலங்கை வானொலியும் ஒலிபரப்பியது.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்தின் 90% பங்குகளைக் கொண்ட முன்னைநாள் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் இந்த தொழிற்சாலை இப்போது ''புத்தளம் சீமெந்து (வரையறுக்கப்பட்ட) கொம்பனி'' என்ற பெயரில் இயங்கி வருகிறது. மிகுதி 10% பங்குகளை தொழிற்சாலை ஊழியர்கள் கொண்டுள்ளனர். பாகிஸ்தானிய தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவம் இந்தப் புகைபோக்கியால் வரும் தூசுகளைக் கட்டுப்படுத்த உரிய நவீன கருவியைப் பயன்படுத்தினால் இம்மாசடைதலில் பெருமளவைத் தவிர்க்க முடியும் என்றும், நிலைமின்னியல் வடிகட்டி (Electro static precipitator) என அழைக்கப்படும் இக்கருவி பாவனையில் இருந்த காங்கேசன்துறை லங்கா சீமெந்து தொழிற்சாலையில் மாசடைதல் பெருமளவு கட்டுப்பாட்டில் இருந்தது என்றும், தூசுகளை பெருமளவுக்கு வடிகட்டும் இக்கருவி மிகவும் விலையுயர்ந்தது என்பதால் இதற்காக முதலிட முகாமைத்துவம் தயாராக இல்லாமல் இருக்கலாம் என்றும் தொழிற்சாலையைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

திறந்த பொருளாதாரக் கொள்கையை 'மனிதாபிமான' முகத்துடன் நடாத்துவதாகக் கூறும் அரசும், அரசின் சூழல் பாதுகாப்பு அமைச்சும் இது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் எனத் தொழிற்சாலையை அண்டி வாழும் புத்தளம் வாசிகள் கோருகின்றனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பூநகரி விவகாரம்:

# மக்கள் புலிகளின் பக்கம் நிற்பது ஏன்?



சென்ற இதழில் இந்தப் பத்தியில் நான் எழுதியிருந்த விடயங்கள் சிலருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இன்னும் சிலருக்கு எரிச்சலையும் கோபத்தையும் மூட்டியிருக்கின்றன. வேறுசிலர் இதுதான் சரி என்று அபிப்பிராயப்பட்டார்கள்.

'என்னதான் இருந்தாலும் புலிகளுக்காக இவ்வளவு வக்காலத்து வாங்கியிருக்கத் தேவையில்லை' என்று ஒரு சிலர் தெரிவித்தார்கள். உண்மையில், புலிகளுக்காக வக்காலத்து வாங்குவதோ, சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களைத் தாக்குவதோ அந்தப் பத்தியின் நோக்கமல்ல. சமாதான முயற்சிகள் இன்று வந்துசேர்ந்துள்ள நெருக்கடியான சூழல் பற்றி, அடுத்ததாக என்ன நடக்கப் போகிறதோ என்பது குறித்த அச்சத்துடன் எழுதப்பட்ட குறிப்புக்கள் அவை.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமரசப் பேச்சுவார்த்தை முயற்சிகள் பூநகரி முகாம் விவகாரத்துடன் எடுத்துள்ள திருப்பம் ஒரு முக்கியமான திருப்பமாகும். பூநகரி முகாம் அகற்றப் படாமல் ஆனையிறவுப் பாதை திறக்கப்படுவதற்காக புலிகள் அரசுடன் ஒத்துப்போவதானால் அது, புலிகள் ஒரு இயக்கம் என்ற ரீதியில் தனது தற்கொலைக்கு தானே ஒத்துப்போவதற்கு சமனானது என்று புலிகள் கருதுகிறார்கள். அந்தவிடயத்தில் எத்தகைய விட்டுக்கொடுப்புக்கும் சாத்தியமில்லை என்பதை அவர்களது உத்தியோக பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' தெளிவாகக் கூறுகிறது.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இந்தமுகாமை அகற்றுவது, புலிகள் நடமாட்டத்திற்கு மேலும் வாய்ப்பளிப்பதாகவே அமையும்; இராணுவரீதியாக அவர்களுடைய பலத்தைப் பெருக்க இது உதவும் என்ற அடிபபடையில், பூநகரி முகாமை அகற்றுவது முட்டாள்தனமானது என்ற அபிப்பிராயமே உள்ளது. 500 மீற்றர் பின்னோக்கி நகர்த்தியதற்கு மேல் எதுவுமே செய்வதற்கில்லை. முகாமை அகற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது அவர்களது அபிப்பிராயம்- ஜனாதிபதியே உறுதியாக இதைத் தெரிவித்துவிட்டார்.

ஆக, சமரச முயற்சிகள் ஒருபோதும் அசைய முடியாத இறுக்க நிலைக்கு வந்துவிட்டன. எனவே அந்த விடயத்தில் மேலும் காய்களை நகர்த்த முயல்வதில் அர்த்தமில்லை என்பதை இருதரப்பாரும் புரிந்து கொண்டு தமது நடவடிக்கைகளை வேறு விதமான அணுகுமுறைக்கு நகர்த்தியுள்ளனர். அதுதான் பிரச்சாரம் அல்லது அம்பலப்படுத்தல். ஒரு தரத்தாரை மறுதரப்பார் அரசியல் ரீதியாக அம்பலப்படுத்துவதில் தமது கவனத்தைக் குவித்துள்ளனர். சமாதானத்தில் உண்மையான அக்கறை யாருக்கு இருக்கின்றது என்று காட்டுவதன் மூலமாக எதிர்த்தரப்பினரை மக்கள் முன் அரசியல் ரீதியில் பலவீனப்படுத்துவதே இந்தத் தந்திரோபாயத்தின் சாராம்சம்.

இந்தப் புதிய போக்கின் தொடர்ச்சி மூன்றாவது ஈழ யுத்தமாகப் போய் விட வாய்ப்புண்டு என்பதை வலியுறுத்துவதே சென்ற பத்தியின் நோக்கமாக இருந்தது. இந்த விடயத்தில் அரசு தனது கடப்பாடுகளை மறந்து விட்டு செயற்படுகிறது என்பதை வலியுறுத்துவதும் அதன் ஒரு அம்சமாக இருந்தது.

எவ்வாறாயினும், இந்த அம்பலப்படுத்தல் விவகாரத்தில் மிகவும் அக்கறையுடன் ஈடுபடத்தொடங்கியது அரசு தரப்பே என்பது எமது கவனிப்பிற்குரிய ஒரு முக்கியமான விடயமாக எடுக்கப்பட்டது.

ஆனால் துரதிர்ஷ்டவசமான விடயம் என்னவென்றால் அரசாங்கம் புலிகளை எந்த மக்கள் முன்னால்- புலிகளின் வார்த்தைகளில் சொன்னால்- 'அரசியல் அனாதைகள்' ஆக்கிவிட முயல்கிறதோ, அந்த மக்களைப்பற்றி புலிகள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தான் இயங்கும் பிரதேசத்திலுள்ள மக்கள் மத்தியில் தனது உறுதியான நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதிலேயே புலிகள் அக்கறையாக இருக்கிறார்கள்.

ஆக, மொத்தத்தில் இது இன்னமும் இரு தேசங்களுக்கிடையிலான நெருடலாகவே வெளிப்படுத்தப்படுகின்றது என்பது தெளிவு.

பொதுத் தேர்தலில் போட்டியில் நின்றபோதும் சரி, பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் குதித்த போதும் சரி இன்றைய அரசாங்கத்தினரின் பிரதான அத்திவாரக் கற்களாக இருந்த விடயங்கள் இவைதான்.

1. நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவருவது. அரசியல் ரீதியாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பது.

2. ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீளக் கொணர்வது.

3. ஊழல்களும் அதிகார துஷ்பிரயோகங்களும் மலிந்த அதிகாரத்தை மாற்றி அமைப்பது.

இந்த அம்சங்கள் தான் ஆட்சியிலிருந்த ஐ.தே.க விலிருந்து பொ.ஜ.ஐ.முவை மக்கள் முன் வேறுபடுத்திக் காட்டியவை. முற்று முழுதாக அனைத்து அரச நிறுவனங்களும் ஆளுங்கட்சியின் கருவிகளாக மாறி மக்கள் நாய்களைவிடக் கேவலமாகக் கையாளப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வேளையில் இந்த ஜனநாயக சுலோகங்கள் மிகவும் ஜனரஞ்சகத் தன்மை மிக்கனவாக, மக்களது ஆதரவை ஈர்ப்பவையாக அமைந்ததில் வியப்பில்லை. அது தேர்தல் முடிவுகளில் வெளிப்படையாகவே தெரிந்தது.

ஆனால், அரசாங்கம் புதிதாக தெரிவு செய்யப்பட்டதும், இந்த ஜனநாயகக் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள பௌத்த சிங்கள பேரினவாத அரச அமைப்பின், திறந்த பொருளாதார அரசியற் கட்டமைவுக்கு குந்தகம் ஏற்படாத விதத்திலேயே இந்த ஜனநாயகக் கோரிக்கைகளை தான் நடைமுறைப்படுத்த முடியும் என்பது விரைவிலேயே அரசுக்கு தெரிந்து போயிற்று.

திறந்த பொருளாதார, பௌத்த சிங்களப் பேரினவாத அரச கட்டமைப்பிற்கு ஜனநாயகத்தன்மையைக் கொண்டுவர முயல்வதில் உள்ள நடைமுறைச் சிக்கலை விரைவிலேயே அரசு எதிர் கொண்டது. தொழிலாளர்களது வேலை நிறுத்தம், தொழிற்சங்க உரிமைகோரும் அவர்களது போராட்டம் என்பவற்றைக் கட்டுப்படுத்தவும், தனது சொந்த தொழிற் துறை அமைச்சரை (அவர் ஒரு தொழிற்சங்கவாதி!) அடக்கி வாசிக்குமாறு உத்தரவிடவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டது. தொழிலதிபர்களைக் கூப்பிட்டுவைத்து அவர்களை தாஜாபண்ணும் விதத்தில் பல விட்டுக்கொடுப்புக்களை செய்ய வேண்டிய தேவை சந்திரிகா அரசுக்கு ஏற்பட்டது. மக்கள் மயமாக்கல் என்ற பெயரில் தொழிற்பட்டு வந்த தனியார் மயமாக்கலை தேர்தலுக்கு முன் எதிர்த்த நடவடிக்கையை-தாமே நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு வந்தது. உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் நெருக்குதலுக்காக, அரசாங்கத்தின் பல மானிய முறைகளை முற்றாக நிறுத்த அல்லது குறைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.
ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவை தொடர்பாக ஆரம்பத்தில் பேசிய பல விடயங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த முடியாமல் போயிற்று. பத்திரிகையாளர்களை விசாரணைக்காக நாலாம் மாடிக்கு கொண்டு செல்வது அரசுக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்பன குறித்து விசாரணைக்கான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ள போதும், அரசுக்குள்ளேயே இவை தலைகாட்டுவதைத் தவிர்க்க முடியவில்லை.
அரசியல் ரீதியாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்ற முயற்சியும் கூட, அதே பௌத்த சிங்கள பேரினவாத அரச இருப்பை பேணியபடியே, அதே அணுகுமுறையுடனேயே எடுக்கப்படுகின்றது. ஜனாதிபதி முறைக்கு பதில், பாராளுமன்ற அதிகார முறை நடைமுறைக்கு கொண்டுவரவுள்ளது போன்ற அரசியல் அமைப்பைத் துறை சீர்திருத்தங்கள் எவையும் இந்த அரச இருப்பினை மாற்றப் போவதில்லை. அரசின் குணாம்சத்தை தெளிவாகவும் உறுதியாகவும் புலப்படுத்தும் ஒரு அரசாங்க வடிவம் ஏது (அது பாராளுமன்ற முறையா ஜனாதிபதி முறையா?) என்பதில்தான் விவாதம் நடைபெற்றதே ஒழிய, அந்த அரசின் ஜனநாயக விரோதமான அடிப்படைகள் குறித்து விவாதங்கள் நடைபெற்றதே இல்லை. அதன் பௌத்த சிங்கள பேரினவாத தன்மையை யாரும் கேள்விக்குள்ளாக்கியதில்லை. மாறாக, அதற்கு ஜனநாயகத் தன்மை நிலவுவதாக காட்டிக் கொள்ள பல்லின பல்மத சடங்குகளும், சில பல்லின பல்மத சார்பு அம்சங்களும் இணைக்கப்பட ஒப்புக்கொள்ளப்பட்டன. இவை ஒருபோதும் அசமத்துவ நிலையை (Inequality) இல்லாமல் செய்யப் போவதில்லை என்பதை ஏற்கனவே இப்பத்தியில் பல முறை சுட்டிக்காட்டியாயிற்று.

எபபடியோ அரசாங்கத்தின் சமாதானம் குறித்த தந்திரோபாயங்கள் இலங்கை அரசின் பௌத்த சிங்களப் பேரினவாத அடிப்படையிலிருந்தே வகுக்கப்பட்டன. இத்தந்திரோபாயங்கள் பின்வரும் அடிப்படையின் மீது கட்டியெழுப்பப்பட்டன.

(1) வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் இன்றைய துர்ப்பாக்கிய நிலை.

(2) அவர்களுக்கும் புலிகளுக்கும் உள்ள முரண்பாடு

(3) சமாதானத்தின் மீது அவர்களுக்குள்ள நாட்டம்

(4) புலிகள் பற்றிய சர்வதேசிய சமூகத்தின் அபிப்பிராயம்.

(5) புதிய அரசாங்கத்தின் ஜனரஞ்சக ஜனநாயக முழக்கங்கள் குறித்த மக்களது ஆதரவு.

இந்த விடயங்கள் ஒவ்வொன்றும் அரசுக்கு சாதகமான அம்சங்களாக இருந்தன. இந்த சாதகமான அம்சங்களின் மீது தனது சமாதான முயற்சிகளைக் கட்டி எழுப்ப முயன்றது. இதன்படி வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவை வென்றெடுப்பது, புலிகளுடன் ஒரு யுத்தத நிறுத்தத்துக்கு உடன் படுவது, நிரந்தர சமாதானத்திற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக ஒரு சித்திரத்தை உருவாக்குவது என்பதும்.
இரண்டாவதாக, இந்த நிரந்தர சமாதானத்திற்கு புலிகள் ஒரு போதும் உடன்படமாட்டார்கள், உடன்படுவது அவர்கள் இயல்பல்ல என்பதால் அவர்களை அம்பலப்படுத்துவது, மக்கள் மத்தியில் உருவாகியிருக்கும் அரசாங்கத்தின் நற்பெயரின் பேரால் அவர்களை மக்கள் ஆதரவற்றவர்களாக்கி விடுவ்து என்பது. இதில், புலிகள் நிரந்தர சமாதானத்திற்கு தயார் என்று பெயருக்கேனும் ஒப்புக் கொள்வார்களானால், அதை எப்படிக் கையாள்வது என்ற உபபிரிவும் இருக்கின்றது. இதன்படி அவர்களது நடவடிக்கைகள் சமாதானத்திற்கு உண்மையான விருப்புடன் செய்யப்படுபவை அல்ல என்று காட்டுவது.

மூன்றாவது, இவ்வாறான அந்நிப்படுத்தலை மேற்கொள்வதில் வெற்றி பெறும் பட்சத்தில் அடுத்ததாக உள்ளது புலிகள் என்ற கெரில்லாக் குழுவை தனியாகக் கையாள்வது. அதே வேளை தமிழ் மக்களது அரசியல் உரிமைகள் பற்றிய விவகாரத்தைக்தனியாகக்கையாள்வது-கைவிடுவது.
இந்த அணுகுமுறையுடன் அரசாங்கம் பேசத்தொடங்கிய போதும் அது எதிர்பார்த்தபடி ஒவ்வொரு விடயங்களும் நகரவில்லை. பொருளாதாரத் தடைநீக்கம், யுத்த தவிர்ப்பு, புனர் நிர்மாணம் போன்ற ஒவ்வொரு விடயங்களின் போதும் புலிகளது அணுகுமுறை, அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கியது. எனவே, புலிகளை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்துவதில் இறங்குவது அரசுக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகப் போயிற்று. அதன் வெளிப்பாடே இன்றைய அறிக்கைப் போர்ப்பிரகடனங்கள். புலிகளை சமாதானத்திற்கு தயாரற்றவர்கள், படைதிரட்டுகிறார்கள் என்று அம்பலப்படுத்தும் அதே வேளை தன்பங்குக்கு தனது படைப்பலத்தை பெருக்கிக் கொண்டு வரத்தான் செய்கிறது. அரசு படைப்பலத்தைப் பெருக்குவதும், யுத்தத்திற்கு தயாராக இருப்பதும் அவசியம்; ஏனென்றால் புலிகளை ஒரு போதும் நம்பமுடியாது என்பது அரசுதரப்பினதும் பத்திரிகையாளர்களினதும் வாதம். புலிகளைப் பற்றி கடந்த 20 ஆண்டு கால வரலாறு தமக்கு இவ்வாறு செய்வது அவசியம் என்று காட்டுவதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வேடிக்கை என்னவென்றால், புலிகளுக்கு 20 ஆண்டு வரலாறு இருக்கிறது என்றால், சிங்களப் பேரினவாத அரசாங்கத்திற்கு அரைநூற்றாண்டுகட்கு மேலாக தமிழ் மக்களை ஏமாற்றிய வரலாறு உண்டு என்பதை சிலர் மறந்து விடுகிறார்கள். எனவே அவர்கள் பங்கர் கட்டுவதும், படைதிரட்டுவதும் ஆச்சரியப்படத்தக்க விடயமல்லவே.

வடக்கு கிழக்கு .தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மறுதலிப்பது சிங்களப் பேரினவாத இருப்புக்கு அவசியமானது அல்லது, சிறுபான்மை இனங்களின் உரிமைகள் வழங்கப்படுவது சிங்கள பேரினவாத இருப்புக்கு எதிரானது என்பது அரசுக்கு வெளிப்படையாகவே தெரியும். இதனால் தான் ஜனாதிபதி தனது பதவியேற்ற பேச்சிலும் 'மற்றைய இனங்கள்' பற்றிய பேச்சின் போது திரும்பவும் தான் சிங்களமக்களின் ஜனாதிபதியே என்று உறுதிப்படுத்தியிருந்தார்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பிரச்சினை அல்ல இது; தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான பிரச்சினை இது. புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்துவதற்காக அரசு செய்கின்ற முயற்சிகளில், தமிழ் மக்களின் மீதான அக்கறையை விட சிங்களப் பேரினவாதத்தை காப்பாற்றுவதிலேயே அதிக நாட்டம் இருக்கிறது. எனவே இந்தக் கட்டத்தில் ஒருவர் அரசை விமர்சிப்பது, புலிகள் எடுத்துள்ள முடிவை ஆதரிப்பது என்பவற்றை புலிகளுக்கு முற்றுமுழுதாக வக்காலத்து வாங்குவதாகக் கொள்ளமுடியாது. தவிரவும் இந்த விடயங்களில் புலிகள் சரியாக இருக்கும் வரை அவர்களுக்கு யாரும் வக்காலத்து வாங்கத் தேவையில்லை. அந்த முடிவுகளே வக்காலத்து வாங்கப் போதுமானவை!

புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்தி விட்டால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளை உடைப்பில் போட்டுவிடுவது ஒன்றும் கஷ்டமல்ல என்பது அரசுக்கு தெளிவாகத் தெரியும். இது புலிகளுக்கு மட்டுமல்ல, வடக்கு கிழக்கு மக்களுக்கும் கூடத் தெரியும். இதனால்தான் பூநகரி முகாம் விவகாரத்தில் குறிப்பாக வடக்கு மக்களின் நிலைப்பாடு புலிகள் பக்கமாக இருக்கிறது.

**நாசமறுப்பான்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகள் எதிர்காலம் என்ன?



கடந்த 10-03-95 அன்று இலங்கையிலுள்ள அனைத்து இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களும் பரவலான மறியல் போராட்டமொன்றினை நடத்தினர். தேசிய பல்கலைக்கழகத்துக்கு சமதையான பட்ட அந்தஸ்த்துக் கோரியும், இன்னும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் முன்னய அரசிடமும், தற்போதய அரசிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தனர். தற்போதய அரசு இவர்களுடைய வேண்டுகோளை ஏற்று மூவர் அடங்கிய ஆணைக்குழுவொன்றையும் இக்கல்லூரிகள் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக நியமித்தது. அறிக்கை சமர்ப்பிப்பதற்கான குறித்த காலக்கெடு முடிவடைந் தும் எதுவித அறிக்கையும் சமர்ப்பிக்கப்படாதமையை முன்வைத்தே இம்மறியல் போராட்டத்தில் மாணவர்கள் இறங்கியுள்ளனர். நாட்டின் முக்கிய நகரங்களில் இப்போராட்டம் நடந்துள்ளமை அவதானத்திற்குரியதொன்றாகும். இக்கல்லூரிகள் தொடர்பான சில தகவல்களை இங்கே தருகின்றோம்.

கடந்த ஐ.தே.கட்சியின் அரசாங்கத்தினால் மாகாணங்கள் தோறும் ''இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரிகள்'' உருவாக்கப்பட்டன. முன்னாள் கல்வியமைச்சராக இருந்த லலித் அதுலத் முதலியின் சிந்தனையின் விளைவாக 1992ஆம் ஆண்டு பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் இப்பல்கலைக்கழகக் கல்லூரிகள் செயற்பட ஆரம்பித்தன. உண்மையில் இப்பல்கலைக்கழகங்கள் குறுகிய அரசியல் லாபங்களுககாகவே உருவாக்கப்பட்டன என்பது அது தொடர்பான இன்றுவரையான நிலவரங்களிலிருந்து புரிந்து கொள்ள முடியுமாயிருக்கிறது.

தேசிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்ததான ''பிரதேச பல்கலைக்கழகங்கள்'' என்ற கருத்தோட்டமே இப்பல்கலைக்கழகங்களது ஆரம்ப நோக்கமாக இருந்தது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்று பல்கலைக்கழக அனுமதி பெறாத மாணவர்களே இப்பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பல்கலைக்கழக ஆணைக்குழுவே (University Grant Commission) இதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பிட்ட மாகாணங்களைச் சேர்ந்தவர்களது நலன் கருதி ''பிரதேச பல்கலைக்கழகங்களாகக் கணிக்கப்பட்ட இவ் இணைந்த பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் வெளிமாகாண மாணவர்கள் பெரும்பான்மையாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

டிப்ளோமா சான்றிதழுக்கான இரண்டு வருட பாடநெறி, வெவ்வேறு துறைகளில் கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலம், விவசாயம், வர்த்தகமுகாமைத்துவம், சுற்றுலாத்துறை முகாமைத்துவம் என்பவை பிரதான பாடநெறிகளாகும். ஒவ்வொரு இணைந்த பல்கலைக்கழகமும் வெவ்வேறான துறைகளைக் கொண்டிருப்பதும் குறிப்பிட வேண்டியதாகும். உதாரணமாக திருமலை இணைந்த பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமும், வர்த்தக முகாமைத்துவமுமே பாட நெறிகளாகவுள்ளன. ஊவா மாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆங்கிலமும், விவசாயமுமே உள்ளன. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தர விஞ்ஞானப்பிரிவில் கற்றுத் தகுதி பெற்ற மாணவர் விவசாயப் பாடநெறியை மேற்கொள்ள வேண்டுமாயின் அவர் ஊவா மாகாணக் கல்லூரிக்கே செல்ல வேண்டும். இவ்வாறான சில செயற்பாடுகளால் 'பிரதேச பல்கலைக்கழகங்கள்' என்ற கருத்தோட்டம் செயலிழக்க ஆரம்பித்தது.

இங்கு கல்வி கற்க அனுமதி பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியாக மாதாந்தம் 1200/= வழங்கப்படுகிறது. இவர்களுக்குத் தேவையான விடுதி வசதிகள் உட்படவுள்ள ஏனைய வசதிகள் எதுவும் செய்யப்படாத நிலையில் அவ்வப் பிரதேச வீடுகளில் வாடகைக்குத் தங்கியிருந்து கல்வி மேற்கொள்கின்றனர். இப்பல்கலைக்கழகக் கல்லூரிகள் இயங்கும் இடங்களும் போதிய வசதியற்றதாக உள்ளமையும் மிக முக்கிய குறைபாடாகும். திருமலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் செயற்படுகிறது. அவரின் படுக்கையறை வகுப்பறையாகவும், சமையலறை நூலகமாகவும் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோன்றே வவுனியா இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ராஜமனோகரி புலேந்திரனின் வீட்டில் இயங்குகிறது. ஊவா மாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஒரு கிழங்குப் பண்ணையிலும் , சப்ரகமுவ மாகாண இணைந்த கல்லூரி 'சமனல' திட்டத்தில் கட்டப்பட்ட சிறிய கட்டிடங்களிலும் இயங்கிவருவது இப்பல்கலைக்கழகங்களின் இடப்பற்றாக்குறையைக் காட்டுவதற்கான தக்கசான்றுகளாகும்.

சம்மாந்துறையில் அமைந்துள்ள இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது அப்பிரதேச தொழிநுட்பக் கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. அக்கல்லூரி நிர்வாகம் கட்டிடத்தினை தற்போது காலக்கெடு விதித்து மீளக்கோரியுள்ளதால் பிரச்சினை எழுந்துள்ளது. தமக்கு ஒரு கட்டிடத்தை பெற்றுத்தருமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் குதித்துள்ள மாணவர்கள் நெற்களஞ்சியசாலையை ஆக்கிரமித்துள்ளார்கள் என்பதை பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன என்பதும் இங்கு குறித்துக் காட்ட வேண்டியதொன்றாகும்.

தென்மாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி நியாகம, கம்புறுப்பிட்டிய ஆகிய இரண்டு இடங்களில் செயற்பட்டுவந்தது. அப்பிரதேச ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் தமது பிரதேசமான 'நியாகம'யில் தனக்குச் சொந்தமான இடத்தில்தான் இப்பல்கலைக்கழகக் கல்லூரி செயற்பட வேண்டுமென்று பிடிவாதம் பிடித்ததினால் இப்பல்கலைக்கழக மாணவர்கள் நிறையப் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். தற்போதைய அரசு பதவியேற்றதன் பின்னர்தான் குறித்த ஓர் இடத்தில் (கம்புறுபிட்டிய) இக்கல்லூரி இயங்குவது விஷேடமாக சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

இதுவரை உருவாக்கப்பட்டுள்ள பதினொரு பல்கலைக்கழகக் கல்லூரிகளில் எந்தவொன்றுக்கும் சொந்தமான கட்டிடங்கள் எதுவும் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

இப்பல்கலைக்கழகக் கல்லூரிகளினது பாடநெறிகள் யாவும் தொழில் சார்ந்த பாட நெறிகளாகவே (Job Oriented Course) உள்ளன. தேசிய பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படாத தொழில் சார் பாடங்களே கற்பிக்கப்பட்டு அத்துறைகளில் நிலவும் தொழிலாளர் பற்றாக்குறையை நீக்குவதும் இதன் நோக்கமாக இருந்தது. எனினும், இன்றுவரை பாடநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்கள் எவரும் தொழில் வாய்ப்புப் பெறவில்லை என்பதும் கவனத்திற்குரியது. அத்துடன் இவர்களுக்கு வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழும் தொழில் அனுமதி சான்றிதழாக இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. தேசிய பல்கலைக்கழகங்களில் கூட கற்பிக்கப்படாத கணணித்துறை சார்ந்ததும், இலங்கைக் கற்கைநெறிகள் சார்ந்ததுமான பாடங்கள் இக்கல்லூரி மாணவர்களுக்கென்று விஷேடமாகக் கற்பிக்கப்படுகின்றதும் குறிப்பிட வேண்டியதாகும். இருந்தும் இக்கல்லூரி மாணவர்கள் அங்கீகாரம் பெறாத ஒரு துறையினராகவும் எதிர்காலத்தை திராணியுடன் எதிர்கொள்ள முடியாதவர்களுமாகவே தற்போது உருவாகிவருகின்றனர். இவர்களுக்கென்ற எந்தவொரு ஆக்கபூர்வமான தீர்மானங்களோ திட்டக்கொள்கைகளோ முன்வைக்கப்படாததே இப்போதுள்ள முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளை முன்வைத்தும் ஏனைய வசதிகளைக் கோரியும், பல்கலைக்கழக பட்ட அந்தஸ்து வேண்டியும் நாட்டிலுள்ள அனைத்து இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்கள் தற்போது போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இப்பல்கலைக்கழகக் கல்லூரிகளின் எதிர்காலம் குறித்த அறிக்கையினை வெளியிடுவதற்காக தற்போதைய அரசாங்கம் மூவர் அடங்கிய ஆணைக்குழுவொன்றை நியமித்தது. அது பற்றிய அறிக்கையினை சமர்ப்பிக்க இரு மாத கால அவகாசம் கொடுத்தும் எதுவித முடிவும் தெரிவிக்கப்படாததால் இக்கல்லூரி மாணவர்கள் மறியல் போராட்டம் நடத்தியும், பரீட்சைகளைப் பகிஷ்கரித்தும் தங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றனர்.


## எமது எதிர்காலம்?


*கடந்த அரசினால் இலங்கையில் 11 பல்கலைக்கழ கல்லூரிகள் உருவாக்கப்பட்டு அவைகள் அனைத்தும் ஒவ்வொரு தேசிய பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டன. திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகக்கல்லூரி கிழக்கு பல்கலைக்கழத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளில் தேசிய பல்கலைக்கழகங்களில் பாடநெறிகளை பின்பற்றுவதற்கு ஒரு சில புள்ளிகளினால் அனுமதி இழந்த மாணவர்களே டிப்ளோமா பாட நெறிகளை பயின்று வருகின்றனர்.*

*எமது அனைத்து இணைந்த பல்கலைக்கழக சம்மேளத்தினூடாக முன்னைய அரசுடனும் தற்போதைய அரசுடனும் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் எவ்வித தீர்க்கமான முடிவுகளையும் பெறமுடியவில்லை. இதனால் மனம் உடைந்த மாணவர்கள் பலவகையான போராட்டங்களை நடாத்தி வந்தோம். இறுதியாக தற்போதைய அரசாங்கம் மூவர் அடங்கிய ஆணைக்குழுவினை நியமித்து இணைந்த பல்கலைக்கழகத்தினுடைய எதிர்காலம் பற்றிய அறிக்கையினை இரண்டு மாதகாலத்தினுள் சமர்ப்பிக்கும்படி வேண்டுகோள் விடுத்தது, ஆனால் இக்காலக்கேடு முடிவடைந்தும் இதுவரை எவ்வித அறிக்கையும் ஆணைக்குழுவிடமிருந்து வெளியிடப்படவில்லை. எனவே இவ்ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கும் வரை அனைத்து இணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வித பரீட்சைக்கும் தோற்றுவதில்லை என முடிவு செய்துள்ளதோடு முதல் நடவடிக்கையாக இலங்கையிலுள்ள அனைத்து நகரங்களிலும் இணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் 1 மணித்தியால மறியல் மறியல் போராட்டமொன்றைநடாத்துகின்றனர்.*

*எனவே உங்களது பிள்ளைகளாகிய எங்களது எதிர்காலம் சுபீட்சமாகவும் உறுதியானதாகவும் திகழ எமது இப்போராட்டத்திற்கும் தொடரவிருக்கும் போராட்டத்திற்கும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*– மாணவர்கள்*
*இ.ப.க.ஒ*




**படங்களும் கட்டுரையும் : எம்.கே.எம்.ஷகீப்**

| மாகாணம் | அமைந்துள்ள இடம் |
|---|---|
| ★வடக்கு - கிழக்கு மாகாணம் | திருகோணமலை, சம்மாந்துறை,வவுனியா |
| ★மேல் மாகாணம் | மருதானை தொழில் நுட்பக் கல்லூரி |
| ★ ஊவா மாகாணம் | புத்தள,பொரலந்த |
| ★ சப்ரகமுவ மாகாணம் | பொலஹறில் ஒய |
| ★ மத்திய மாகாணம் | பொல்கல்ல |
| ★ தென் மாகாணம் | கம்புறுப்பிட்டிய |
| ★ வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் |
| ★ வடமேல் மாகாணம் | மாக்ந்துற - கோணவில |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் மக்களும் ஒரு சில சிந்தனைகளும் மலையக மக்களும்



வ.ஐ.ச.ஜெயபாலன்

95, மார்ச், 14ந் திகதிய வீரகேசரி முன்பக்கச் செய்தியில் மலையக மக்களும் ஏனைய சமூகங்களின் வழியை பின்பற்றி அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பெற்றுத் திகழ வேண்டும் என முன்னைநாள் அமைச்சரும் தற்போதைய ஐ.தே.க தவிசாளருமான ஏ.சி.எஸ் ஹமீது அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார். அவருடைய உரையில் முஸ்லீம் மக்கள் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பெற்றுள்ளனர் எம்மைப் பின்பற்றி மலையக மக்களான நீங்களும் சகல உரிமைகளையும் பெற்று திகழுங்கள் என்கிற தொனிப்பு துருத்திக் கொண்டு நிற்கின்றது. இது ஒரு 'பச்சை' பொய்யாக இருக்காமல், கொஞ்சமேனும் உண்மை கலந்த பொய்யாக இருந்திருந்தால் மகிழ்ந்திருக்கலாம். முஸ்லீம் மக்களது அரசியல் வரலாறு பச்சைப் பொய், நீலப்பொய்களால் மட்டுமல்ல பல வர்ணப் பொய்களாலும் சோடிக்கப்பட்ட ஒரு சோகமாக மாறிவிட்டதே என்று எண்ணுகிற போது கவலையாக இருக்கிறது.

அதே பத்திரிகையின் ஆறாவது பக்கத்தில் ''வடபகுதி முஸ்லீம் மக்களின் துயர் துடைக்க நடவடிக்கை எடுங்கள்'' என பிரதி அமைச்சர் அபூபக்கர் அகதிகள் புனர்வாழ்வு புனரமைப்புக்கு பொறுப்பான அமைச்சர் எம்.எச்.எம் அஸ்ரஃப் பிடம் மன்றாடுகிறார்

நல்ல வேடிக்கை இது! ''1990 ஆம் ஆண்டு வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட 75 ஆயிரம் முஸ்லீம்கள் 261 முகாம்களில் அடிமை வாழ்க்கை வாழ்கின்றனர்'' என்று குறிப்பிட்ட விஞ்ஞான தொழில்நுட்ப பிரதி அமைச்சர் அபூபக்கர் இந்த அகதிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போய் விட்டால் நான் பதவி துறந்துவிட்டு வடபகுதி அகதிகளுடன் சேர்ந்து போராடுவேன் எனவும் கொதிப்புடன் குறிப்பிட்டிருக்கிறார்.

இது ஒரு வகையில் திகைப்பை உண்டாக்குகிறது மறுபுறத்தில் பிரதி அமைச்சர் அபூபக்கர் கூட அகதிகள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரான எம்.எச்.எம் அஸ்ரஃப் அவர்களது கடைக்கண் பார்வையை வட பகுதி முஸ்லீம் அகதிகள் பக்கம் திருப்புகிற ஒரு உட்கட்சிப் போராட்டத்தில் தோற்றுப் போய்விட்டாரா, அதனால் தான் நாடாளுமன்றத்தில் வெடித்தாரா என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை. அபூபக்கர் அவர்களே, தங்களது விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு பயிற்சி நெறிகள் வடிவிலாவது வடபகுதி அகதிகளது கண்ணீரைத் துடைக்க எந்தளவு முனைந்திருக்கிறது என்பது பற்றியும் அறியத்தாருங்கள், எனினும் தாங்கள் துணிச்சலாக சம்பந்தப்பட்ட முஸ்லீம்கள் தொடர்பாக குரலாவது கொடுத்தமைக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இதே சமயம் யாழ்ப்பாணம் முஸ்லீம் அகதிகளது கண்ணீரும் இரத்தமும் தோய்ந்த வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் இலியாஸ் அவர்கள் அண்மையில் பாராளுமன்றத்தில் பலதார மணம் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என ஓங்கிக் குரல் கொடுத்திருக்கிறார். பலதார மணம், தான் பிரதிநிதித்துவப் படுத்தும் யாழ்ப்பாணத்து முஸ்லீம் அகதிகளது பிரச்சினைகளை அவர்களது அடிமை குடிமை நிலையை எவ்வாறு போக்கும் என்பதை (பற்றி) அவர் (ஒன்றும்) குறிப்பிடவில்லை. நானறிந்த வகையில் டாக்டர் இலியாஸ் அவர்கள் முஸ்லீம் அகதிகள் புத்தளம் வந்திறங்கிய வேளையில் உணர்வு பூர்வமாக அவர்களை வரவேற்று குடியமர உதவியிருக்கிறார். அதற்கு மேல் அவருக்கும் யாழ்ப்பாணத்து முஸ்லீம் அகதிகளுக்கும் ஏதும் சம்பந்தம் இருக்கிறதாகத் தெரியவில்லை.

டாக்டர் இலியாஸ் அவர்களை நான் 1984ம் ஆண்டு சந்தித்த போது ஒரு உண்மையான முஸ்லீமை சந்தித்ததாக எண்ணி மிகவும் மனம் மகிழ்ந்தேன். புத்தளம், கற்பிட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் வில்பத்தையும் உள்ளடக்கிய புதிய முஸ்லீம் மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி 1983ல் நான் எழுதியதை அவரும் வாசித்தார். அத்தகைய ஒரு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற கருத்தையும் அவர் அப்போது கொண்டிருந்தார். ஒரு சிறந்த போராளியாகவே நான் அன்று அவரைப் பார்த்தேன். இன்று யாழ் அகதிகள் மட்டுமல்ல, புத்தளம் மாவட்டம் வடக்கு, தெற்காக பிரிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றிக்கூட அவர் வாய்திறக்கவில்லை. 1981ம் ஆண்டு முஸ்லீம் மக்களது எதிர்காலம்பற்றிய கதைகள் நிறைந்த ஒரு ஆதர்ச புருஷராக எம்.எச்.எம் அஸ்ரஃப் அவர்களை கல்முனையில் சந்தித்தேன். இன்று அவரது கட்சிப் பிரதிஅமைச்சர் ஒருவரே அவரது அமைச்சின் சேவையை தயவுடன் பாவப்பட்ட வடபகுதி முஸ்லீம் மக்களுக்கு விஸ்தரியுங்கள் என்று மன்றாட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

முஸ்லீம் மக்களது பிரதிநிதித்துவமும் அரசியல் தலைமையும் உண்மையில் முஸ்லீம் எதிர்கால சந்ததியினருக்கே சொந்தமானது. உண்மையில் இன்றுள்ள தலைவர்கள் மேற்படி பிரதிநிதித்துவத்தையும் தலைமையையும் தமது எதிர்கால சந்ததியினரிடம் இருந்தே கடனாகப் பெற்றுள்ளனர். அதனைப் பிறருக்கு கையளிக்கின்ற உரிமை யாருக்கும் உள்ளதாக நான் நினைக்கவில்லை. இந்தவகையில் முஸ்லீம் மக்களுக்கு கிடைத்த ஒரு பிரதிநிதித்துவம் முஸ்லீம் மக்களது நலனுடன் முரண்பட்டிருந்த ஒரு அமைப்பை சேர்ந்த முஸ்லீம் அல்லாத ஒருவருக்கு கொடுக்கப்பட்டிருப்பதையிட்டு பல முஸ்லீம் இளைஞர்கள் கொதிப்படைந்திருப்பது நியாயமானதுதான்.

அஸ்ரஃப் அவர்கள் இதுபற்றி

→15

# முஸ்லிம்களது மீள் குடியேற்றம் தொடர்பாக புலிகள் திட்டவட்டமான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்!



ஆர்.எம்.இம்தியாஸ்

சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தமிழ்த் தேசியவாதப் போராட்டம் சந்தேகங்களுக்கு அப்பால் மிக நியாயமான விடயமாகவே கவனிக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்டதொரு தேசிய இனம் பண்பியல் ரீதியாக பெரிதளவான போக்கை வெளிப்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டு இன்னொரு தேசிய இனத்தை தகர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது தர்க்க ரீதியில் கண்டிக்கப்படவேண்டியதும், எதிர்க்கப்படவேண்டியதுமாகும். ஆயின் அவ்வாறு அடக்கப்படும் தேசிய இனம் சகோதர தேசிய இன அல்லது சிறு இனத்துவக்குழுக்களை தன் நலன்களுக்காக பாவிக்க முயலும், இந்த நலன் சாத்தியமாகாது விடின் பலாத்காரத்தை பிரயோகிப்பதும் சரியான நடவடிக்கை என்று யாரும் நியாயம் கூறமுடியாது.

இத்தகைய போக்கின் பின்புலமாகவே இலங்கையில் தமிழர் இன முரண்பாடுகளை நோக்குவது அவசியமானதாகும். தமிழ் தேசியவாதம் தேவையானதும், அவசியமானதும் என்பதற்கு அப்பால் அதன் குறுகிய நலன் அதன் வெறித்தன்மையைக் காட்டுவதுடன் தமிழ்த் தேசியவாதம் இனவெறி அடிப்படையான பண்புகளைச் சுமந்து செல்வதற்கு உதவியுள்ளதனை அறியக்கூடியதாக உள்ளது.

சிங்களப் பேரினவாதம் எவ்வகையான மிருகமுகத்தை அணிந்து செயற்பட்டு வந்தாலும் 24 மணித்தியாலத்திற்குள் தமிழர்களை விரட்டியடித்த வீர சம்பவங்கள் நடைபெறவில்லை. தமிழ்த் தேசியவாதம் அதன் பாதையிலே இச்சாதனையை முஸ்லீம்களுக்கு எதிராய் நடத்தியதனை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இதனை ஒரு தமிழ்த் தேசியவாத இயக்கத்தின் பிழையென்றும், இது தமிழ்த் தேசியவாதத்தின் கோளாறு அல்ல என்றும் கூறமுனைந்தால் இத்தகைய முயற்சி சண்டித்தனமிக்க நியாயப்படுத்தலாகவே அமையும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அண்மைக்காலப் பேச்சுவார்த்தை முயற்சிகள் வெகுஉற்சாகமான ஆர்வத்தைப் பெற்றுள்ளது.

தமிழ்ப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் தமிழ்ப்புலிகளது பங்கு பற்றுதல் எவ்வகையாலும் அந்நியமாக்க முடியாத விடயமாகும். நம்மில் சிலருக்கு இதை ஜீரணிக்க முடியாவிட்டாலும் உண்மை அதுதான். அவ்வாறாயின் தமிழ் புலிகளை திருப்திப்படுத்துவது தவிர்க்கமுடியாதது. ஆயின் தமிழ் மக்களின் அபிலாசைகளை நியாயமான அளவு தீர்த்துவைக்கும் நிர்வாகக் கட்டமைப்புக்களை தீர்வுக்காய் முன் வைப்பது முன்நிபந்தனையாகும். இத்தகைய சூழலில் முஸ்லிம்கள் தொடர்பான நிலைப்பாடு முக்கியமானதாகும்.

அண்மைய சரிநிகர் பத்திரிகையில் ஜெயபாலன் கூறியது போல் முஸ்லீம்களுக்கான தீர்வுகளை புலிகள் முன்வைப்பது முக்கியமானதாகும். புலிகளுக்கு இத்தகைய வரலாற்றுத் தேவையும் உள்ளதாக நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

முஸ்லீம்களது அபிலாசைகள் இனப்பிரச்சினைத்தீர்வில் கட்டாயமானதாகும். இதனை யாவரும் ஏற்றுக்கொள்வர். முஸ்லீம்களுக்கான நிர்வாக அலகின் தேவைப்பற்றி தமிழ்ப்புலிகள் இன்றுவரை வாய்திறக்காது மௌனியாக உள்ளனர். இது உண்மையில் கவலையான நிகழ்வாகும்.

தமிழ்ப் புலிகளில் சிலமாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக செல்வாக்கு மிக்க தனி நபர்கள் நியாயம் கூறுகிறார்கள். ஆனால் முஸ்லீம்கள் தொடர்பாக அவர்கள் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம்களை விரட்டியது தொடர்பாக அவர்கள் ''வருத்தம்'' தெரிவிப்பதும் மீண்டும் குடியேறுவதற்கு ''சமாதான சமிக்ஞைகள்'' வெளிப்படுத்தியதும் மாத்திரம் முஸ்லீம்களது நிலைப்பாட்டில் அவர்கள் மனம் திறந்து செயற்படுகின்றார்கள் என்பதனை வெளிப்படுத்தியதாக ஏற்றுக் கொள்ள முடியாது. மீள்குடியேற்றம் தொடர்பாக திட்டவட்டமான புலிகளது நிலைப்பாடு இன்னும் வெளியிடப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. முஸ்லீம்களுக்கான நிர்வாக அலகு என்பது அடிப்படைக் கோரிக்கையாகும். இத்தகைய கோரிக்கையில் சோரம் போயுள்ள முஸ்லிம் காங்கிரஸ் வசதியாக குந்தியிருப்பது வேறுவிடயம். ஆயின் முஸ்லீம்களுக்கான தனிநிர்வாக அலகுக்கோரிக்கை முஸ்லிம் காங்கிரசினதோ அதன் பரிஞ்த்த் தலைவர் அஷ்ரஃப்பினதோ அல்ல என்பதனையும் நாம் தெளிவாய் விளங்கிக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் நிர்வாக அலகு தொடர்பாக சந்திரிகா அரசும் இன்றுவரை சாதகமாக பரீட்சித்ததாகவில்லை; முஸ்லிம் காங்கிரசும் அழுத்தம் கொடுத்ததாகவில்லை. எவ்வாறாயினும் தமிழ்ப் புலிகளும் இவ்விடயத்தில் அக்கறையற்று இருப்பது விவேகமானதல்ல. தம்மால் இழைக்கப்பட்ட அரசியல் சுதந்திரத்திற்குரிய விலையினை இவர்கள் வழங்குவது எதிர்கால இன ஒற்றுமைக்கு தெளிவான பாலமாகவே அமையும்.

முஸ்லிம்களுக்கான உத்தேச நிர்வாக அலகினை முன்வைப்பதுடன் புலிகளது தடுப்பு முகாமில் மிக நீண்டகாலமாக அவஸ்தைப்படும் முஸ்லிம்களை உடனடியாக விடுதலை செய்வது சிறப்பான நல்லெண்ண நடவடிக்கையாகவே அமையும். இவர்களின் விடுதலையினை முஸ்லிகள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இதனை புலிகள் தாமதமதப்படுத்துவதற்குரிய காரணங்கள் தடைகளை ஏற்படுத்தும் என நம்புவது சாத்தியமற்றது. ஆதலால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்களை விடுதலை செய்வது மிக தெளிவான நல்லெண்ண நிகழ்வாகவே அமையும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் வன்செயல்களால் முஸ்லிம் பகுதிகள் கணிசமானளவு பாதிப்படைந்துள்ளன. இவற்றை தம் தேர்தல் கண்காட்சியாக வைத்தே முஸ்லிம் காங்கிரஸ் வாக்கு வேட்டையில் ஈடுபட்டது. இத்தகைய பாதிப்படைந்த இடங்கள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கவலையின்றி செயல்படுகின்றது, ஆயின் இத்தகைய இடங்களில் புனருத்தாரண நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் புலிகள் தொடர்பான பயத்தை நீக்குவதற்கு உதவும்.

தமிழ்ப் புலிகள் முஸ்லிம்கள் தொடர்பாக ஆற்ற வேண்டிய கடமைகள் அதிகமாகவுள்ளன. சிதைந்து சென்றுள்ள தமிழ் முஸ்லிம் உறவுக்கு இரு தரப்பு இனவாத சந்தர்ப்பவாத சக்திகளும் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முஸ்லிம் காங்கிரசின் பொறுப்புமிக்க சிலர் இவ்வாறான இனவன் செயல்களைத் தூண்டியதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. இத்தகைய சந்தர்ப்பவாத தலைவர்கள் எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் இருந்து ஓரம்கட்டப்படவேண்டுமாயின் முஸ்லிகள் தொடர்பாக புலிகள் அறிக்கை மூலமாக அன்றி நடைமுறையில் பகிரங்கமாக செயல்பட வேண்டும்.

வடபகுதி முஸ்லிம்கள் தமிழ் புலிகளுடன் கூடிய பட்ச நெருக்கத்தை பேணி வந்ததனை புலிகளது உயர் பீடம் அறியாததல்ல. இராணுவத்துக்கு உளவு கொடுப்பதாக காரணம் காட்டி முஸ்லிம்கள் தமது இனத்தவர்கள் சிலரையே புலிகளிடம் ஒப்படைத்து மரண தண்டனையை ஆதரித்துள்ளனர். இவ்வாறு அந்நியோன்னியமாக இருந்த வடபகுதி முஸ்லிம்கள் 24 மணித்தியாலத்துக்குள் விரட்டியடிக்கப்படுவது தமிழ்த்தேசியவாதத்தின் தெளிவான பிற்போக்கு பாத்திரத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

ஒரு போராட்டத்தில் பிழைகள் நடப்பது ஒன்றும் புதுமையான தல்ல. ஆயின் அவ்வாறான பிழைகளை சுயவிமர்சனத்தின் மூலமாக நீக்குவது புத்தி பூர்வமானது ஆகும். ஆகவே தமிழ்ப்புலிகள் முஸ்லிம்களது விடயத்தில் பகிரங்கமான முறையில் நியாயமாக நடந்துகொள்வது இன்றைய அரசியல் தேவையாகும். இதற்கான முயற்சிகள் பலவீனமாகும் போது சந்தர்ப்பவாத முஸ்லி ம்தலைமைகள் இன்னும் இன்னும் கதாநாயகத் தன்மையை பெறும் என்பதனையும் சுட்டிக் காட்டியே ஆகவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## பெண்ணிலைவாத நோக்கில் தமிழ் சினிமா –8

தமிழில் அதிகமான திரைப்படங்களில் பெண்கலைஞர்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றார்கள். நடிகை என்ற அளவில் இப் பெண் கலைஞர்கள் திரைப்படங்களில் பெரும் பங்கு பெறுகின்றார்கள். அவ்வாறே பாடகிகளும் அநேகமான எல்லாத் திரைப்படங்களிலும் பங்கேற்கின்றார்கள். ஒளிப்பதிவாளர்களாகவும் அவர்களின் பங்கு காணப்படுகின்றது.மற்றும் நடன அமைப்பாளராகவும்,இசை அமைப்பாளராகவும்,சிறுசிறு தொழில் நுட்பவியலாளராகவும் காணப்படுகின்றார்கள். அநேகமாக நடிகைகளே இயக்குனர்களாக வந்துள்ளனர். முன்னைய காலங்களில் நடிகை பி.பானுமதி இயக்குனராக இருந்ததைக் காணமுடிகின்றது. அவர் 1970ம் ஆண்டுக்குப் பின் இயக்கிய திரைப்படம் **ஒரு கோயில் இரு தீபங்கள்** ஆகும். தற்போது 'பெரியம்மா' என்னும் திரைப்படத்தை இயக்கியிருந்தார். நடிகை சாவித்திரியும் சில படங்களை இயற்றியுள்ளார். 1970ம் ஆண்டுக்குப் பின் இவர் இயற்றிய திரைப்படம் **பிராப்தமாகும்.** இவ்வாறு நடிகை லக்ஷ்மி **மழலைப் பட்டாளம்** என்னும் திரைப்படத்தை இயற்றியுள்ளார். நடிகை ஸ்ரீபிரியா **சாந்திமுகூர்த்தம்** என்னும் திரைப்படத்தை நெறியாண்டார். ஆனால் இவைகள் ஒன்றும் பிரச்சினைகளைச் சொல்லவில்லை. பெண்களின் சுதந்திரம் பற்றிச் சொல்லாவிட்டாலும் அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியாவது சொல்லி இருக்கலாம். இவர்கள் ஆண் இயக்குனர்களுக்கு எந்த விதத்திலேயும் சளைக்காமல் அதேமாதிரியான திரைப் படங்களை இயக்கினார்கள். ஸ்ரீபிரியா இயக்கிய **சாந்திமுகூர்த்தம்** என்னும் திரைப்படம் அதிகமான விரசக் காட்சிகளையும் இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்களையும் பெண்களைக் கீழ்மைப்படுத்தும் காட்சிகளையும் கொண்டது.

பெண் ஒளிப் பதிவாளர்கள் அதிகம் தமிழ்த் திரைப்படங்களில் காணப்படவில்லை.(நடிகை சுபாசினி ஆரம்பத்தில் அசோக்குமார் என்ற ஒளிப்பதிவாளருக்கு உதவியாளராக இருந்தார்.தனித்து ஒரு திரைப்படமும் இவர் ஒளிப் பதிவு செய்யவில்லை.) விஜயலக்சுமி என்பவரும் அசோக்குமாரிடம் உதவியாளராகச் சேர்ந்து பின் தனித்து சில படங்களில் ஒளிப்பதிவாளராகப் பணி புரிந்தார். நடிகை பி.பானுமதி சில படங்களுக்கு இசை அமைப்பாளராகப் பணி புரிந்தார். **ஒரு கோயில் இரு தீபங்கள்** என்ற திரைப்படம் இவர் பணி புரிந்த திரைப்படமாகும்.குலமங்களம் இராஜலக்சுமி **தரிசனம்** என்னும் திரைப்படத்திற்கு இசை அமைத்தார்.நடன அமைப்பாளராக புலியூர் சரோஜா நடிகை சீமா போன்றோர் பணி புரிந்தனர்.

கலை வடிவங்களைப் பெண் என்ற உணர்வுடன் பெண்கள் கையாளும் போது அங்கு பெண்களுக்கு உண்மையான சித்திரம் தீட்டப்பட அதிக சாத்தியம் உண்டு.இது தமிழ்த் திரைப்படங்களில் காணப்படவில்லை.

### 6.நடிகைகள் எதிர் நோக்கிய பிரச்சினைகள்.

நடிகைகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை இங்கு அநேகம் காணலாம். நடிகைகள் தங்கள் சுயத்தைக்காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற அளவிற்கு அவர்களால் இது இயல்மாமல் இருந்தது. நடிகர்கள் தாங்கள் விரும்பியதைச் செய்வதுடன் தங்கள் ஆளுமைகளையும் பேணிக் கொண்டார்கள். ஆனால் நடிகைகள் அதிகம் கிசுகிசுக்களில் இடம் பெறலாயினர்.அவர்கள் வயதை வைத்துத் தரம் தீர்மானிக்கப்பட்டது.உடல் எப்படி அவர்கள் மூலதனமோ அவ்வாறு உடல் சிறிது பெருத்தாலும் அவர்களின் தரத்தை அது குறைத்து விடும். நடிகர்களுடன் ஒப்பிடும் போது நடிப்பிற்கான ஊதியம் குறைவாக வாங்குபவர்களாக நடிகைகள் காணப்பட்டார்கள். இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம் பெண் என்பதே யாகும். பெண் இங்கு கவர்ச்சிப் பொருளாகவும் போகப் பொருளாகவும், பாலியற் பண்டமாகவும் கொள்ளப்படுவதே இதற்கெல்லாம் காரணமாகும். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் கவர்ச்சி காட்டும் வியாபாரப் பொருட்கள். இத்தகைய சினிமாக்களில் இருந்து தங்கள் தனித்துவத்தைப் பேணக் கூடியதாகச் சில நடிகைகளே காணப்படுகின்றனர்.

ஆரம்பத்தில் சினிமாவில் நடிப்பதற்கு நடிகைகள் கிடைக்காமல் படத்தயாரிப்பாளர்கள் சிரமப்பட்டனர். கமரா லென்ஸ் முன் நின்றால் அழகும் உடல் நலமும் கெட்டு விடும் என்று நினைத்து அந்நாளைய தொழில் முறை நாடக நடிகர்கள் அஞ்சினார்கள். 1917ம் ஆண்டில் வெளியிட்ட **திரௌபதி வஸ்திராபஹரணம்** என்னும் படத்தில் துகில் உரியப்பட்ட திரௌபதி ஒரு ஐரோப்பிய நடிகை. தொடர்ந்து படங்களில் நடிக்க வந்தவர்கள் ஆங்கிலேய இந்திய வகுப்புப் பெண்கள். ஊமைப் படங்கள் நடித்து பல நடிகைகளுக்கு அழகு கெட்டுப் போகவில்லை என்று கேள்விப்பட்டு நடிப்பதற்குப் பல நடிகைகள் முன் வந்தார்கள்.

மிஸ்.டி.பி.ராஜலட்சுமி
நடிக்கும் காளிதாஸ்

என்பது அக்காலத் திரைப்படம் ஒன்றின் விளம்பரம்.



ஆரம்பத்திலேயே பெண் மூலமான விளம்பரத்தைக் காண முடிகிறது.

இயக்குனர் ருத்திரையா ஒரு முறை கூறினார்.

''பாடல் காட்சியில் கதாநாயகி மார்பகங்களைத் தெரியும் அளவு குலுக்கி ஆடுகிறாளா? அல்லது குளத்தில் தண்ணீர் எடுக்கும் போது குனிகிறாளா என்பதைக் கவனிக்கிறார்கள். இந்த விநியோகஸ்தர்கள் தான் எனது இரண்டாவது கடவுள். இவர்களைத் தாண்டித் தான் எனது மக்களைச் சந்திக்க முடியும்.'' என்கிறார் ருத்திரையா. இதில் இருந்து நடிகைகளை என்ன பாடு படுத்தியிருப்பார் என்பதை ஊகிக்க முடிகிறது. ''நடிகைகளில் பெரும்பாலானோர் வறுமையின் காரணமாகவே கலைத்துறைக்கு வந்திருக்கின்றனர். நடிகைகளின் சினிமா விஜயத்திற்கு சர்வ நிச்சயமாக வறுமையே பிரதான காரணமாக இருந்திருக்கிறது. ஆந்திரா, கேரள, கன்னடம் ஆகிய இடத்தில் இருந்தும், பிராமணக் குடும்பங்களில் இருந்தும் இசை வேளாளர் (தேவதாசி) வகுப்பில் இருந்தும் தான் 98% நடிகைகள் வந்திருக்கின்றனர்.'' என அறந்தை நாராயணன் கூறுகின்றார். மின்னும் நட்சத்திரம், மயக்கும் மோகினி, கனவுக்கன்னி, கைபடாத ரோஜா என்றெல்லாம் நடிகைகள் வர்ணிக்கப்படுகின்றனர்.

நடிகை என்பது பணங் கறக்கும் இயந்திரம் என்பது அவர்களின் குடும்பத்தவரின் கருத்து. ''நான் ஒரு மனிதப் பிறவி இல்லையா எனக்கென்ற ஓர் இரசனையும் அமைதியும் இருக்கக்கூடாதா? எல்லாவற்றிற்கும் பயன்படும் இயந்திரம் தானா'' என்று கண்ணீர் மல்க அழுத விஜயஸ்ரீ என்னும் நடிகை தற்கொலை செய்து கொண்டார். 100க்கு மேற்பட்ட படங்களில் நடித்து வசதியுடன் வாழும் நடிகை கே.ஆர்.விஜயாவின் தங்கை நடிக்க முயன்ற போது கே.ஆர்.விஜயா தடுத்திருக்கிறார்.... ''பட உலகம் பற்றி எனக்குத் தெரியாதா? கஷ்டங்களைக் கதை கதையாகச் சொன்னேன்...'' என்கிறார் கே.ஆர்.விஜயா.

தனது சொந்த வாழ்வை நிர்ணயித்துக் கொள்ளக் கூட இந்த சமூகத்தில் ஒரு நடிகை போராட வேண்டியிருக்கிறது. இது ஆண் மேலாதிக்கம் உள்ள சமூகம். இந்த சமூகத்தில் எவ்வாறு தான் சம்பாதித்தாலும் நடிகை ஒரு ஆணைச் சார்ந்தே வாழ வேண்டியிருக்கின்றாள். தனது குடும்ப வாழ்வை நடிகை ஷோபா நிர்ணயித்துக் கொண்ட பின் 1980 ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் தற்கொலை செய்து கொண்டார். தனது மரணக் குறிப்பில் ஷோபா இவ்வாறு எழுதியிருந்தார். ''ஒரு வர்க்கம் என்ற வகையில் ஆண்கள் விஸ்வாசம் இல்லாத இனத்தவர்'' என்று எழுதியுள்ளார்.



நடிகைகளில் ரெட்டி சுப்புலக்ஸ்மி, எம்.எஸ்.சுப்புலக்ஸ்மி பானுமதி, பத்மினி, வைஜந்தி மாலா, சௌகார் ஜானகி, கே.ஆர்.விஜயா, லட்சுமி போன்ற சிலரே பத்திரமான சொந்த வாழ்வைப் பெற முடிந்தது. கைபடாத ரோஜா என்று தொடர்ந்தும் வர்ணிக்கப்பட்ட சரோஜா தேவி திருமணம் செய்து கொண்டதும் இரசிகர்களால் புறக்கணிக்கப்பட்டார். இங்கு இமேஜ் என்பது நடிகைகளின் மிக முக்கியமான தொன்றாகக் காணப்படுகின்றது.

**சுசீலா ரவி**

## புத்தகங்கள் நிகழ்வுகள் சிறு குறிப்புகள்

– மகாஜனன்

### மண்ணின் நினைவுகள்

●

சபா வசந்தன்

●

நான்காவது பரிமாணம் வெளியீடு

●




பத்தோடு பதினொன்றாக வந்துள்ள கவிதைத் தொகுதி ***மண்ணின் நினைவுகள்.*** புலம் பெயர்ந்தோரிடமிருந்து மண்ணை நினைத்து ஏங்குகின்ற கவிதைகள் அதிகம் வெளிவந்துள்ளன. அதனால்தான் இது பத்தோடு பதினொன்றாவது கவிதைத்தொகுதி ஆகும்.

தொகுப்பு முழுவதும் மண்மீதான ஏக்கமே வெளிப்படுகிறது. ஏக்கம் இயல்பாகவும், உண்மையாகவும் இருக்கிறது. அவையே இத் தொகுப்பின் பலம். ஒரு படைப்பை வாசிக்கின்ற போதே அதன் உண்மை, பொய்மை தெரிந்து விடும். இத் தொகுப்பு உண்மையையே பேசுகிறது. சிக்கல் இதுதான்: அது எந்தளது கவிதையாக வெளிப்பட்டிருக்கிறது என்பதே கேள்வியாகும்.

''***வெய்யிலுக்கு முன்னெழுந்து/ வடகம் செய்யவென/ வேப்பம் பூ பறித்து/ பழஞ்சோற்றைக் குழைத்து/ பலா இலைமேல் வைத்து/ பச்சை மிளகாயோடு/ பலகாரமும் செய்துதந்து/ பலகாலமாய் எம்மைப்/ பரிவுடனே வளர்த்து....***'' என்று போகிற கவிதையில் மண்மீதான தாக்கம் இருந்தாலும், கவித்துவத்தைத் தேடியும் காணவில்லை. பின்வரும் வரிகளில் கவிதை எழுத சிறிது முயன்றிருக்கிறார்.

''***ஆட்டுக்குக் குழையெடுக்க/ ஆளில்லை வீட்டிலிங்கு/ அதுக் குள்ளை உனக்கென்ன/ அறுவானே விளையாட்டு?***'' என்னும் வரிகளில் கவிதைக்கான முயற்சி தெரிகிறது. ஆனால் மேற்கூறப்பட்ட வரிகளின் தொடர்ச்சியாக,

''***அன்புடனே அடிக்க வரும்/ ஆச்சியும் இறந்துவிட/ ஆயிரம் மைல்களுக்கப்பால் அழுதிருக்கும் என் மனது...***'' என்று வருகிறபோது கவித்துவத்தைக் கையைவிட்டுத் தொலைத்து விட்ட பரிதாபம் தான் தெரிகிறது. கவித்துவத்தை தன் கைக்குள் வைத்திருந்தால், இத்தகைய விபத்து நிகழ்ந்திராது.

அப்படியென்றால் இக்கவிஞர் என்ன செய்திருக்க வேண்டும்? இது ஒரு கேள்வி. கவிதையைப் புடம் போட்டிருக்க வேண்டும்; இன்னும் இன்னும் செப்பனிட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்தும் இயலாதென்றால், கொஞ்சக்காலத்திற்கு கவிதை எழுதுவதை நிறுத்திவிட்டு, தொடர்ந்து கவிதை நூல்களை வாசிக்க வேண்டும். அது ஒன்றே இதற்கான தீர்வாக இருக்க முடியும்.

'மண்ணின் நினைவுகள்' என்று இக் கவிதைத் தொகுதியின் தலைப்புக் கூறியபோதிலும், வேறும் பலவிடயங்களை இத் தொகுப்பு தொட்டுச் சென்றிருக்கிறது. 'பெண்' என்று ஒரு கவிதை. பெண்ணின் பிரச்சினையைக் கூறும் கவிதை.

''***அவனுக்குப் பசித்த/ போதெல்லாம்/ உன்னையும் உணவையையும் பரிமாறிக்/ காலத்தைக் கழித்து விடு.***'' என்று பெண்பற்றிப் பாடுகிறபோது கவிதைக்கான முயற்சியை முன்வைக்கிறார். 'காயப்பட்ட கனவுகளும்' இத்தகைய முயற்சியே.

இறுதியில் பனைமரத்தைப் பற்றி விரக்தியோடு ஒரு கவிதை எழுதுகிறார். மீண்டும் சொல்லலாம்: இவரது அனுபவங்கள் உண்மையானவை; நெஞ்சைக் குடைந்து எடுக்கப்பட்டவை. ஆனால் கவிதையாகக் கனிய காலம் இன்னும் கொஞ்சம் வேண்டும். 'பழஞ்சோறு' என்னும் கவிதையைப் பாருங்கள்

''***விரல்களின்/ இடுக்கினூடே இறங்கி/ முழங்கைவரை/ வழிந்தோடும்/ பிலா இலையை எடுத்து/ பிடியன்ரா அறுவானே...***''

என்று கவிதை கூறுகிற போது உண்மையாயிருக்கிறது. சபா வசந்தன் அவர்களே, அதைக் கவிதையாக்க முயலுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# புலிகளின் காலக்கெடு:

# நெருக்கடி அரசுக்கா? சமாதானத்துக்கா?



சஞ்ஜித்

பூநகரி முகாமை அகற்றி பாதுகாப்பான போக்குவரத்துக்கான ஒரு பாதை திறக்க வழிசெய்வது, தடைசெய்யப்பட்டு அத்தியாவசிய பொருட்கள் மீதான தடையை நீக்குவது, மீன் பிடிக்காக விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவது, கிழக்கிலுள்ள புலி உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதித்தல் ஆகிய நான்கு முக்கிய கோரிக்கைகள் தொடர்பாக, புலிகளுக்கு [illegible] ஹொபன்ஹேகன் மாநாட்டிற்கு செல்வதற்கு முன்பாக அனுப்பி வைத்திருந்த கடிதத்தில் 'தேசிய பாதுகாப்பு ரீதியான காரணங்களுக்காக இவற்றை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது' என்றும், அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க ஏப்ரல் 2 முதல் 10ம் திகதிக்குள்ளாக ஒரு திகதியை அறிவிக்குமாறும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை வடக்கு மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கி, தமது விடுதலைக்கு வழிவகுக்குமாறு கோரி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமொன்றை புலிகளிடம் கைதிகளாக இருந்த 15 பொலிஸார் ஆரம்பித்திருந்தனர். அவர்களது உடல்நிலை மோசமான நிலையை எய்தியிருந்ததை அடுத்து அவர்கள் அனைவரையும் விடுதலை செய்த விடுதலைப்புலிகள், கூடவே பிரபாகரனால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்கள்.

ஜனாதிபதி நாட்டிலில்லாத போதும், இக்கடிதம் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது. இக்கடிதம் ஜனாதிபதி ஹொபன்ஹேகனுக்கு செல்ல முதல் எழுதிய கடிதத்திற்கு பதிலளிப்பதாகவும், தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகட்கு சாதகமான பதிலொன்றை அரசு தருவதற்கு மார்ச் 28ம் திகதியை காலக்கெடுவாக விதித்திருப்பதாகவும் அமைந்திருந்தது. அரசாங்கத்தின் பதில் கிடைக்காத பட்சத்தில் 'சமாதான நடவடிக்கைகளை தொடர்வதா இல்லையா என்பது குறித்த ஒரு மனவருத்தத்திற்குரிய முடிவை நாம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்படுவோம்' என்று தெரிவித்திருக்கும் இக்கடிதம், ஜனாதிபதி 'பாதுகாப்பு காரணங்களைக்' காரணம் காட்டியதை கண்டித்துள்ளதுடன், இராணுவக் காரணங்களுக்காக வடக்கு மக்களை துன்புறுத்துவதை நியாயப்படுத்த ஜனாதிபதி முயல்கிறார் என்று குற்றம் சாட்டியும் உள்ளது.

புலிகளின் இந்தக் கோரிக்கைகளில் கிழக்கு மாகாணத்தில் ஆயுதங்களுடன் அவர்கள் நடமாடுவதை அனுமதிப்பது தொடர்பான கோரிக்கை ஒன்றைத் தவிர ஏனைய மூன்று கோரிக்கைளும் வடக்கிலுள்ள மக்களது நேரடி நலன்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பது மிகவும் முக்கியமானதாகும்.

வடக்குக்கு செல்லும் பொருட்கள் மீதான பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டு குறிப்பிடத்தக்க பல பொருட்கள் அனுமதிக்கப்பட்ட போதும், அவை அங்குள்ள மக்களின் பாவனைக்கு போதுமானளவு அனுப்பப்பட அனுமதிக்கப்படுவதில்லை. ஹொபன்ஹேகனில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் வைத்து ''புலிகள் நாம் அனுப்பும் சீமெந்தை பங்கர் கட்ட உபயோகிக்கிறார்கள். நாம் சொன்னதும் அதை நிறுத்தியுள்ளார்கள். ஆனால் மீளவும் அவர்கள் அதை செய்வார்கள் என்றும், இராணுவ அதிகாரிகளின் ஆலோசனைக்கு மாறாக பற்றரிகள் கூட அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு லாபகரமான இவற்றை நாம் செய்திருக்கின்றோம். ஆயினும் புலிகள்தான் திரும்பத் திரும்ப புதிய கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள்'' என்று தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியான போது, இப்படியாக ஜனாதிபதி கூறவில்லை என்று மறுப்பறிக்கை ஒன்றை இலங்கையின் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டிருந்தது. ஆயினும், இச்செய்தி உண்மையே என்று அங்கிருந்த பத்திரிகையாளர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர். இது தொடர்பான கடிதம் ஒன்றை பிலிப் லோட்டே (Philip lote) என்கிற நோர்வேஜிய வானொலி செய்தியாளர் 'லேக்ஹவுஸ்' பத்திரிகைகட்கு எழுதியுள்ளார். அதில் அவர் 'சீமெந்து தொடர்பான ஜனாதிபதியின் கூற்று உண்மையே' என்று வலியுறுத்தியுள்ளார்.

உண்மையில் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சமாதானம் பேச விரும்புகிறதா அல்லது இராணுவ ரீதியில் அவர்களை வளரவிடாமல் வைத்துக் கொண்டு அதே நேரத்தில் அவர்களை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்திவிட வேண்டுமென விரும்புகிறதா என்ற சந்தேகத்தை இச்சம்பவங்கள் எழுப்பியுள்ளன.

எவ்வாறாயினும், பிரபாகரன் இக்கடிதத்தில் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைக்கு நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம் என்றும், சரியாகச் சொல்வதானால் பேச்சுவார்த்தையினை எந்த அடிப்படையில் நடத்த வேண்டுமென்பதற்கு பருமட்டான ஒரு வரைவையும் அறிவித்திருக்கிறோம் என்றும் தெரிவிக்கின்றார். அரசாங்கம், புலிகள் பேச்சுவார்த்தையில் நாட்டமின்றி இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைப்பது உண்மையை திரித்துக் கூறுவதாகும் என பிரபாகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பேச்சுவார்த்தையின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு இப்போது ஜனாதிபதியின் கையிலேயே தங்கியுள்ளது.

இராணுவ கொமாண்டர் ஜெரி சில்வா ராய்டர் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ள கருத்துக்கள் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியன.

அவர் சொன்னார் ''இராணுவ வீரர்களும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். நாம் சமாதான காலத்திலும் யுத்த தயார் நிலையிலேயே இருக்கிறோம். முன்பு நடந்தது போல நாம் கைப்பற்றிய இடங்களை விட்டுக்கொடுக்க மாட்டோம். திடீரென யுத்தம் தொடங்கினாலும் அதை சமாளிக்க எமக்கு முடியும்''

ஆகவே, இராணுவ ரீதியில் அரசு புலிகள் மீது நம்பிக்கை வைத்து பேசவில்லை என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகிறது. புலிகளுடன் அரசாங்கம் நம்பிக்கை வைக்காதது போலவே, அரசாங்கத்தின் இராணுவ நோக்கங்கள் மீதும் புலிகளுக்கு சந்தேகம் இருக்கவே செய்கிறது. புலிகள் அரசாங்கத்தையும் இராணுவத்தையும் அவர்கள் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்குவார்கள் என்று நம்பவில்லை.

ஆரம்பத்தில் இருந்தே நீடிக்கும் இந்த நம்பிக்கை அற்ற தன்மை, இப்போது வந்து இறுகிப்போன ஒரு நிலைமையை தோற்றுவித்துள்ளது.

இந்த இறுக்கத்தை தளர்த்தவே அரசியல் தீர்வு பேச்சுக்களை தொடர்வது என்ற காயை ஜனாதிபதி நகர்த்தினார். ஆனால் மார்ச் 28ம் திகதிக் காலக்கெடு என்ற பிரபாகரனின் பதில் காய் நகர்த்தல், பழைய இறுக்க நிலையை திரும்ப உருவாக்கியுள்ளது.

புலிகள் அரசாங்கத்தில் சந்தேகப்படுவதற்கு நியாயம் இருக்கிறது. ஏனென்றால் இந்த அரசாங்கம் தனது அடிப்படை நிலைப்பாடுகளைப் பொறுத்தவரை இன்னொரு 'இலங்கை அரசாங்கமாக'வே தன்னை காட்டியுள்ளதே அன்றி, சிறுபான்மை மக்கள் முற்றுமுழுதாக நம்பும் ஒரு நிலையைத் தோற்றுவிக்கவில்லை. தேர்தலுக்கு முன்பிருந்தே தெரிவித்துவந்த 'தயாரிக்கப்பட்டுவரும்' தீர்வுத் திட்டம் இன்னமும் வெளிவரவில்லை. சந்திரிகா தனது பைக்குள் இருந்து அவிழ்த்துவிடப் போகும் தீர்வுப் பூனை எப்படி அமையப் போகிறது, அது எவ்வளவுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படப்போகிறது என்பது இன்னமும் ஊகமாகவே இருக்கிறது.

இதேவேளை, கொழும்பிலுள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளும், இ.தொ.க., ம.ம.மு. ஆகியவையும் தத்தமது தீர்வு யோசனைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

இவைகள் அனைத்தும், புலிகள் தெரிவித்த அடிப்படையான 'திம்பு அடிப்படை'யையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் பெருமளவுக்கு தமிழ்க் கட்சிகளிடையே புலிகளுடன் இவ்விடயத்தில் ஒத்த போக்கே நிலவுவதாக தெரிகிறது. இவையெல்லாம் கடந்தகால அரசாங்கங்களுடனான தமிழ் மக்களின் அனுபவங்களை தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

ஆக, புலிகள் அரசை சந்தேகத்துடன் பார்ப்பதில் நியாயமிருக்கிறது. புலிகளை சந்தேகிக்க அரசுக்கு நியாயமில்லையா என்றால் அதற்கும் உண்டு என்றுதான் கூறவேண்டும். ஆனால் அவ்வாறு சந்தேகிக்கும் மனோபாவம் 'சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசு' என்ற அடிப்படையிலிருந்து எழும் மனோபாவம்' இந்த அரசு தான் அப்படிப்பட்ட அரசு அல்ல என்று கருதினால் அது அரசியல் கோரிக்கைகளால் பலம் பெற்றிருக்கும் புலிகளின் இராணுவ பலத்துக்காக அல்லது அதன் இயல்புக்காக தயங்கும் சந்தேகமாக இருக்க வேண்டும்.

அரசியல் தீர்வினை காண்பதில் துணிச்சலும், நேர்மையும் இருக்குமானால் அரசு, புலிகளின் இராணுவ பலத்துக்காக பயப்படத்தேவையில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டால் புலிகள் அதன் பின் இந்த அரசுடன் மோதுவதற்கு நியாயம் இல்லாமல் போய்விடும் என்ற உண்மையை அரசு புரிந்துகொண்டால் இவ்வாறு சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

புலிகள் சமாதான காலத்தில் யுத்தத்துக்கு திரும்பியது குறித்து தமக்கு 11 வருட அனுபவம் இருப்பதாக கூறும் இராணுவம் இவ்வளவு கால பேச்சுக்களும், தமிழ் மக்களது காதுக்குள் பூச்செருக நடாத்திய பேச்சுக்களே என்பதையும் மறந்துவிடக்கூடாது. இதனால் தான் புலிகளின் ஆயுதப்போராட்டம் தமிழ் மக்களது உரிமைகளுடன் இணைந்த ஒன்றாக அம்மக்களாலேயே ஏற்றுக் கொள்ளப்படுகிறது - புலிகள் தொடர்பாக அவர்களுக்கு எத்தனை பிரச்சினைகள் இருந்த போதும்.

இறுதியாக ஒன்றைச் சொல்லலாம். யுத்தத்திற்கு மட்டுமல்ல, சமாதானத்திற்கும் துணிச்சலும் உறுதியும் கொண்ட மனோபாவம் வேண்டும்; விட்டுக் கொடுக்காத சோர்வற்ற உழைப்பு வேண்டும்; உள்ளத்திலே தெளிவும், நேர்மையும், எதிராளி மீதும் அவரது ஆற்றல் மீது நம்பிக்கையும் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, மேற்தோற்றங்களை விட்டுவிட்டு 'ஆழ்ந்திருக்கும்' உண்மை என்ன என்று பார்த்து அதற்கு முகம் கொடுக்கும் விருப்பு வேண்டும்!

இவையெல்லாம் இல்லாவிட்டால், சமாதானம் பற்றி பேசுவது வெறும் விளம்பரப்பகட்டு அல்லது வியாபாரம் தான்!

வியாபாரிகளால் வியாபாரம்தான் செய்ய முடியும்; எந்த வியாபாரியும் சமாதானத்தை லாபமாக கருதுவதில்லை; லாபத்துக்காக சமாதானத்தை விற்று விடுவதையே விரும்புவான்.

எமது ஜனாதிபதி தான் ஒரு வியாபாரி அல்ல என்று நிரூபிக்க வேண்டுமென்பதே அவருக்கு வாக்களித்த வாக்களிக்காத அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தொடர்பூடக சுதந்திரமா? சும்மா கிட!

என்.சரவ

புதிய அரசாங்கம் பதவியேற்று அரை வருடத்திற்குள் நடந்த பல சம்பவங்களை தொகுத்துப்பார்த்தால், பதவிக்கு வர முன்னர் பொ.ஜ.ஐ.மு. பத்திரிகைச் சுதந்திரம் குறித்து வழங்கிய வாக்குறுதிகளையும் உறுதி மொழிகளையும் கிடப்பில் போட்டுவிட்டு செயற்படுவது தெரியவரும்.

1977 தேர்தலின் போது ஜே.ஆர். வெளியிட்ட தேர்தல் பிரகடனத்தில் அதுவரை ஆட்சிபுரிந்த சிறிமா பண்டாரநாயக்கா அரசாங்கம் 'ஏரிக்கரை' (Lake House) பத்திரிகைகளை அரச கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததற்கு எதிராக கண்டனம் தெரிவித்தார். பதவிக்கும் வந்தார். பதவிக்கு வந்ததும் எந்த வகையிலும் அதற்கு மாற்றீடாக அவர் நடந்து கொள்ள வில்லை. மாறாக ஏரிக்கரை பத்திரிகைகளை தொடர்ந்தும் தமது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டார். 1989 இல் பிரேமதாசா ஆட்சிக்கு வந்தார். கடந்த கால தொடர்பு சாதன முறை இன்னும் ஜனநாயகப்படுத்தப்படும் என பிரகடனப்படுத்தினார். அவரது தலைமையின் கீழான ஆட்சியில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பத்திரிகையாளர்கள், தொடர்பு சாதனத்துறையைச் சேர்ந்தவர்கள் மர்ம மான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

அன்றைய சூழ்நிலையில் நடந்த பல படுகொலைகளை ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி)யின் மீது இலகுவாக பழி சுமத்தும் சூழல் சாதாரணமாக இருந்ததால் மேற்படி கொலைகள் கூட அவர்கள் மீது சுமத்தப்பட்டதோடு அரசு நின்று கொண்டது. விசாரணைகள் எதுவும் நடத்தப்படக்கூட இல்லை. பல பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர். மிரட்டல்களுக்குள்ளாயினர். பல மாற்றுப் பத்திரிகைகள் தங்களது பத்திரிகை வேலைகளை இரகசியமாக ஆற்ற வேண்டிய சூழலுக்குள்ளானது. பலர் பத்திரிகைத்துறையை விட்டே ஒதுங்கினர்.

பிரேமதாசா இறந்தார். டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியானார். பத்திரிகைளுக்கான கட்டுப்பாடு பீதி தொடர்ந்தும் இருந்தது.

''சாமய சமுர்த்திய, பிரஜாதந்திரவாதய'' (சமாதானமும் ஜனநாயகமும்) என்ற கோஷத்தோடு சந்திரிகா வந்தார். தங்களுக்கு விடிவு காலம் வரப்போகிறது என பொதுமக்கள் எதிர்பார்த்ததைப் போலவே பத்திரிகைகளும் எதிர்பார்த்தன.

பொதுஜன முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. வெகுஜன தொடர்பு சாதனங்கள் சுதந்திரமாக செயற்படுவதை நிலைநாட்ட உறுதியளித்தார். அவர்களது சுதந்திரத்திற்கு தடையாகவுள்ள சட்டங்கள், அரசியலமைப்பு சரத்துக்கள் என்பவை நீக்கப்படும். 'ஏரிக்கரை' நிறுவனத்தை அரச கட்டுப்பாட்டிலிருந்து தளர்த்திவிடுவோம். இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் (வானொலி, தொலைக்காட்சி) தமது சொந்த செய்திச் சேவையை நடத்த சுதந்திரம் வழங்கப்படும் என்ற பெரும் பிரகடனங்களை செய்து நம்பிக்கையூட்டினார்.

மேற்படி வாக்குறுதிகளை செவிகொ[...] துறையினர் சந்திரிகாவினால் கவர[...] அலை' என கூறுமளவிற்கு ஒரு பெ[...] யையே உருவாக்கிவிட்ட பெருமை ச[...] ளுக்கும் உரியது. அந்தளவு தேர்தல் [...] சாதனங்கள் செயற்பட்டிருந்தன.

இன்று தொடர்பு சாதனத்துறை தொ[...] வாக்குறுதிகளும் கிடப்பில் போடப்ப[...] ணங்கள் இங்கே தரப்படுகின்றன[...] செய்திகள்)


தேர்தலுக்கு முன்னர், இதே சமூக அ[...] காக்க கங்கணங்கட்டிக் கொள்ளும் அ[...] கும் வாக்குறுதிகள் அனைத்தும் தேர்[...] காலாவதியாகிவிடும் என்பதற்கு இது[...] ணமாகும்.

தொடர்பு சாதனத் துறை[...] சேர்[...] உரிமைக்கு எதிரான நடவடிக்கை[...] எதிர்ப்பைத் தெரிவித்தல் அவசிய[...] இலங்கைப் பத்திரிகைத் துறையைப் பெ[...] பத்திரிகைகளை விட பல்வேறு மாற்[...] கெதிரான விடயங்கள் குறித்து காரசா[...] திவருகின்றன. ஆனால் மாற்றுப்பத்[...] தாக்குதல்கள், மிரட்டல்கள் அதிகரிக்[...] ராக குரல் கொடுப்பதில் ஏனைய பத்தி[...] புக்கள் குறைவாகவே உள்ளன. உதா[...] யில் 'சண்டே லீடர்', 'லக்பிம' ஆகிய[...] ராக நடந்த சம்பவங்களின் போது, [...] வெளியிட்ட எதிர்ப்பு 'பெரளிய', 'ஹி[...] ளுக்கு நடந்த சம்பவங்களின் போது [...]

இவ்வாறான தொடர்பு சாதன துறை[...] கெதிராக நடத்தப்படும் வன்முறைக[...] யைச் சேர்ந்த சகலரதும் ஒருமித்த எதி[...] விட்டால், இந்த மிலேச்சத்தனத்தை[...] அதை பாதுகாப்பவர்களுக்கும் சாத[...] உறுதி.

பத்திரிகையாளர்களுக்கெதி[...] இத்[...] குறுகிய காலத்துக்குள் இடம் பெற்றுவ[...] அரசாங்கம் 'பத்திரிகையாளர்களுக்க[...] யைப் பற்றி யோசித்து வருகிறது'. ந[...] தொடர்புசாதனத் துறையின் சுதந்தி[...] ளுக்கு வழிவகுப்போம் என பிரகட[...] கெதிராக ஒழுக்கக் கோவையை தயா[...] செயல் 'பத்திரிகையாளர்களுக்கு கை[...] ஒடுக்குபவர்களுக்கு பாதுகாப்பையும் [...] விர வேறேன்ன?'

## 28 ஒக்டோபர் 1994




மாற்றப்படுவதற்கு முன்னர் இருந்த முதற்பக்கம் அச்சடிக்கப்பட்ட நிலையில் 25,000 பிரதிகள் இறுதியில் எரிக்கப்பட்டது இதுவே




அலரி மாளிகையிலிருந்து வந்த ஆணையின் பேரில் மாற்றப்பட்ட ஒக்டோபர் 28 ஆம் திகதி பத்திரிகையின் முன் பக்கம்

''லேக்ஹவுஸ்'' (ஏரிக்கரை) பத்திரிகைகளில் ஒன்றான 'தினமின' (சிங்கள தினசரி) மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகள் 'அலரி மாளிகைக்கு கொண்டு வரப்பட்டு அங்குள்ளவர்களின் ஆணையின் பேரில் முன்பக்க தலைப்புச் செய்தி மாற்றப்பட்டது.

''லேக்ஹவுஸ் நிறவனத்தை அரச கட்டுப்பாட்டிலிருந்து நீக்குவோம். அரசாங்கம் தனது பிரச்சாரத்துக்கு அதனைப் பயன்படுத்தாது'' என பொ.ஜ.ஐ.முவின் தேர்தல் பிரகடனத்தில் கூறப்பட்டது.

பதவிக்கு வந்ததன் பின் இன்றுவரை அரசாங்கத்தின் பிரச்சாரங்களுக்காக தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுவருவது தற்போது இரகசியமானதல்ல.

ஒக்டோபர் 28ம் திகதி இரவு முன்பக்க தலைப்பை மாற்றும்படி அலரிமாளிகையிலிருந்து ஆணையிடப்பட்டது. அதுவரை இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட தினமின மற்றும், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகள் அச்சாகிவிட்டிருந்தன. பிரதம ஆசிரியரின் அனுமதி கூட இல்லாமல் ஜனாதிபதியின் அறிக்கையொன்று தலைப்பாக போடப்பட்டது. அந்த புதிய தலைப்பானது ''அரச இராணுவத்தின் மீது எனக்கு பூரண நம்பிக்கை'' என்றிருந்தது. இரண்டாவது தலைப்பாக 'ஜனாதிபதித் தேர்தலிலிருந்து நிகால் கலப்பத்தி விலகிக்கொண்டார்' என்றும் இருந்தது.

மாற்றப்படுவதற்கு முன்னர் அந்த முதற்பக்கத்தில் 'தொட்டலங்க குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் சந்தேகத்திற்கிடமான 'சுவிட்'சும் டேர்மினலும்' எனும் செய்தியும் 'குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக தகவல் தருவோருக்கு பரிசுத்தொகை வழங்கப்படும்' என்ற செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது.

அதுவரை அச்சாகியிருந்த டெயிலி நியூஸ் 17,000 பிரதிகளும், தினமின 25,000 பிரதிகளும் வீசப்பட்டன.

இந்த சம்பவம் பற்றி பத்திரிகையாளர் மாநாடொன்றில் தகவல் தொடர்பு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கவிடம் வினவிய போது தலைப்பு மாற்றத்துக்கும் அரசாங்கத்துக்கும் தொடர்பில்லை என மறுத்துவிட்டார்.

''லேக்ஹவுஸ்'' நிறுவனம் தொடர்ந்தும் அரச கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன என்பதற்கு அதில் வெளியிடப்படும் செய்திகளையே ஆதாரமாகக் கொள்ளலாம்.

## 06 பெப்ரவரி 1995



லசந்த விக்கிரமதுங்க

'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க தாக்கப்பட்டார். இத்தாக்குதலின் போது அவரது மனைவியும் பத்திரிகையாளருமான றேன் விக்கிரமதுங்கவும் தாக்கப்பட்டார்.

தமது அலுவலகத்திலிருந்து நுகேகொடை - காவத்த றோட்டிலுள்ள அவரது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போதே கார் ஒன்றில் வந்த நான்கு குண்டர்களால் தாக்கப்பட்டார்.

லசந்தவை தாக்கியபோது அதனை தடுக்க முயற்சித்த அவரது மனைவியும் மோசமாக தாக்கப்பட்டார்.

சண்டே லீடர் பத்திரிகையில் தொடர்ந்தும் வெளியிடப்பட்டுவரும் இன்சைட் பொலிற்றிக்ஸ்(Inside Politics) எனும் பத்தியில் ஜனாதிபதி சந்திரிகாவைப் பற்றி எழுதப்பட்ட விமர்சனங்களைத் தொடர்ந்தே இது இடம் பெற்றிருக்கிறது எனக் காணப்படுகிறது. அது தொடர்பாக ஏற்கெனவே ''அவ்விமர்சனங்களை தொடர்ந்தும் எழுதினால் நீ கொல்லப்படுவாய்'' என லசந்த தொலைபேசி மிரட்டலுக்குள்ளாகியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சண்டே லீடர் பத்திரிகையைச் சேர்ந்த நிஸாம் இது பற்றி குறிப்பிடும் போது ''ஜனாதிபதியின் தொர்புத் துறை ஆலோசகரும், பிரபல நடிகருமான சனத் குணதிலக்க ஒரு முறை தொலைபேசியின் மூலம் ''தன்னைப்பற்றியும் தொடர்ந்து எழுதினால் பத்திரிகைக் காரியாலயத்துக்கே வந்து வெட்டிக் கொல்லப் போவதாகப் பயமுறுத்தினார்'' என்றார்.

இது பற்றி லசந்த விக்கிரமதுங்க கருத்து தெரிவித்த போது ''நான் சனத் குணதிலக்கவின் மீதே சந்தேகப்படுகிறேன். எனது பிள்ளைகளையும் எனது மனைவியையும் கொல்வதாகக் கூட மிரட்டல்கள் வந்தன.

இந்த குண்டர்களின் தாக்குதல் மூலம் எனக்கு மட்டுமல்ல சகல பத்திரிகையாளர்களுக்குமான எழுத்துச் சுதந்திரத்திற்கு விடுத்த மிரட்டலே இது'' என்றார்.

இச்சம்பவம் நடந்து இத்தனை நாளும் இதற்கு காரணமானவர்களை கண்டுபிடிப்பதில் இன்னமும் அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கவில்லை.

## 17 பெப்ரவரி 1995

கல்விச்சேவை தடைசெய்யப்பட்டுவிட்டது. புதிய கல்விச்சேவையானது 1994 யூன் 22ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறுகிய காலமே இயங்கி வந்த இந்தச் சேவை சில அரசியற் காரணங்களுக்காக பெப்ரவரி 17 ஆம் திகதி நிறுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

புதிய கல்விச்சேவை இலங்கையின் கல்வித்தரத்தை உயர்த்தல். வெகுஜன அறிவாற்றலை வளர்த்தல் என்ற நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் நேரடி ஒலிபரப்புக்கள் பல ஒலிபரப்பப்பட்டுள்ளன. தொலைபேசி கலந்துரையாடல்களுக்கும் நிறைய சந்தர்ப்பங்களிக்கப்பட்டிருந்தன. பல நடைமுறைப் பிரச்சினைகளைப்பற்றிய வேறுபட்டவர்களின் கருத்தாடல்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தன. இதைவிட அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பொறுப்பான அதிகாரியிடம் கேள்வி கேட்டறியும் கருத்தாடல்கள் கூட இடம் பெற்றுவந்துள்ளன.

இந்நிகழ்ச்சியின் போக்கு அச்சத்தை கிளப்பியதன் காரணமாகவே இது நிறுத்தப்பட்டிருக்கக்கூடும் என பேசப்படுகிறது.

புதிய கல்விச்சேவை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் நிர்வாக இயக்குனர் திலக் ஜயரத்ன இது பற்றி கருத்து வெளியிட்டிருந்த போது ''எங்களது கல்விச் சேவை ஆரம்பத்திலிருந்து மட்டந்தட்டப்பட்டுவந்தது. பல தடவை கல்விச் சேவையை அபிவிருத்தி செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டிலும் பாரபட்சம் காட்டப்பட்டது. உதாரணத்திற்கு உலக கல்விச்சேவைகளோடு தொடர்பு கொள்ளக்கூடிய எலக்ரோனிக், தபால் தொடர்பு வசதிகள் அடங்கிய கொம்பியூட்டர் இயந்திரமொன்று தேவைப்பட்டது. அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய அதிகாரி அதை வழங்காமல் இழுத்தடித்தார். தலைவரால் அனுமதிக்கப்பட்டிருந்த நிதியினைக்கூட இவர் வழங்குவதில் பின்வாங்கினார்.

இதுவரை நாங்கள் கஷ்டப்பட்டு தயாரித்த பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படாதவாறு தடுக்கப்பட்டன. உதாரணத்திற்கு காமினி திசாநாயக்காவின் மரணத்தின்போது நாங்கள் தயாரித்திருந்த 22 நிமிட நிகழ்ச்சியை ஒலிபரப்ப விடவில்லை.

இப்படியாக புதிய கல்விச்சேவை பல இடையூறுகளுக்கு மத்தியிலேயே இயங்கிவந்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி கல்விச்சேவையின் ஒலிபரப்பு தொடர்பாக மாற்றங்களை தொடர்ந்து சிலர் பதவிகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றனர்.


அவர்களது எதிர்ப்பின் மத்தியில் கடந்த 18ஆம் திகதி முழு கல்விச் சேவை என்ற நிகழ்ச்சியையே இல்லாது செய்து விட்டனர். கல்விச்சேவை (தமிழ்ப்பிரிவு)யை சேர்ந்த ஒரு அதிகாரி ''இடையூறுகளுக்குமிடையில் சுதந்திரமாக இயங்கிவந்தோம் இன்று எங்களை வேறு சேவைக்கு மாற்றிவிட்டதாக ஆணையும் பிறப்பித்துவிட்டார்கள். இந்நிலையில் அதிக கட்டுப்பாடுள்ள வேறு சேவைகளில் எங்களை ஈடுபடுத்த முடியாது. ஆர்வத்தோடு இயங்கினோம். இப்போது வேறு வழியில்லை. இத்துறையை விட்டே விலகலாமென்றிருக்கிறேன்'' என்றார்.

## 21 பெப்ரவரி 1995

'ஹிரு' பத்திரிகையில் ஆசிரியர் 'சுனில் மாதவ' மீதான வழக்கு தீர்ப்பில் அவருக்கு இரண்டு வருட கடும் வேலைகளுடன் கூடிய சிறைத் தண்டனையை வழங்கப்போவதாகவும், மன்னிப்புக் கேட்டால் அத்தண்டனையை நீக்குவதாகவும் அறிவிக்கப்பட்டது. இறுதியில் தான் வெளியிட்ட செய்திக்காக சுனில் மாதவ மன்னிப்பு கேட்க வேண்டியேற்பட்டது. நடந்தது இது தான்.

1992 பெப்ரவரி 4ஆம் திகதி 'லக்திவ' பத்திரிகையில் ***'சப்பிரகமுவ மாகாணத்தில் பொலிஸ் அதிகாரியொருவரின் திருமணம் நடந்ததிலிருந்து அவரது 'ஹனிமூன்' முடிந்து வரும்வரையான செலவுத்தொகையை பொலிஸ் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொண்டார். அதற்கு கையெழுத்திட்டிருப்பவர் அவரது தகப்பனாரான பொலிஸ் அதிகாரி. திருமணத்திற்கு சாட்சியாக கையெழுத்திட்டிருப்பவர் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா.***

இந்த செய்தி வெளியிட்டு இரண்டு வருடங்களுக்குப்பின் - 1993 பெப்ரவரி 5 ஆம் திகதி 'லக்திவ' காரியாலயம் சீல் வைக்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் வழக்கைத் தொடர்ந்தது. 1994 மே மாதம் 7ஆம் திகதி காரியாலயம் மீண்டும் திறக்கப்பட்ட போது அங்கிருந்த பல தஸ்தாவேஜுக்கள் அங்கிருக்கவில்லை. மேற்படி செய்தியை ஆதாரப்படுத்தக்கூடிய தஸ்தாவேஜும் அங்கு இருக்கவில்லை. பத்திரிகை ஆசிரியர் சுனில் மாதவவால் தன்னை நியாயப்படுத்த இருந்த ஒரே ஒரு சாட்சியும் களவாடப்பட்ட நிலையில் வழக்கு தொடர்ந்தும் நடந்தது. இறுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது.



சுனில் மாதவ

மன்னிப்பு கேட்க[...] விட்டால் கடும் வே[...] 2 வருட சிறைத்த[...] பணமாக பத்தாயி[...] நோய்' ஆஸ்பத்தி[...] டிவரும் எனவும் [...] இறுதியில் சுனில் [...] கேட்டுக்கொண்ட[...] தலை செய்யப்பட்[...]

சம்பவம் பிரேமதா[...] ருந்த போதும் த[...] யாளர்களது பாது[...] உத்தரவாதப்படுத்[...] ய' பொ.ஐ.மு. அ[...] கப்பட்டதே இங்கு[...]

இந்தச் சம்பவம் [...] செய்தியும் 'ஹிரு[...] எந்தப் பத்திரி[...] வில்லை என்பது [...]

(சுனில் மாதவ இத[...] பத்திரிகையின் ஆ[...] அப்பத்திரிகையின்[...] அதன் உரிமையா[...] காரணமாக அப்ப[...] யர் குழுவில் இரு[...] யேறி 'ஹிரு' பத்தி[...] தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1994 ஒக்டோபர் மாதத்தில் ஆட்டிக்கிள் 19 இல் "இலங்கையில் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம்: மாற்றத்திற்கான குறிப்புக்கள்" ( The right to freedom of Expression in Sri Lanka: An agenda for change) என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட 25 பரிந்துரைகளில் 19 பரிந்துரைகள் இங்கு தரப்படுகின்றன. இவை நேரடியாக தொடர்பு சாதனத்துறையின் சுதந்திரத்துடன் சம்பந்தப்பட்டவையாகும்.

XIX
ARTICLE 19
INTERNATIONAL CENTRE AGAINST CENSORSHIP

1. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பு, ஐ.சி.சி.பி.ஆர் (சிவில் உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனம் - International Assembly on Civil and Political Rights - ICCPR) இனால் வழங்கப்பட்ட அனைத்துப் பாதுகாப்பு அம்சங்களையும் குறிப்பாக சரத்து 19, 21, 22 ஆகியவற்றின் பாதுகாப்பு அம்சங்களையும் சேர்த்துக்கொண்டதாக அமைய வேண்டும். இந்த உரிமைகளில் எவையும் ஐ.சி.சி.பி.ஆர். இனால் அனுமதிக்கப்படாத பட்சத்தில் கட்டுப்படுத்தப்படக்கூடாது.

2. அரசியலமைப்பு சட்டத்தின் 16வது சரத்து, மனித உரிமைகளை பாதுகாக்கும் எல்லா நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு சரத்துக்களுக்கும் உத்தரவாதமளிக்கும் விதத்தில் மாற்றப்படவோ திருத்தப்படவோ வேண்டும்.

3. அரசியலமைப்புச்சட்டம் நீதித்துறையின் முன் பிரஜா உரிமை அற்றவர்கள் உட்பட அனைவரதும் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் விதத்தில் திருத்தப்பட வேண்டும்.

4. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை பாதுகாக்கும் விதத்தில், தனிநாட்டு கோரிக்கையை பிரச்சாரம் செய்வதை தடைசெய்யும் 6வது திருத்தச்சட்டம் நீக்கப்பட வேண்டும்.

5. தகவல் சுதந்திரமானது அரசியலமைப்புச் சட்டரீதியாக பாதுகாக்கப்படவேண்டும் என்பதோடு, இதன் மீதான எல்லாக் கட்டுப்பாடுகளும் ஐ.சி.சி.பி.ஆர். இன் சரத்துக்களுக்கேற்ப குறைக்கப்படவேண்டும். இதற்கு வலுவூட்டும் விதத்தில் தகவல் சுதந்திரச் சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவேண்டும். அத்துடன் நடைமுறையிலுள்ள மக்கள் நலனோடு சம்பந்தப்பட்ட சுதந்திர தகவல் வெளிப்பாட்டுக்கு தடையாக உள்ள அனைத்தும் மறுபரிசீலனைக்குள்ளாக்கப்பட வேண்டும்.

6. அடிப்படை உரிமை மீறல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான - உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் உள்ள பரிகாரங்கள் மீளப்பரிசீலிக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். ஐ.சி.சி.பி.ஆர். இனாலும், சித்தரவதை தொடர்பான பிரகடனத்தினாலும் (ICCPR and Torture Convention) உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணை மாற்றங்களுக்கு (International Tribunals) தனிநபர்கள் குற்றமனுத்தாக்கல் செய்ய அனுமதிப்பதுடன் அரசாங்கம் உயர்நீதிமன்றத்தின் நீதித்துறையை மனித உரிமைகள் விசாரணைக்கும் நீடிக்க வேண்டும்.

7. அவசரகால சட்ட அதிகாரங்கள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட விடயங்களில் மட்டும் பயன்படுத்தப்பட முடியும் என அரசியலமைப்பு சட்டம் தெரிவிக்க வேண்டும். அவை ஒரு போதும் சாதாரண சட்ட நடைமுறைகளை பாதிக்கும் விதத்தில் பயன்படுத்தப்படக்கூடாது. அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படும் போதும், புதுப்பிக்கப்படும் போதும் அதற்கான காரணங்கள் தெளிவாக்கப்படுவதுடன், எந்தெந்த விடயங்கள் நிறைவேற்றப்பட்டதும் அது அகற்றப்படும் எனவும் தனியாக தெரிவிக்கப்பட வேண்டும். இத்தகைய பிரகடனங்களும் சரி, புதுப்பித்தலும் சரி நியாயமானவையா என்பதை ஆராய நீதிமன்றங்களுக்கு அதிகாரத்தை அரசியலமைப்பு வழங்கவேண்டும்.

8. ஐ.சி.சி.பி.ஆர். இன் 19வது சரத்தின் 3வது பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிவிலக்கான அம்சங்கள் தவிர்ந்த ஏனையவற்றில் அடிப்படை உரிமைகள் - கருத்து வெளிப்பாடு மற்றும் தகவல் சுதந்திரம் உட்பட்ட உரிமைகள் - மீது எத்தகைய கட்டுப்பாடும் விதிக்கப்படமாட்டாது என்பதை அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்த வேண்டும்.

9. பயங்கரவாதத் தடைச்சட்டம் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதுடன், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துடன் அது ஒத்துப்போகும் விதத்தில் திருத்தப்படவும் வேண்டும்.

12. பாராளுமன்ற அதிகாரங்களும் சிறப்புரிமையும் (Power and Privileges) தொடர்பான 1953 ஆம் ஆண்டுச் சட்டத்திற்கான 1978ஆம் ஆண்டு திருத்தம் நீக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தை அவமதித்த குற்றம் ஒன்று சாட்டப்படும் பட்சத்தில் சர்வதேச சட்டத்திற்கமைய உள்ள கருத்து வெளிப்பாட்டு சுதந்திர உரிமையால் பாதுகாக்கப்படக்கூடியதாக உள்ளதா என ஆராயப்படல் வேண்டும் என்பதுடன் இவ்வாராய்வு பாராளுமன்ற உறுப்பினர்களால் அல்ல மாறாக, ஒரு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தினதும் அதன் உறுப்பினர்களதும் நடவடிக்கைகள் தொடர்பான மக்கள் நலன் சார்ந்த தகவல்களை வெளிப்படுத்தும் உரிமை சட்டரீதியாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

13. பத்திரிகை ஆசிரியர் பீடத்தினதும், பத்திரிகைத்துறையினதும் சுயாதீனத்தைப் பாதுகாக்கும் விதத்தில் பத்திரிகைக் கவுன்சில் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

14. தொடர்பு சாதனத்துறை மக்களுக்கு தகவல்களை அளித்தல், அரசாங்கத்தை கண்காணித்தல் ஆகிய தனது இரட்டைப் பணியைச் சுதந்திரமாகச் செய்வதற்கேற்ற விதத்தில், மானநஷ்டம் கோரும் சட்டம் (Defamation law) மீள்பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக குற்றவியல் சட்டத்தின் 47ஆம் பிரிவு குறிப்பிடுவது போல, இதை ஒரு கிரிமினல் குற்றமாக கருதி சிறைத்தண்டனை விதிப்பது நீக்கப்பட்டு, அரசியல்வாதிகளும், உயர் மட்ட அதிகாரிகளும் தனிநபர்கள் போலல்லாது உயர் மட்ட விமர்சனங்களுக்கு முகம்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும் என்பது அறிவிக்கப்பட வேண்டும்.

15. இராஜதுரோகம் தொடர்பான குற்றவியல் சட்டத்தில் 120வது பிரிவு, கருத்து முரண்பாட்டினை வெளிப்படுத்தும் சட்ட பூர்வ உரிமையை பாதுகாப்பதற்கேற்ற விதத்தில் திருத்தப்பட வேண்டும்.

16. மக்களின்நலன் சார்ந்த தகவல்களைச் சேகரிக்க, பெற்றுக்கொள்ள உள்ள உரிமையை நெருக்கடிக்குள்ளாக்கும் விதத்தில் அமையாவண்ணம் அலுவலக இரகசிய காப்புச் சட்டம் (Official Secret Act) திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

17. அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் நிறுவனத்தினை அரசுடமையிலிருந்து இல்லாமல் செய்தல்; இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஐ.ரி.என்., ரூபவாஹினி போன்றவற்றை நிர்வகிக்க ஒரு நிர்வாக சபையையும், நிதி அமைப்பையும் உருவாக்கி இவற்றைச் சுதந்திரமாக இயங்க அனுமதிப்பதன் மூலம், இச்சேவைகள் சுதந்திரமாகத் தமது பொதுமக்கள் சேவையைச் செய்ய அனுமதித்தல்; தனியார் ஒலிபரப்பு நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் உரிமையைக் கொண்ட ஒரு சுதந்திரமான ஒலிபரப்பு அதிகார சபையை உருவாக்கல்.

18. தனியார் ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு நிலையங்களும் உள்ளூர் செய்திகளைச் சேகரிக்கவும், வெளிப்படுத்தவும் அனுமதித்தல்.

20. அரசாங்க விளம்பரங்கள் மற்றும் அவ்வாறான வழங்களினால் ஒரு தொடர்பு சாதனத்தின் மீது செல்வாக்குச் செலுத்த, மிரட்ட, சலுகை செய்ய முடியாத விதத்தில் சட்டத்தில் பாதுகாப்பு உத்தரவாதம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

21. வடக்குக் கிழக்கிலுள்ள நிலைமைகள் தொடர்பாக - மனித உரிமை மீறல்கள் உட்பட - முழுமையான செய்திகளை வெளியிட அனுமதிக்க வேண்டும். வடக்குக் கிழக்கிற்கு செய்தியாளர்கள் செய்தி சேகரிப்பதற்காகச் செல்ல விரும்பும் பட்சத்தில் அவர்கள் போவதற்கு உரிய வாய்ப்பை வழங்குவதும், அவர்களுக்கு முழுமையான தகவல்களை வழங்குதலும் வேண்டும்.

25. மக்கள் நலன் அடிப்படையில் தகவல்களை வெளியிடுவது, பிரசுரிப்பது என்பவை சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். தகவல்களை மூடிமறைக்கவும், இவை தொடர்பாக மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட விவாதங்களை நடக்க விடாமல் தடுக்கவும் வசதியாக மானநஷ்ட இழைப்புக்குற்றம், தேசத்துரோ...

## 06 மார்ச் 1995

மார்ச் 6ஆம் திகதி இரவு எட்டரை மணி போல் 'மஹர'வில் உள்ள தனது இல்லத்திற்குச் செல்லும் வழியில் 'பெரளிய' ஆசிரியர் சுஜீவ கமகே காடையர்களால் தாக்கப்பட்டார். இவர் லக்சிறி என்ற இன்னொரு நண்பருடன் முற்சக்கர வண்டியில் வந்து இறங்கிச் செல்கையில், சிவப்பு நிற பஜிரோவில் வந்த சிலர் அவரை அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர். தாக்கியவர்களில் ஒருவர் பொலிஸ்காரரைப் போல் இருந்ததாகவும் சுஜீவ தெரிவித்தார். சுஜீவவின் நெஞ்சிலும் தலையிலும் கடுமையாக தாக்கப்பட்டதால் அவர் மயக்கமுற்றார். எழும்பிய போது வாந்தியெடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது "தாக்கியவர் கையில் கத்தியுடன் இருந்தார். அவரரோடு வந்திருந்த பத்துக்கும் மேற்பட்டோரும் கையில் கைத்துப்பாக்கிகளும் வேறு ஆயுதங்களும் வைத்திருந்தனர். பெரளியவை மூடும்படி டொக்டர் சேனரத்தவிடம் போய்ச் சொல்லு, இல்லாவிட்டால் அவரது இரண்டு பிள்ளைகளையும் கொன்று விடுவோம் என்றும் சொல்லு. அத்துடன் நீயும் பத்திரிகைக்கு எழுதுவதை நிறுத்திக்கொள் என்று தாக்கியவர் மிரட்டியதாகவும் தெரிவித்தார்.

சுஜீவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவரைக்காணச் சென்ற பத்திரிகையாளர்களிடம் "நேற்றிரவு JMO வந்து வாக்குமூலம் எடுத்துச்சென்றார். எனினும் இதுவரை பொலிஸார் எதுவித விசாரணைக்காகவும் வரவில்லை."

இப்படியொரு சம்பவம் நடந்ததைப் பற்றி சண்டே லீடர் பத்திரிகை தவிர வேறெந்த பத்திரிகையும் செய்தி வெளியிடவோ கண்டனம் தெரிவிக்கவோ இல்லை.

பெரளிய ஒரு மாற்றுப் பத்திரிகை. ஏனைய பத்திரிகைகளை விட காரசாரமான விமர்சனங்களைக் கூறும் இவ்வகைப் பத்திரிகைகளுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை அவ்வப்போது கண்டிக்காவிட்டால் பல உண்மைகளை வெளிக்கொண்டு வர முடியாது போகும் என சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

## 08 மார்ச் 1995

'லக்பிம' சிங்கள வாரப்பத்திரிகையின் ஆசிரியர் பந்துல பத்மகுமார மற்றும் பிரதி ஆசிரியரான சுதந்திர பத்திரிகையாளர் இயக்க செயலாளருமான சமன் வகஆராச்சி ஆகியோர் நான்காம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

ஏழாம் திகதி காலை லக்பிம காரியாலயத்துக்குள் புகுந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அங்கு அவர்களை விசாரித்துவிட்டு அடுத்தநாள் காலை 4ஆம் மாடிக்கு வரும்படி ஆணையிட்டு விட்டு சென்றனர். அடுத்த நாள் அங்கு சென்றிருந்த போது இரண்டு மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை நடத்தினர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பற்றி எழுதப்பட்டிருந்த செய்தியொன்றைப்பற்றியே, புலனாய்வுப் பிரிவினர் (CID) விசாரித்தனர். குறிப்பிட்ட தகவல் எங்கிருந்து கிடைத்தது? அதை வழங்கியது யார்? எழுதியது யார்? என்றாவாறான கேள்விகள் கேட்கப்பட்டன.

அந்தக் கேள்விகளைத் தொடர்ந்து 'இந்த கேள்விகளை நீதிமன்றத்தில் வைத்து கேளுங்கள்' என பத்திரிகையாளர்கள் இருவரும் தொடர்ந்தும் எதிர்ப்பைக் காட்டினர். அதற்கிடையில் அந்த குறிப்பிட்ட செய்தி வெளியாகியிருந்த அந்த 'மெஷின் பிளேட்'டுகள் இரண்டையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த சம்பவத்துக்கெதிராக 'தணிக்கைக்கு எதிரான சர்வதேச அமைப்பு' (Article 19) கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தது.

## 15 மார்ச் 1995

"நாங்கள் பத்திரிகையாளர்கள் என்று கூறியும், எங்களது பத்திரிகையாளர் அடையாள அட்டையைக் காட்டியும் எங்கள் இருவரையும் தாக்கிக் கைது செய்து சென்றனர் பொலிசார்.

எங்களைத் தாக்கி ஜீப்பில் ஏற்றியது மட்டுமல்லாமல் எங்களது கமெராவை மோசமான முறையில் சேதப்படுத்தி விட்டனர்."

மார்ச் 15ம் திகதி ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவமொன்று தொடர்பாக தகவல் சேகரிக்கச் சென்ற ஹிரு பத்திரிகையாளர்களில் ஒருவரான லக்ஷ்மன் மேற்படி தெரிவித்தார்.

மார்ச் 15ம் திகதியன்று, (மாணவர் போராட்டம் காரணமாக மூடப்பட்டிருக்கும்) ஸ்ரீஜயவர்த்தன புர பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர் சிலரை பல்கலைக்கழகத்தில் இருக்கும் அவர்களது உடைமைகளை எடுத்துச் செல்லும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதை நம்பிய மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றிருந்தபோது அங்கு தங்களை கைது செய்வதற்கான முயற்சி பிட்ட சில இளைஞர்களை பிடித்து வாகனத்திற்குள் தள்ளினர். ஹிரு பத்திரிகையாளர் லக்ஷ்மன் இவற்றை விரைவாக படம் பிடித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அருகில் கிரீச்சென்று நின்றது இன்னும் இரண்டு பொலிஸ் வாகனங்கள் (ஒன்று 42 - 9581 இலக்கம் கொண்ட பொலிஸ் டிரக், மற்றையது 61 - 7473 இலக்கம் கொண்ட வேன்) அதிலிருந்தும் பல பொலிஸார் இறங்கினர். அவர்கள் ஓடிவந்து ஹிரு பத்திரிகையாளரிடம் இருந்த கமெராவை பறிப்பதற்கு மல்லுக்கட்டினர். பத்திரிகையாளர்கள் இருவரும் அதை பறிக்க விடாது தடுத்தனர். பொலிஸார் இறுதியில் வெற்றி பெற்றனர். லக்ஷ்மன், சுசந்த ஆகியோர் பொலிஸாரின் பொல்லுகளினால் பலமாகத் தாக்கப்பட்டனர். தாங்கள் பத்திரிகையாளர்கள் என்று அடையாள அட்டைகளைக் காட்டியும் கூட தாக்குதலை நிறுத்தவில்லை. இவ்வாறு தாக்கியவர்கள் 6483, R26577, R27396, R32623 ஆகிய இலக்கங்களைக் கொண்ட பொலிசார் என பத்திரிகையாளர்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற செய்தியறிந்தவுடன் உடனே தொலைபேசி மூலம் 'ஹிரு' பத்திரிகைக்கு தகவல் தெரிவித்துள்ளனர். ஹிரு பத்திரிகையிலிருந்து ஆசிரியர் குழுவைச் சேர்ந்த லக்ஷ்மன் பெந்தொட்டகே மற்றும் புகைப்படப்பிடிப்பாளர் சுசந்த விஜேசேகர ஆகியோர் பல்கலைக் கழகத்திற்கு விரைந்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் சீ.தொரகும்பரவை சூழ்ந்து கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழ வளாகத்துக்குள் பொலிஸ் வாகனங்கள் நுழைந்திருப்பதன் காரணத்தை வினவினர். "அது மாணவர்களது பாதுகாப்புக்காக..." என்றார் துணைவேந்தர். "அப்படியென்றால் ஏன் கை விலங்குகளோடு அலைகின்றனர்?" எனக்கேட்டார்கள் மாணவர்கள். "எவரையும் கைது செய்வதற்காக அல்ல" என்றார் துணை



லக்ஷ்மன் பெந்தொட்டகே

வேந்தர். "இல்லை மாணவர்களை கைது செய்வதற்காகவே அவர்கள் வந்திருக்கின்றனர். பொலிஸாருக்கு குறிப்பிட்ட சில மாணவர்களது பெயர் பட்டியல் வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். எங்களால் அவர்களின் பெயர்களையும் கூறமுடியும். இதற்கென்ன கூறுகிறீர்கள்?" என மாணவர்கள் வினவினர். அவரது பதில் திருப்தி தராமல் போகவே மாணவர்கள் தங்களது அதிருப்தியையும் வெறுப்பையும் தெரிவித்துள்ளார்கள்.

இவற்றை நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருந்த ஹிரு பத்திரிகையாளர்களுக்கு அங்கு திட்டமிட்டு நடத்தப்படும் நாடகத்தை ஓரளவு உணரமுடிந்தது. தாம் சந்தேகப்படும்படியான சகல நிகழ்வுகளையும் கமெராவுக்குள் பதித்தனர். நான்கு மணியளவில் தங்களைத் தாண்டி இன்னுமொரு பச்சைநிற (32 ஸ்ரீ852) பொலிஸ் பஜிரோ ஒன்று சென்றதைக் கண்ட அவர்கள் உடனே படம் பிடித்தனர்.

அந்த வாகனம் சில மீற்றர் தூரம் சென்று திடீரென்று நின்றது. அதிலிருந்து விரை இறங்கிய பொலிஸார். குறிப்பிட்ட சில மாணவர்களைக் கைது செய்ததாக தெரிவிக்கின்றனர். பின் மாணவர்களை ஏற்றிக் கொண்டு ஜீப்பும், பத்திரிகையாளர்களை ஏற்றிக்கொண்டு வேனும் மீரிஹான பொலிஸை நோக்கிச் சென்றது.

ஹிரு பத்திரிகை அலுவலகத்திற்கு தகவல் கிடைத்ததும் மீரிஹான பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, "அப்படி எவரையும் கைது செய்யவில்லை" என மழுப்பியிருக்கின்றனர். இதனால் ஹிரு சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் அமைப்பு, சர்வதேச தணிக்கைச் சபை என்பவற்றிற்கும் உடனே தகவல் அனுப்பினர். இதன் பயனாக மாலை 'சிரச FM' எனும் வானொலிச் சேவை செய்தியில் இந்த செய்தி அறிவிக்கப்பட்டது. பின்னர் அன்று இரவு TNL, BBC போன்ற செய்திகளிலும் இத்தகவல் வெளியானது.

இதற்கிடையில் அமைச்சர் மங்கள சமரவீர, சனத்குணத்திலக்க (எம்.பி) ஆகியோர் பொலிஸ் நிலையம் வந்து பொலிஸாரைக் கண்டித்தனர்.

அவ்விடத்துக்கு வந்த 'சுதந்திர பத்திரிகையாளர் இயக்கத்தின் தலைவர் லூஷியன் ராஜகருணநாயக்க பொலிஸ் அதிகாரியை நோக்கி "பத்திரிகையாளர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திய போதும் ஏன் அவர்களை கைது செய்தீர்கள்?" என்ற கேட்டதற்கு "பொலிஸாரின் கடமையை செய்வதற்கு இடையூறு விளைவித்தனர்" என்று சொன்னார் பொலிஸ் அதிகாரி. ஹிரு பத்திரிகையாளர்களை நோக்கி "என்ன இடையூறு விளைவித்தீர்களா?" என்று விசாரித்த போது "பொலிஸார் பல்கலைக்கழகத்துக்குள் நடத்திய திருவிளையாடல்களை நாங்கள் புகைப்படம் எடுத்ததைத்தான் இவர் இடையூறு என்கிறார்" அதற்கு லூஷியன் மீண்டும் அதிகாரியை நோக்கி "உமது கடமையை நீர் செய்ததைப் போன்றே, பத்திரிகையாளர்கள் அவர்களது கடமையைச் செய்துள்ளனர். அது எப்படி உங்களுக்கு இடையூறாகும்? பார்க்கப் போனால் அவர்களது கடமைக்கு நீங்கள் தான் தடையாக இருந்துள்ளீர்கள். அதிகாரம் உங்களிடம் இருந்ததற்காக எந்த அடாவடித்தனமும் செய்யலாமா" என்று வாதிட்டார். பொலிஸ் அதிகாரிகளால் சரியான பதிலளிக்க முடியவில்லை.

இதுவரை பத்திரிகையாளர்களுக்கு எதிராக நடைபெற்ற ஏனைய சம்பவங்களைப் போன்றே இச்சம்பவத்துக்கும் அரசு பொறுப்பேற்கவுமில்லை: எந்த வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவுமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**அ**ரசியலமைப்பு சீர்திருத்தத்தினை மேற்கொள்ளவென பொ.ஐ.ஐ.மு. அரசாங்கத்தின் சார்பில் சட்டப் பேராசிரியரும் நிதியமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டதாக கூறப்படும் அரசியலமைப்புச் சட்டத்திற்கான முதல்வரைவு வெளியிடப்பட்டுள்ளது தெரிந்ததே. இவ்வரைவு பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


இவ்வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் தொடர்பாக சட்ட அறிஞர்களுடைய அபிப்பிராயங்களை திரட்டும் விதத்தில் இந்தப் பகுதி தொடங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் இம்முறை கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் எழுத்தாளருமான திரு.வி.ரி.தமிழ்மாறன் அவர்களுடனான கலந்துரையாடலிலிருந்து முக்கிய பகுதிகள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன. திரு.தமிழ்மாறன் அவர்கள், உலகெங்குமுள்ள ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரச்சினை தொடர்பாகவும், மனித உரிமைகள் தொடர்பாகவும் அக்கறையுடன் எழுதிவருபவர். 'தமிழ் மாறன் கட்டுரைகள்', 'இனப்பிரச்சினைத்தீர்வுகள்' என்ற பெயர்களில் இவரது கட்டுரைகள் அடங்கிய இரு நூல்கள் ஏற்கெனவே வெளியாகியுள்ளன.

ஆ–ர்

## அரசியலமைப்பு சீர்திருத்தம்

# 'ஒன்றும் புதிதாக இல்லை'

### -வி.ரி.தமிழ்மாறன்



## நேர்காணல் .1-

***பொ**துஜன ஐக்கிய முன்னணி அரசில் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் புதிய அரசியலமைப்பு இலங்கை ஒரு பல்லின சமூகம் என்பதை உறுதிப்படுத்துகின்றதா?*

குறித்த ஏற்பாட்டைக் குறித்துச் சொல்லப்பட வேண்டிய பகுதி இன்னமும் வெற்றிடமாகவே விடப்பட்டுள்ளது. அவர்களுடைய இந்த முதலாவது வரைபை முழுமையாக ஆராய்ந்து பார்த்தால் இலங்கை ஒரு பல்லினச் சமூகம் என்றோ அல்லது இலங்கையை சமஷ்டி அமைப்பொன்றின் கீழ் கொண்டு வருவதற்கான கருத்துக்களோ இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் இலங்கை ஒரு ஒற்றையாட்சி அமைப்பென்பதை வலியுறுத்தக்கூடிய வேறுசில ஏற்பாடுகள் அதனுள் இருக்கின்றன.

குறிப்பாக, பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டிருப்பது. மற்றையது, சட்டம் முறைப்படி ஆக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை நீதிமன்றம் பரிசீலனை செய்ய முடியாது. இதே போல் ஏற்கெனவே இருக்கின்ற அல்லது இனிமேல் ஆக்கப்படுகின்ற சட்டங்கள் அரசியலமைப்புக்கு முரணாயிருப்பினும் செல்லுபடியாகும் என்கிறது சரத்து.

இதுதவிர அடிப்படை உரிமைகளைப் பொறுத்தளவில் கூட இரண்டு வருடத்துக்குள் மட்டும் தான் கேள்வியெழுப்பலாம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கூடத் தெளிவாக இல்லை, இரண்டு வருடத்துள் நீதிமன்றம் அதனை முரணானது என்று சொன்னால் அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாது.

ஏனென்றால், உள்ளுக்குள் ஒரு பிரிவு கூறுகிறது; முரணான சட்டங்களும் செல்லுபடியாகும் என்று. இந்தத் தெளிவின்மை இருக்கிறது.

இவையெல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கிற போது பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்கிற அல்லது கூடிய அதிகாரப்பகிர்வை உருவாக்கும் நோக்கம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

***இந்த அரசியல் யாப்பு இலங்கை ஒரு மதச் சார்பற்ற நாடு என தெளிவுபடுத்துகிறதா?***

இதில் இரு விடயம் இருக்கிறது. ஒன்று, அரசு மதச் சார்பற்றது என வெளிப்படுத்தலாம், அல்லது தான் மதச்சார்பானது என்பதை அரசியல் அமைப்பில் குறிப்பிடாமல் விடலாம். மதச்சார்பற்றது என்று கூறுவது கூட சற்றுக் கடினமாய் இருக்கலாம். ஆனால் ஏன் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்கிறோம் எனச் சொல்ல வேண்டும்? இதனை யாப்பில் சொல்லாமல் விட்டிருக்கலாம். ஏனெனில், பின்னர் சமஷ்டி, அதிகாரப் பரவலாக்கல் என்று வியாக்கியானம் செய்யும் போது இவ்வேற்பாடு அதனைத்தடுக்கும்.

ஏற்கெனவே உள்ள அரசியல் அமைப்பில் இலங்கை ஒரு ஒற்றையாட்சி என்று இருந்ததால் 13வது திருத்தச்சட்டத்தின் வியாக்கியானத்தை கூட எல்லைப்படுத்தப்பட்டிருந்தது. பரந்த வியாக்கியானம் நீதிமன்றம் எடுக்க முடியாதபடி இவ்வாறான ஏற்பாடுகள் தடுக்கும். ஆகவே இவ்வாறான ஏற்பாடுகளை உள்ளடக்க வேண்டிய அவசியம் இல்லை.

***பிரஜாவுரிமைச் சட்டம் தொடர்பாக 1978ஆம் ஆண்டுக்கான அரசியலமைப்புக்கும் புதிய அரசியலமைப்புக்குமான வேறுபாடு என்ன?***

பிரஜாவுரிமைச் சட்டம் 1978 யாப்பில் உள்ளது போல அப்படியே இருக்கிறது. அதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

***புதிய அரசியலமைப்பில் தமிழ் மொழியின் நிலை என்னவாக இருக்கிறது?***

சிங்களமும், தமிழும் உத்தியோக பூர்வ மொழி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுதான். ஆனாலும் அதில் சில மட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. எவ்வாறெனில், இப்போது எழுத்திலுள்ள சட்டங்களும் சரி, எழுத்தில் இல்லாத சட்டங்களும் சரி, அது அடிப்படை உரிமைகளுடன் முரண்பட்டாலும் சரி, முரண்படாவிட்டாலும் சரி தொடர்ந்து இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே உத்தியோகபூர்வ மொழி தொடர்பாக தற்போது நடைமுறையில் இருக்கும் - சில இடங்களில் பாரபட்சமாக இருப்பினும் - பல்வேறு சட்டங்களும் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. இதே வேளையில், ஏற்கெனவே ஒரு பிரதேசத்தில் ஒரு மொழி பாவிக்கப்பட்டு வந்து, புதிய மொழிக்கொள்கை காரணமாக வேறொரு மொழி பாவிக்கவேண்டி இருப்பின் முன்பிருந்த நிலையில் பாதிப்பு ஏற்படாமல் பாவிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சிங்கள மொழி பாவிக்கப்பட்டு வந்த பகுதிகளில் புதிதாக எல்லை மாற்றம் செய்யப்படின் தமிழ் மொழியைப் பாவிக்க வேண்டியேற்பட்டால், முன்பிருந்த நிலையில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்று அதாவது அப்பகுதிகளில் சிங்களமொழி பாவனையை உறுதிப்படுத்தும் விதமாக அவ்வாறு கூறியிருக்கிறார்கள்.

***புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு பேரவையில் சிறுபான்மையினர் பங்குபற்ற வாய்ப்புண்டா?***

தேசிய ஒருமைப்பாட்டைக் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதே அவர்களுடைய முக்கிய நோக்கமாக இருக்கிறது. இனங்களுக்கிடையே உள்ள உறவைப் பேணுவதில் சரியான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்ற அக்கறை செலுத்தப்படவில்லை. ஜனநாயகத்தை மேம்படுத்தினால் அதன் மூலம் சிறுபான்மையினர் தங்களது உரிமைகளையும் பெற்றுக் கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு தான் அதில் தெரிகிறது. இரண்டாவது சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதில் இரட்டைப் பெரும்பான்மையைக் கொண்டுவருவது தான் சிறுபான்மையினரின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்கு உள்ள வழி என்பது எமது அபிப்பிராயம்.

எனவே முதலில் இரண்டாவது சபை ஏற்படுத்தப்பட வேண்டும். அதில் சிறுபான்மையினருக்குப் பிரத்தியேக உரிமை இருக்க வேண்டும் - கிட்டத்தட்ட ''வீட்டோபவர்'' மாதிரியானதாக. தங்களுக்குப் பாதகமான விடயங்களை சிறுபான்மையினர் நிராகரிக்கின்ற உரிமையை இந்த இரண்டாவது சபையினுள் தான் வழங்கலாம். இரண்டாவது சபை உருவாக்கப்பட்டு இரட்டைப் பெரும்பான்மை ஏற்றுக் கொள்ளப்பட்டால் அரசியலமைப்புப் பேரவை சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் குறைந்ததாகிவிடும்.

→15

# வனத்தின் அழைப்பு

## பகுதி 2: தவம்

அ
புல்பூண்டுகள் பூச்சிபுழுக்கள்
உடலில் படர்ந்திருக்க
சாம்பல் மேட்டில் கரம் கூப்பி
காலுயர்த்தி
அகோர தவத்தில் உறைந்து போனான்!

வில்லோய்ந்து கிடந்தது!
நெஞ்சுக்குழிக்குள் பொங்கிய அலைகள்!
போர் ஆரம்பமானது.
இதயத்தின் ஒவ்வொரு முடுக்கிலும்!

சுடலைப் பொடி பூசி
வனங்களில் அலையும் கோர முனிகள்!

வில்லும் அம்பும் புறப்பட்ட நினைவு
வருவது போர் என்பது போல்
அவனின் நினைவு!
நதியைப் போல் வந்தது
புயலாய்ப் போனது!
எதை எடுத்துச் சென்றது!
எதைத்தான் விட்டுச் சென்றது!

வானில் எப்போதாவது
பறந்துபோமோர் வெண்ணிறக்கூட்டம்!
திடீரெனத் தாக்கும் கொடூர குளிர்!

அன்பிற்கும் குரலில்லை!
அவலத்திற்கும் அவள் செவிதரவில்லை!
வானம் பூமி இரண்டாய்ப் பிளந்த இரவில்
அவன் சிதறிக் கிடந்தான்!

★★★

ஆ
எழுந்து போய்
விண்மீன்கள் விடிவெள்ளி
என்றவாறு தென்றலில் சுகித்திரு!
மரண தூதனின்
கதையினை எழுதுவேன்!

அந்த வாசலில் அவன் நின்றான்!
மரணத்தின் சிரிப்பு!
உயிர்ப்பற்ற செய்தியை ஈய்ந்தவன் சிரித்தான்
எப்படி சிரிக்காதிருக்க முடியும்!
முடிவற்ற மரணம் அவனை உறைக்கவில்லை!
அதிலவனிற்கு திருப்தியில்லை!

அழுவானென்று நம்பமுடியவில்லை!
இனியும் ஏதேனும்
பகிடி விட்டு சிரித்திட முடியும்
என்ற நம்பிக்கையும் பொய்த்து விட்டது!
அவன் அறிவான்!
கண்முன் நடந்ததை விட
காணாமல் போனது
எதைவிட்டுச் செல்லும் என்பதை!

★★★

இ
முகில் வரைந்த சிகரங்களில்
விழுந்தடித்தேற மனிதர்கள் இல்லை!
மண்ணின் தழும்பில்
கால் பதிந்து மனிதர் போயினர்

வனத்தின் நெடும்பரப்பில்
உதித்தெழுந்த சிறுகுடில்கள்
உக்கிப் போயின!
வானம் பார்த்த பூமி
குனிந்து நிற்க
பெருநகர் வீதியில்
தரிசு நிலங்கள் விதைக்கப்பட்டன!

எல்லைக்கப்பால் வெகு தொலைவிலும்
எச்சலனமும் இல்லை!
ஓடிப்போனவரின் ஒருமுகமும் இல்லை!
அறைகூவல் கோஷங்கள்
நிறைந்த பழங்காலக் கூட்டங்கள் போல்
அவர்களின் நினைவு!
விரக்தியில் தோயும் சொற்களுடன்
ஒப்புவமை மிக்க நியாயங்கள்!

சுருதிசேர ஏலாது
பேராறுகள் பெருங்கடல்கள்
தாண்டிப்போன நண்பர்களே
பேசுங்கள்
ஒருமுறையாவது கடலுடன் பேசுங்கள்

www.tamilarangam.net



# அதிகாரப் பரவலாக்கமும் அபிவிருத்தியும்

திறந்த பொருளாதாரம் பற்றிய எனது கட்டுரைத் தொடரை யொட்டி ச.தியாகராசா அவர்கள் எழுதியுள்ள சரிநிகர் (ஜனவரி 26 - பெப் 8) குறிப்புக்கள் தொடர்பாக இதை எழுதுகிறேன். அதிகாரப்பர வலாக்கம் பற்றிய அவரது பொது வான கருத்துக்களைப் பற்றி எனக்கு பாரதூரமான வேறுபாடு இல்லை. ஐ.தே.கட்சிக்கால பொரு ளாதாரக் கொள்கை முரண்பாடுகள் பற்றி நான் எற்கெனவே எழுதியி ருப்பதால் அவை பற்றி மீண்டும் பிரஸ்தாபிக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன். தியாகராசா தனது கட்டுரையின் கடைசிப் பகுதி யில் எழுப்பியுள்ள ஒரு பிரச்சினை பற்றி எனது கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

தியாகராசா கூறுகிறார் ''சமுத்திரன் எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சிக்குப் பன்முகப்படுத்தல் இலங்கைக்கு சாதகமாக அமை யாது. உண்மையான பன்முகப்ப டுத்தல் அபிவிருத்தியடைந்த அல் லது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குப் பொருந்தும். ஆனால் இனப்பிரச்சினை தீர்க்கப் படுமாயின் வடகிழக்கில் அபிவி ருத்தியானது நீண்ட கால.நோக்கில் மையப்படுத்திய அதிகாரத்தினைக் கொண்டதாக அமைதல் வேண் டும். அதற்கு அதிகாரத்தில் இருப்ப வர் தூய அபிவிருத்தி எண்ணம் கொண்டவராகக் காணப்படுதல் வேண்டும். அதன் பின்னர் நிர்வா கத்தைப் பன்முகப்படுத்தலாம்.

இங்கு இரண்டு அம்சங்களை விவாதித்தல் அவசியம்; முதலா வது - இன்றைய இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அதிகா ரப்பரவலாக்கல் உதவமாட்டாது எனும் அர்த்தப்பட தியாகராசா முன்வைக்கும் கருத்து. இரண்டா வது - இனப்பிரச்சினை தீர்ந்தால் வட - கிழக்கில் எப்படியும் மையப் படுத்தப்பட்ட அதிகாரமே அவசி யம் எனும் கருத்து. இவை பற்றிப் பார்க்கும் போது தியாகராசா குறிப் பிட்ட விடயங்களுக்குமப்பால் செல்ல விரும்புகிறேன்.

பொருளாதார வளர்ச்சிக்கும் அதி காரப் பரவலாக்கலுக்குமிடையி லான உறவை தெளிவாக்க ஒரு கோட்பாட்டுத்தளம் அவசியம். இதை நாம் அபிவிருத்தி எனும் பரந்த கோட்பாட்டின் உதவியுடன் உருவாக்கலாம். பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு மட்டத்தில் தேசியவருமானத்தின் அளவு ரீதி யான அதிகரிப்பையும், இன் னொரு மட்டத்தில் மூலதனத்தின் உருவாக்கத்தையும் அதன் திரட்சிப் போக்கினையும் மேலெழுந்தவாரி யாகப் பிரதிபலிக்கிறது. அதாவது பொருளாதார வளர்ச்சி ஒரு அளவு ரீதியான குறியீடு. அபிவிருத்தி எனும் போது இதையும் உள்ளடக் கிய ஒரு பரந்ததன்மை ரீதியான கோட்பாட்டைக் குறிக்கிறோம். இங்கு தேசியவருமானத்தின் பங் கீடு, பொது மக்களின் வாழ்க்கைத்த ரத்தின் அந்தஸ்து, மனித உரிமை கள் மற்றும் ஆண் - பெண் சமத்து வம் பற்றிய மாற்றங்கள், சூழலின் பராமரிப்பு போன்ற பல்வேறுபட்ட சமூக அரசியல் அம்சங்கள் முக்கி யத்துவம் பெறுகின்றன. அதிகாரப் பரவலாக்கலும் ஜனநாயக மயமாக் கலும் இவை எல்லாவற்றுடனும் தொடர்புடையவை. அதாவது அதிகாரப்பரவலாக்கல் என்பது பொருளாதார வளர்ச்சியுடனும், அத்துடன் சமானமான முக்கியத்து வத்தைக் கொண்ட வேறு பல அம் சங்களுடனும் தொடர்புடையவை. இன்றைய இலங்கையில் பொருளா தார வளர்ச்சியை மாத்திரமே பிர தான நோக்கமாகக் கொண்டு அர



சமுத்திரன்

சாங்கம் இயங்க முற்படுமாயின், அதன் சமூக அரசியல் விளைவுகள் பாரதூரமானவையாக அமையும் என்பதையும் இந்த விளைவுகள் மறுகட்டத்தில் பொருளாதார வளர்ச்சியைப் பாதகமாகப் பாதிக் கும் என்பதையும் நான் விளக்கத் தேவையில்லை என நம்புகிறேன். நாம் இன்று எதிர்நோக்கும் அரசாங் கமும் சமூக யதார்த்தமும் என்ன? ஒரு முதலாளித்துவ தேசிய பொரு ளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே ஆட்சியாளரின் கொள்கையும் நோக்கமுமாகும். ஆனால் இது ஒரு சமூக ஜனநாயக முதலாளித்துவ அமைப்பை மாதிரியாகக் கொண்டே நடைமுறைப்படுத்தப்ப டும் எனவும் ஆட்சியாளர் கூறுகி றார்கள். அதேநேரம் அவர்கள் வெளிவாரி காரணிகளின் நிர்ப்பந் தங்களினாலும் உள்வாரியான சில குறிப்பிட்ட வர்க்க நலன்களின் உந் துதலாலும் சுயபோட்டிச்சந்தையை அடிப்படையாகக் கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கையையும் பிரகடனம் செய்கிறார்கள். இலங் கையின் தேசியபொருளாதாரம் சர் வதேச முதலாளித்துவப் பொருளா தார அமைப்பின் ஒரு அம்சம் என் பது ஒரு புறநிலைபூர்வமான உண்மை. ஆகவே இலங்கைப் பொருளாதாரம் திறந்த பொருளா தாரமாக இருப்பது தவிர்க்க முடி யாதது. **ஆனால் இது எவ்வளவு தூரம் திறந்த பொருளாதாரமாக இருக்கும் என்பதையோ நீண்ட கால தேசிய பொருளாதாரமாற் றத்தின் கொள்கை என்ன என்ப தையோ அரசாங்கம் இதுவரை தெளிவாக்கவில்லை. ஜனாதி பதி சந்திரிகாவின் பிரகடனங்க ளிலோ அல்லது அமைச்சர் பேரா சிரியர் பீரிஸ் பாராளுமன்றத்தில் அங்கு அமர்ந்திருக்கும் அங்கத்த வர்களுக்கு நடத்தும் விரிவுரைக ளிலோ இதுபற்றிய விளக்கங்கள் எதுவுமே இல்லை.**

இந்த நிலையில் நீண்டகால பொரு ளாதாரமாற்றம், பொதுவான அபி விருத்தி அதிகாரப் பரவலாக்கல் போன்ற விடயங்கள் நாட்டின் மக் கள் ஜனநாயக சக்திகளின் உடனடி அரசியல் பிரச்சினைகளாகின்றன. இங்கு பல அம்சங்கள் முக்கியத்து வமடைகின்றன.

1. நீண்டகால பொருளாதார விருத்திக்கு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி இன்றியமையாதது. இதற் குச் சந்தைச் சக்திகளை மட்டும் நம் பியிருக்க முடியாது. தொழில் நுட் பங்களின் உள்வாங்கலுக்கும் விருத்திக்கும், அத்துடன் மனித வளங்களின் விருத்திக்கும் அரசின் பங்கு இன்றியமையாதது. இவை மூலதனத்தில் நலன்களுக்குச் சாதக மாயிருக்கும் அதேவேளை சமூகத் தின் முன்னேற்றத்திற்கும் தேவை யானவை. ஆகவே இவற்றிற்கான கோரிக்கைளை முற்போக்கு சக்தி கள் ஆதரிக்கவேண்டும்.

2. சுயமான மூலதனத்தின் வளர்ச்சி பிரதேச ரீதியில் அசமத்து வமானது. இதன் நீண்டகால விளைவுகள் பல பிரதேசங்களுக் குப் பாதகமாக அமையும். இதைக் குறைப்பதற்கு அதிகார பரவலாக்க லும் அத்துடன் இணைந்த பிரதேச ரீதியான அகக்கட்டுமானங்களின் (infrastructure) விருத்தியும் அவசி யம். இங்கு முதலாளித்துவத்தின் தன்னிச்சையான போக்கினைத்திட் டமிட்டு சமூகத்தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் வகையில் நெறிப்படுத்தவும், திட்டங்களை அமுல்படுத்தவும், அந்த அமுலாக் கலைக் கண்காணிக்கவும் அதிகா ரப் பரவலாக்கல் பயன்படுகிறது. இத்தகைய அதிகாரப் பரவலாக்க லுக்காகக் குரல் கொடுப்பதும், மக் கள் மட்ட போராட்டங்கள் இதற்கு உதவும் கோரிக்கைகளைய்யும் முன் வைப்பதும் இன்றையகால கட்டத் தின் தேவைகள் என்றே கருதுகி றேன்.

3. மேற்கூறியவற்றுடன் இணைய வேண்டிய இன்னொரு அம்சம், சூழலும் இயற்கை வளங்களின் நீண்டகால முகாமையும் ஆகும். சுயபோட்டிச் சந்தைகளால் அதா வது கட்டுப்பாடற்ற முதலாளித்து வத்தால் சூழல் பாதுகாப்பை உத்தி ரவாதப்படுத்த முடியாது. அதற்கு மாறாக இயற்கை வளங்களையும் சூழலையும் லாப நோக்கத்திற்காக சூறையாடும் போக்குகளே இடம் பெறும். சூழல் இயற்கை வளங்க ளின் பராமரிப்பிற்கு பிரதேச ரீதி யான சிறப்பியல்புகளுண்டு. இவற் றின் நீண்டகாலப்பயன்பாட்டை யும், சமூக உரிமைகளையும் உத்தர வாதம் செய்ய சந்தை மீதான கட் டுப்பாடுகள் மட்டுமல்ல பிரதேச மற்றும் கிராமிய மட்ட முகாமை நிறுவனங்களும் தேவை. இவற் றிற்கு அதிகாரப் பரவலாக்கம் இன் றியமையாதது. இங்கு விவசாயி கள், மீனவர்கள், குடிசைக் கைத் தொழிலாளர்கள், கிராமிய கூலி உழைப்பாளர்கள், பிரதேச இயற்கை வளங்களைப் பயன்படுத் தும் பெரு உற்பத்தி ஸ்தாபனங்க ளில் பணியாற்றும் தொழிலாளர் கள் போன்ற பல சமூகக்குழுக்க ளின் நலன்கள் சம்பந்தப்பட்டிருப் பது கண்கூடு.

அடுத்த இதழில் முடியும்



# வி.பியின் பெயரால் தலைநகரில் ஒரு திருவிழா!

-வரது

குமாரசுவாமி விநோதன் (சட் டத்தரணி) அவர்களின் நிகழ்ச்சித் தொடரில் அமரர் தோழர் வி.பி. யின் நினைவு-பொன்மலர் வெளி யீட்டு விழா கடந்த 12ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவுக்காக வகைவகை யான துண்டுப்பிரசுரங்கள் ஏற்கெ னவே தலைநகரில் விநியோகிக் கப்பட்டிருந்தன. முதலில் வெளியி டப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் வி.பி. நினைவுக்கூட்டம் என்ற எழுத்தமைப்பு பெரிதாக இருக்கும் படியாக, ***'கவிதா அமர்வு யார் இந்த வி.பி?'*** என்று குறிப்பிடப்பட் டிருந்தது. சற்று சிறிய எழுத்தமைப் பில் தலைவர் குமாரசுவாமி விநோ தன் அவர்கள் (சட்டத்தரணி) என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இரண்டாவது துண்டுப் பிரசுரத்தில் ஒரு பக்கம் ஆங்கிலத்திலும் மறுபக் கம் தமிழிலும் அச்சிடப்பட்டருந் தது. அதில் வி.பொன்னம்பலம் என்பதும் விநோதன் குமாரசுவாமி என்பதும் பெரிய எழுத்துக்களில் (ஓரளவில்) இருந்தன. தமிழ்ப்பக் கத்தில் கே.எஸ்.பாலச்சந்திரனின் 'அண்ணை றைற்' போன்ற கலைநி கழ்ச்சிகள் மூலம் வி.பிக்கு அஞ்சலி செலுத்தப்படும் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. ஆங்கிலப்பக்கத்தில் அப்படி அஞ்சலி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

விநோதன் அவர்கள் ஆரம்ப உரையை ஆற்றினார். 5ம் திகதி நடத்த இருந்ததாகவும் வைரமுத்து, பானுப்பிரியா வந்திருந்ததால் இங்கு ரசிகர்கள் (?) குறைந்து விடு வார்கள் என்பதால் (விநோதன் சொன்னது இப்படித்தான் - 'அவர் களுக்கு போகும் அளவு ரசிகர்கள் வி.பிக்கும், சிறிமாவுக்கும் வரமாட் டார்கள்') பின்போட்டதாகச் சொன்னார்.

விநோதனின் நிகழ்ச்சித் தொடரில் இனி கே.எஸ். பாலச்சந்திரன் இன்றி இந்தியக் கலைஞர்களையும் எதிர்பார்த்தால் ஆச்சரியப்படுவ தற்கில்லை.

கடந்த பொதுத் தேர்தலின் போதும் அதன்பின்பும் டீரோன் பெர்ணாண் டோவுக்கு-அஞ்சலி நடனம் நிகழ்த்திய திருமதி நிர்மலா ஜோனின் நடன அஞ்சலி நிகழ்ச்சி வி.பிக்கு நடைபெற இருந்தது. ஆனால் மின்சாரம் நின்றுவிட்டது!

ஆனந்த சங்கரி அவர்கள் பேசும் போது தாம் முன்பு எதிர்க்கட்சியில் இருக்கையில் பாராளுமன்றக்குழு வில் வெளிநாடு போக ஆசைப்படு வதற்கான காரணம் சாம்பியா போய் வி.பியைப் பார்க்கத்தான் என்றார்.

மற்றைய கூட்டணி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் யார் யாரைப் பார்ப்பதற்கு வெளிநாடு போனார் கள் என்பது, ஆனந்த சங்கரியைப் போல உண்மையைச் சொல்லும் சுத்தமான மனசு உள்ளவர்கள் பங் குபற்றக்கூடிய, இது போன்ற நினைவு விழாக்கள் இனி இனி வந் தால் தான் தெரியும்!

அக்காலத்தில் கூட்டணி பாராளு மன்ற உறுப்பினர்கள் எமது போராட்டதிற்கு ஆதரவு திரட் டவே வெளிநாடு போவதாகக் கூறிக்கொள்வார்கள்

பிரதமர் சிறிமாவோ பண்டாரநா யக்கா யாழ்ப்பாணம் வந்த போது விநோதன் அம்மையாரைப் பலா லிக்குக் கூட்டிச் சென்ற கதையைக் கூறினார் (ஆங்கிலத்தில்). 'ரசிகர் கள்' வி.பியை மறக்கத் தொடங்கி னர். கொஞ்ச நேரத்தில் வி.பி. நினைவுக்கு அப்பால் போய்விட் டார். (எனினும் பூமி உருண்டை என்றபடியால் அவர் மீண்டும் வந் தார்.)


மோதிலால்நேரு பேசுகிற போது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பி னர்களின் பெயர் இப்போது யாருக் கும் தெரிவதில்லை. அப்படியான இக்கட்டான சூழ்நிலைக்கு வந்து விட்டோம் என்றார். (தன்னுடைய பெயர் தெரிந்தளவுக்கு கூட எத்த னையோ உயிர்களை இழந்து தம்மை அர்ப்பணித்த தமிழ் இயக் கங்களின் உறுப்பினர்களின் பெயர் கள் தெரியவில்லையே என்ற அர்த் தமோ என்னவோ மிகவும் விசனப்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விநோதக் கிரகமும் வெள்ளாடும்

பூமிக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்டவெளியில் அப்புதியகோள் நிலைகொண்டுள்ளது. அப்படியொரு கோள் இருப்பதாக இன்னும் நவீன வானவியலாளர்களால் உறுதிசெய்யப்படவில்லை. அதை அவர்கள் ஒரு ஊகமாகவே வைத்திருக்கிருர்கள். உண்மை அவர்களுக்குத் தெரியாததல்ல. காலதேச வர்த்தமானங்கள் கூடிவரும்போதே அவர்கள் அறிவிப்பார்கள். அதுதான் அவர்களுக்குரிய பண்பு. அதுவரை அவர்கள் ஊகித்துக்கொண்டே இருப்பார்கள். அவர்களில் ஒருசிலர் அது ஒரு பெரிய சவர்க்காரக் குமிழிதவிர வேறொன்றுமில்லை என்று சொன்னதையும் நான் கேட்டிருக்கிறேன்.

இந்த அதிசயமான, வியப்புக்குரிய கிரகம் உயிர் வாழ்வது உண்மையென்பதை நீங்கள் நம்பவேண்டும். முடியாவிட்டால் சந்தேகிக்கவாவதுவேண்டும். ஆனால், அப்படியொரு கிரகம் இல்லையென்று மட்டும் சொல்லிவிடாதீர்கள். இச்சிறுகிரகத்தை உங்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதில் நான் எந்தவித மகிழ்ச்சியையும் உணரவில்லை. மகிழமுடியாத விடயங்களை வெளிப்படுத்துவதில், மனிதன் சோகம்கலந்ததொரு சுகத்தை அனுபவிக்கின்றான். அதைநீங்களும் அனுபவித்திருப்பீர்கள்.

அந்தக் கிரகத்தில் மூன்றே மூன்று மனிதர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுடன் கூடவே ஒரு வெள்ளாடும் வசித்து வந்தது. அந்த மனிதர்களை அவ்வெள்ளாடு எவ்வாறு வந்தடைந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்லப்போவதில்லை. எங்கும் பரவியிருந்த யூதர்கள், எவ்வாறு இஸ்ரேலை சென்றடைந்தார்கள் என்பது பைபிளில் விலாவாரியாக எழுதப்பட்டிருக்கிறதோ, அதேபோன்று அம்மனிதர்களுக்கும் வெள்ளாட்டிற்கும் ஏற்பட்ட சந்திப்பின் முழுவிபரங்களும் வரலாற்றில் பதிவாகியுள்ளன.

அந்த மூன்று மனிதர்களுக்குமுள்ள ஒரேயொரு குறைபாடு, அவர்களுக்கு இயற்கையாக சுவாசம் நடைபெறுவதில்லையென்பதுதான். அதற்காக அவர்கள் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. கண்ணுக்குப் புலப்படாத சில ஏற்பாடுகளை செய்துகொண்டதன் மூலம், சுவாசிக்க மறந்து இறந்துபோய்விடும் அபாயத்தை அவர்கள் அடியோடு தவிர்த்துவந்தார்கள்.

வெள்ளாடு குறைகளால் நிரம்பியது. அம்மனிதர்களைப் போல் யக்திகளைக் கொண்டு குறைகளைத் தவிர்க்க அதற்குத் தெரியாது, குறைகளை நினைத்து கவலைப்படமட்டுமே அதற்குத் தெரியும். தன் முதற்குறை, அதனால் கதைக்கமுடியாதென்பதுதான். அம்மனிதர்களின் மொழி அதற்கு எப்போதும் விளங்கியது. ஆனால் பதில்கூற அதனால் முடிந்ததில்லை. குளிர்கூடிய இரவுகளில் தாங்கமுடியாமல் பலமாக கத்துவது அதன் இன்னொரு குறை. அதன் நீண்ட, கூரிய ஆனால் பிரயோசனமில்லாத - அல்லது பிரயோசனப்படுத்த முடியாத - இரு கொம்புகளும் அதனுடைய குறைகளில் ஒன்று. கவனியுங்கள், மொழிதவருன புரிதலுக்கு இட்டுச்செல்லும் காரணியாக அமைந்துவிடக்கூடாது. கொம்புகள் இருப்பது அதன் குறையல்ல, கொம்புகளைப் பயன்படுத்தமுடியாமல் இருப்பதே அதன் குறையாகும். அது குறுக்காக வளரவேண்டியிருப்பதால் என்னவோ அதற்கு தாகமும், பசியும் அதிகம். நிவர்த்தி செய்யமுடியாத, அல்லது குணப்படுத்தமுடியாத இக்குறைகளுடன் அவ்வெள்ளாடு அங்கு வாழ்ந்து வந்தது.

அவ்வெள்ளாட்டின் குறுக்காக வளரும் இயல்பு, அழகிய, உறுதியான, கூர்மையான கொம்புகள்,ஒளிரும் கண்கள் அம்மனிதனிடம் அதன்மேல் பொருமையை உண்டு பண்ணியிருந்தன. அவர்கள் எப்போதும் வெள்ளாட்டை வெறுப்புடனேயே பார்த்தார்கள். வெள்ளாட்டில் அற்புதமாக அமைந்திருந்த இயற்கையை அவர்களால் சகித்துக்கொள்ள முடிந்ததில்லை. ஏதோ ஒரு தருணத்திற்காக அவர்கள் காத்துக்கொண்டிருப்பதுபோலத் தோன்றியது.

வெள்ளாட்டுக்கும், அம்மனிதர்களுக்கும் இடையில் நிலவிய உறவை என்னால் சரியாக வரையறுத்துக்கூறமுடியாது. ஆனால், நான் இவ்வாறு கூற முயலலாம்.

அம் மனிதர்களுக்கு புல்வெளிகளில் உலாவச் செல்லும் வழக்கம் இருப்பதால், காலையில் எழுந்தவுடனேயே அவ்வெள்ளாடு புல்வெளிகளை மேய்ந்து செப்பனிடும்.(முட்களை, ஏன்கற்களை, கண்ணாடித் துண்டுகளைக்கூட அது அம்மனிதர்களின் சௌகரியங்களுக்கு விழுங்கியதுண்டு). தூரத்தேயுள்ள அவர்களுடைய பொன்வயல்களை பார்க்கச்செல்ல வேண்டும் என்று அவர்களில் ஒருவருக்கு எப்போதாவது ஆசை எழும். அப்போதெல்லாம் அவரை வெள்ளாடே சுமந்து செல்லும். சிறிது நேரத்திலேயே வலித்த கால்கள் தள்ளாடத் தொடங்கும். ஆனால், தான் தள்ளாடுவது அவருக்குத் தெரியக்கூடாது என்பதற்காக (அதற்குப் பிரத்தியேக காரணம் உன்டு), நாட்டியமாடிச் செல்வதுபோல் அது பாவனைகாட்டும். அம் மனிதர்களுக்குப் பிடித்த இன்னொரு விடயம் பாதைகள் மிகக் குறுகலான பாதைகள் ஓய்வு நேரம் கிடைக்கும்போதெல்லாம் தனது நான்குகால்களினாலும சிறிய பாதைகள் அமைப்பதில் அது ஈடுபடும். அது வேலையை அது விருப்பத்துடன் செய்ததா என்பது எவருக்குமே தெரியாது. ஆயினும், இப்பணிகளுக்காக இறப்பரும், உலோகமும் கலந்து செய்யப்பட்ட பந்தொன்றை அம்மனிதர்கள், வெள்ளாட்டிற்கு பரிசளிப்பார்கள். ''மிக விவேககமான வெள்ளாடு'' என்று பாரட்டவும் செய்தார்கள்.

இவ்வகையான உறவுகளுடன்தான் அங்கே நாட்களும், வாழ்க்கையும் கழிந்துகொண்டிருந்தன.

அந்தக் கிராமத்திலிருந்து பார்க்கும்போது எமது அழகிய நீலக் கிரகம் அம்மனிதர்களுக்கு எப்படித் தோன்றியது என்பதையும் உங்களுக்கு நான் சொல்லிவிட வேண்டும். நீலமும், பசுமையும் அங்கிருந்து பார்க்கும்போது அவர்களுக்குத் தெரிவதில்லை. இறந்துபோன, அருவருப்பூட்டும் ஒரு கறுப்புக்கோளாகவே எமதுபூமி அவர்கள் கண்ணுக்குத் தெரிந்தது. எமது பூமி அக்கிராமத்தில் தென்படக்கூடிய நாட்களில் அவர்கள் மிகவும் சலிப்படைந்தார்கள். சோர்வு அவர்களைத்தாக்கியது. அவர்கள் அதிர்ந்தார்கள். எனவே அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். பூமி அக் கிராமத்தில் தென்படக்கூடிய நாட்களை விடுமுறைதினங்களாக அறிவித்துக்கொண்டார்கள். அத்தினத்தில் வீட்டிற்குள் முடங்கிக் கொண்டார்கள். இவர்களின் இந்த ஏற்பாட்டால் மிகவும் மனம் வருந்தியது வெள்ளாடுதான்.

ஒரு நாள் வழமைபோல் அம்மூன்று மனிதர்களும் உலாவச்சென்ருர்கள். காலை உணவுக்கு இன்னும் நேரமிருந்ததால் மூவருக்கும் பிடித்தமானதும், கிரகத்தின் வடமத்தியில் அமைந்ததுமான அழகிய தோட்டம்வரை செல்ல விரும்பினார்கள். சென்றார்கள் அத்தோட்டத்தின் அழகை இரசிப்பதற்காக அவர்கள் மௌனமானார்கள். மெல்லியகாற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. கதிரவன் ஒளிர்ந்தான். ஒளிக்கிரணங்கள் பட்டு பச்சை இலைகள் பளபளத்துக்கொண்டிருந்தன. பொங்கிச்சிரித்த பூக்கள் அவர்களை மயக்கி கிறங்கடித்தன.அக்கிரகத்தின் தற்காலிக வாசிகளான பாடும் திறமைபெற்ற பல வகையான பறவைகள் ஒன்றுக்கொன்று சங்கீதம் கற்றுத்தருவது போல் குரலிசை எழுப்பின.

அத்தோட்டத்தின் இயற்கை எழிலையும், உன்னதமான அழகையும் கூடவே அதன் முக்கியத்துவத்தையும் அம் மூன்று மனிதர்களும் தமது என்புமச்சைவரை உணர்ந்துகொண்டனர். தமது மௌனத்தைக் கலைப்பதோ அல்லது அம் மயக்கநிலையிலிருந்து மீள்வதோ பெரும் பாவமான செயல் என்பதுபோல் அவர்கள் தொடர்ந்து நெடுநேரம் அந்நிலையிலேயே நின்றனர். அவர்களது கண்கள் நள்ளிரவு நட்சத்திரங்களைப்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அம் மூவர்களில் ஒருவன் கிழக்குக்ரையில் ரோஜப்பாத்திகளில் வளர்ந்திருந்த புதிய மரமொன்றை தற்செயலாக நோக்கினான்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவன் அலறத் தொடங்கினான். அங்கு நிலைகொண்டிருந்த மௌனம் கலைந்தது. மயக்கம் பறந்தது. அவர்கள் மூவரும் அம் மரத்தை நோக்கி ஓடிச் சென்ருர்கள். அவர்கள் அம்மரத்தை அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்தபோது,வாழ்வில் முதல்முறையாக அவர்களது நெற்றிகளில் சுருக்கங்கள் தோன்றின. அவர்கள் வாடிப்போனார்கள்.

''இம் மரம் இத்தோட்டத்தையே, ஏன் இந்தக் கிரகத்தைக்கூட அழித்துவிடும்'' என்று அவர்களிலொருவன் வெடித்தெழுந்த அழுகையுடன் கூறினான்.

மூவரும் சேர்ந்து முயன்றாலே அம்மரத்தை பிடுங்கிவெறிய முடியாத பரிதாப நிலையில் தாமிருப்பது அவர்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. உறுத்தும் முட்களைத்தவிர அம்மரத்தில் வேறெதையும் பார்கமுடியாது. அவர்கள் திகைப்பில் ஆழ்ந்திருந்தார்கள்.என்ன செய்யலாம் என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

''எனக்குத் தெரியும். இது வெள்ளாட்டின் வேலைதான்'' என்று திடீரெனக் கத்தினான் அவர்களில் ஒருவன்.

அதிசயிக்கத்தக்க வகையில்,மற்ற இருவரும் அவனது கருத்தை ஏற்றுக்கொண்டனர்.

''ஆம்,இது வெள்ளாட்டின் வேலைதான்'' என்று மூவரும் ஒருமித்து உறுமினார்கள்.

வெள்ளாட்டிற்கு தண்டனையளிப்பதனூடாகவே, அக்கொடிய மரத்தை அழித்தொழிக்கமுடியும் என்ற விநோதமான முடிவுக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் வேகமாக தமது இருப்பிடம் திரும்பினார்கள். வழியில் வெள்ளாட்டிற்கு என்ன தண்டனை அளிப்பது என்பது பற்றி தீர்மானித்துக்கொண்டார்கள்.

அவர்கள் வந்து சேர்ந்த வேளையில, வெள்ளாடு அவர்களுக்காக மீண்டும் ஒரு சிறிய ஒடுங்கலான பாதையமைத்துமுடிக்கும் தறுவாயிலிருந்தது.

அதன் வேலையில் இருந்து வெள்ளாடு இழுத்துவரப்பட்டது.

தீப்பொறி பறந்த அவர்களது முகங்களை வெள்ளாடு மிரட்சியுடன் பார்த்தது.

எதுவும் புரியாமல் கலக்கத்துடன் முழித்தது

''வெள்ளாடே, உன்னை நேர்மையான பணிவான மிருகம் என நினைத்தோம். ஆனால் எங்களுக்கு மன்னிக்கமுடியாத மாபெரும் தவறிழைத்துவிட்டாய். உன்னை நம்பி நாங்கள் அப்பாவித்தனமாக ஏமாந்தோம்.உனது தந்திரத்தையும், கபடத்தனத்தையும் கண்டு நாங்கள் அச்சமடைகின்ரேம்.ஆம், இன்று நாம் தோட்டத்திற்குச் சென்ரேம் அங்கே நீ எங்களை அழிப்பதற்காக உருவாக்கி வைத்திருக்கும் மரத்தையும் கண்டுபிடித்தோம்.அற்ப பிராணியே,உனக்கேன் இந்த எண்ணம்?''

''என்ன சொல்கிறார்கள் இவர்கள்? அந்த முள் மரம்..! மறந்து விட்டார்களா? அன்றொருநாள் அக்கிரகத்தின் வான்பரப்பை ஊடுருவிப்பறந்த ஆகாயப்பறவையொன்று, தற்செயலாகவோ, வேண்டுமென்றோ சிறிய விதையொன்றை அவர்களுடைய இருப்பிடத்தில் போட்டுவிட்டுச் சென்றதையும், அதை அவர்கள் எடுத்து நாள் முழுக்க குடைந்து குடைந்து ஆராய்ச்சி செய்ததையும்,இது மரமாக வளர்ந்தால் கிரகத்தில் வளரும் எந்த நச்சுக் காளான்களையும் அழித்துவிடும் வல்லமையைக் கொண்டிருக்கும் என்று கண்டுபிடித்ததையும், அன்றே அதைக் கொண்டுபோய் தோட்டத்தில் புதைத்துவிட்டு திரும்பியதையும்.. மறந்தா போனார்கள்? அவர்கள் எதிர்பார்த்தது போலவே, அவர்களுக்குப் பிடிக்காத காளான்களை அது அழித்துக் கொண்டு தானிருந்தது. ஆனால் இப்போது அம் மரத்தின் பருமனும, உயரமும் அவர்களைப் பயமுறுத்துகிறது. தம்மையும் அழித்துவிடும் என்ற உதறல் எடுக்கிறது. அவர்களுடைய பயத்தின் நியாயத்தை என்னால் உணர முடிகிறது. ஆனால், அது அவர்கள் தமக்குத் தாமே வரவழைத்துக்கொண்ட கேடு. அதைமறந்து என்மீது பழி சொல்கிறார்களே? அவ்விதையின் அபாயத்தை உணர்ந்து அன்றே அதை அவர்கள் என்னிடம் தந்திருந்தால், நான் அதை விழுங்கியிருப்பேன். என் உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றாலும் கூட, அவர்களுடைய நலனை முன்னிட்டு நான் அதைச்செய்திருப்பேன். எனக்குச் சந்தேகம் வருகிறது. நச்சுமரம் பற்றி இவர்கள் கவலைப்படக்கூடும். அது நம்பக்கூடியதுதான். ஆனால், என்மீது குற்றம் சுமத்துவதில் கபடத்தனம் உண்டு, கபடத்தனம் நிச்சயமாகவே உண்டு. பேசத்தெரியாத வெள்ளாடு இவ்வாறுதான் தனக்குள் பொருமிக்கொண்டது. கண்ணில் ஈரம் கசிய, நடுங்கிக் கொண்டு நின்றது.

அவர்கள் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றார்கள் வெள்ளாட்டினால் அவர்களிடம் இருந்து திமிறிச்செல்ல முடியவில்லை.இருள் நிறைந்த துயரத்தை அது தன் உடல் எங்கும் உணர்ந்தது. தப்புவதற்கான எந்த முயற்சியும் பலனளிக்காது என்பது அதற்கு உறுதியாகத் தெரிந்தது. பரிதாபமான தனது விழிகளால் தனக்கு இரங்குமாறு கெஞ்சியது. அவர்கள் அட்டகாசமாகச் சிரித்தார்கள். அச்சிரிப்பில் வெறித்தனம் மிகுந்திருந்தது.

இப்போது அவர்கள் தயாரானார்கள். திட்டமிட்டபடியே தமது வேலையை ஆரம்பித்தார்கள். (அதில் அவர்கள் காட்டிய சிரத்தை, பிரளயத்துக்கு முன்னால், பேழையை அமைப்பதில் நோவா காட்டிய சிரத்தைக்கு ஒப்பானதாகும). அவர்களை உறுத்திக் கொண்டிருந்த இரண்டு கொம்புகளையும் முதலில், திருகிப் பிடுங்கி எறிந்தார்கள்.

அதன் வலதுகண் தோண்டி எடுக்கப்பட்டது. இடது காதினுள் உருக்கப்பட்ட இரும்பு ஊத்தப்பட்டது.

இதை அவர்கள் மிகக் குறுகிய நேரத்தில், மிக வேகமாகச் செய்து முடித்தார்கள்

கொம்புகள் திருகப்பட்டு எறியப்பட்ட உடனேயே ஓலமிட்டபடியே மயங்கிச் சரிந்தது வெள்ளாடு அதன் பின்னர்தான் அந்த வீரர்கள் தமது மிகுதித் தண்டனையை நிறைவேற்றினார்கள்.

இத் தண்டனைகளால் வெள்ளாடு இறக்காது என்பது அம்மனிதர்களுக்குத் தெரிந்திருந்தது. வெள்ளாடு இறப்பதை அவர்கள் விரும்பமாட்டார்கள். ஏனென்றால், வெள்ளாடில்லாமல் அவர்கள் உயிர் வாழ்வது சாத்தியமல்ல

இந்தக் கொடூர வதைகளின் பின்னால் அந்த நலிந்த வெள்ளாடு உயிர்வாழ்வது சாத்தியமா என்று நீங்கள் என்னைக் கேட்கக்கூடும்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனக்கும் வியப்புத்தான் ஆனால், அதன் பின்னரும் வெள்ளாடு உயிர் வாழ்ந்தது என்பது உண்மை. அதற்குக் காரணம் அக்கிரகத்தின் தட்ப, வெப்ப நிலைகளாக இருக்கலாம் என்பது எனது ஊகம். இந்த ஊகம் உண்மையா அல்லது அதற்கு வேறேதும் காரணங்கள் உண்டா என்பதை உயிரியல் விஞ்ஞானிகள் ஆராய்ந்து சொல்லட்டும்.

தண்டனையை நிறைவேற்றிய களிப்புடன், அம்மனிதர்கள் வீட்டினுள்ளே சென்றுவிட்டார்கள். தனக்கு என்ன நடந்தது என்பதையே முழுமையாக உணரமுடியாமல், அவ் வெள்ளாடு ஆழ்ந்த மயக்கத்தில் கிடந்தது.

*** *** ***

வானத்தில் மிகத் தொலைவிலிருந்த இரண்டு நட்சத்திரங்கள் ஒன்றைஒன்று பார்த்து கண்சிமிட்டியபடி தமது நிலைகளை மாற்றிக் கொண்டன.

அவ்வளவுதான். அச்சிறு கிரகத்தில் எல்லாமே மாறி விட்டன. அக்கிரகத்துக்குரிய ஒழுங்குகளில், காலநிலைகளில், ஏன் அளவில் கூட மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்கள் ஒருவர் எதிர்பார்ப்பது போலவே அம்மனிதர்களின் வாழ்க்கை ஒழுங்குகளிலும், ஏற்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தின. அதில் முக்கியமானது இயற்கையாக சுவாசிக்கும் ஆற்றல் அற்ற அம்மனிதர்கள் செயற்கையாக, கண்ணுக்குப் புலப்படாமல் செய்திருந்த ஏற்பாடு, தனது செயற்பாட்டை நிறுத்திக்கொண்டதுதான். வெலவெலத்துப் போனார்கள் அந்த மனிதர்கள்.மரண பயத்தால் நடுங்கினார்கள். சுவாசிக்க மறக்கும் எக்கணத்திலும் அவர்கள் இறந்து விழலாம். அவர்கள் அவசரமாகவும் வேகமாகவும் சுவாசித்துக்கொண்டிருந்தார்கள். சுவாசிக்க மட்டுமே செய்தார்கள். வேறெதையும் அவர்களால் செய்ய முடியவில்லை. இடையில் அவர்களுக்குப் பசியெடுத்தது. இந்தப்பசி இப்போது ஏன் வந்துதொலைந்தது என்று ஆத்திரமடைந்தார்கள். ஆனால் பசி வயிற்றைத் திருகியது. எனவே கொஞ்சமாவது என்று முடிவெடுத்தார்கள்.

சிறிதளவு உணவை கையில் எடுப்பார்கள். ஆழமாக மூச்சை இழுப்பார்கள். மூச்சை உள்ளேயே வைத்துக் கொண்டு, உணவை வாயில்போட்டு விழுங்குவார்கள்.(மெல்லுதற்கு அவகாசமில்லை!) பின்னர், மூச்சை வெளியில் விடுவார்கள். பின்பு, ஆறுதலாக இரண்டொருமுறை தொடர்ந்து சுவாசிப்பார்கள். மீண்டும் பழையபடி மூச்சை உள்ளிளுப்பது, உணவை வாயிலிட்டு விழுங்குவது, பின்னர் மூச்சை வெளிவிடுவதுமாக அவர்கள் உணவருந்திக்கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில், அவ்வெள்ளாடு அங்கு வந்தது. அக்கூத்தைப் பார்த்தது. அதற்கு மட்டும் சிரிக்கத்தெரிந்திருந்தால், அது சிரித்தே செத்திருக்கும். நல்ல வேளையாக அதற்குச் சிரிக்கத் தெரியாது. ஆனாலும், அதன் உள்ளத்தில் ஏற்பட்ட நகைச்சுவை உணர்ச்சியை கொட்டித்தீர்க்குமுகமாக பலமாக கத்தியது. அவர்கள் வெள்ளாட்டைக் கண்டார்கள். அதனருகே ஓடி வந்தார்கள். அதனைத் தழுவிக்கொண்டார்கள்.

''வெள்ளாடே, இந்த அநியாயத்தை, அக்கிரமத்தைப் பார். நாங்கள் இச்சிறுகிரகத்தில் அமைதியாகவும், சந்தோசமாகவும் வாழ்ந்து வந்தோம். எமக்கு ஏற்பட்ட எல்லாக் கஷ்டங்களையும், பிரச்சினைகளையும் சுலபமாகவும், சுமுகமாகவும் திறமையான முறைகளில் தீர்த்துக்கொண்டோம். உன்னைக்கூட சிறப்பான முறையில் கவனித்துக்கொண்டோம். ஆனால், இப்போது நடந்திருப்பதைப் பார். எல்லாமே பாழாகி விட்டன. எமக்கு இயற்கைச் சுவாசம் இல்லை என்பதற்காக, எமது திறமையினால் நாம் ஒரு அற்புதமான ஏற்பாட்டைச் செய்திருந்தோம். அது அழிக்கப்பட்டு விட்டது. சுவாசம் எவ்வளவு முக்கியமானது என்பது உனக்குத்தெரியும். எதுவும் அழிந்து போவதில் எமக்குப் பெரிய கவலைகள் இல்லை. ஆனால், எமக்கு வேண்டியது சுவாசம்: எம்மைத் தொல்லைப்படுத்தாத தாமாகவே நடைபெறக்கூடியசுவாசம். பார், இனி எங்களால் தூங்க முடியாது. தூங்கினால் இறந்துவிடுவோம். இந்தப் பரிதாப நிலையைப் பார். முன்னறிவிக்காமல் வந்து நிற்கும் இக்கொடுமையைப் பார். வெள்ளாடே, நீதான் எங்கள் நம்பிக்கை. எங்களுக்கு உதவு'' அவர்கள் முறையிட்டார்கள், கெஞ்சினார்கள். வெள்ளாடு மௌனமாக நின்றது. அவர்கள் மூன்று நான்கு சொற்களுக்கிடையில் மீண்டும்,மீண்டும் வலிந்து சுவாசித்தபடியே பேசவேண்டியிருந்தது. வெள்ளாட்டிற்கு மிகுந்த மனவருத்தத்தை அளித்தது. சோகத்துடன் அவர்களைப்பார்த்தது. தன்னால் என்ன செய்ய முடியும் என்று தன்னைக் கேட்டுக் கொண்டது. அதற்கு எதுவுமே தோன்றவில்லை. கழுத்தைப் பின்னுக்கு இழுத்து, விநோதமாக அம்மூன்று மனிதர்களையும் மாறி,மாறிப் பார்த்தது.

அவர்கள் மீண்டும் பேசத்தொடங்கினார்கள். ''வெள்ளாடே நாம் உனக்கு தவறுகள் இழைத்திருக்கலாம். அது சாத்தியம் தான். மேலும், அவற்றை நீ கொடுமைகளாக உணர்ந்திருக்கக்கூடும். ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நீ உன்னையறியாமலே எமக்கு தவறிழைத்து விடுவதை தவிர்க்கும் முகமாகவே (இது உன் நன்மை கருதியே என்பதை நீ புரிந்துகொள்வாய்) நாம் இவ்வாறு நடந்துகொள்ள நேரிட்டது. இதை நீ நம்ப வேண்டும். தயவு செய்து பழிவாங்க மட்டும் எண்ணி விடாதே. அதற்கு நீ முயன்றால், நாம் உன் மீது வைத்திருக்கும் நேசத்தைப் பழிப்பது போலாகும். நீ சாதுவான பிராணி, எனவே அன்பைப் புரிந்து கொள்வாய். அது உனக்கு கடினமல்ல. நாம் எப்போதாவது செய்த சிறு தவறு, உனக்குள் ஆழமான காயமொன்றை ஏற்படுத்தியிருந்தால், அதற்கு நாங்கள் இப்போதே இதமாக ஒத்தடம் கொடுக்கின்றோம். அப்படி நேர்ந்ததற்காக வருந்துகிறோம். உன் நெஞ்சம் மென்மையானது. அது எங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே தெரியும். உன்னால் எங்களை மன்னிக்க முடியும். சகலவற்றையும் மறந்துவிடு. நீ எதையாவது ஞாபகப்படுத்தினால், அதை எம்மால் தாங்கவே முடியாது. இருப்பதே அதிகம். மேலும் பாரம் வேண்டாம். மறந்துவிடுவதுதான் நல்லது. ஆம் எமக்குத்தான் நல்லது. யாருக்கென்றாலாவது, நன்மை விளைவது நல்லதுதானே? நீ ஞாபகம் வைத்திருப்பதால் பலனெதுவுமில்லை. உன் மனவருத்தம்தான் அதிகமாகும். வெள்ளாடே, நாங்கள் சம உரிமை கொண்ட நண்பர்களாவோம். ஒருவரையொருவர் மதிப்போம், கைகோர்த்து நடப்போம். ஆனால், முதலில் நீ எமக்கு தாமதியாது உதவ வேண்டும். நாம் தடையின்றி இயல்பாக சுவாசிக்க உதவவேண்டும். சோர்வும், அசதியும் களைப்பும் அதிகமாகி, சுவாசிக்க மறந்து விட்டால், நாம் இறந்து விடுவோம். கருணையுள்ள வெள்ளாடே, துரிதமாக இயங்கு, எம்மைக்காப்பாற்று!. உன் உதவி எமக்குக் கிடைத்ததும் - எம்மால் இயல்பாக சுவாசிக்க முடிந்ததும் - இந்த அநியாயத்தை, அக்கிரமத்தை, காட்டுத்தனமான அடாவடித்தனத்தை, அதை இழந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை எதிர்த்து நாம் இணைந்து போராடுவோம். இனியும் தாமதிக்காதே, செயலில் இறங்கு!'' அவர்கள் மன்றாடினார்கள்.

வியப்பும், திகைப்பும் வெள்ளாட்டைத்தாக்கின.

''என்ன..? இவர்களா கதைக்கிறார்கள்? மென்மை, அன்பு, கருணை, சமஉரிமை, போராட்டம் பற்றியல்லவா பேசுகிறார்கள்? இவர்களுக்கு இந்த வார்த்தைகளில் என்ன எழுத்துக்கள் இருக்கின்றன என்ற விடயம்தான் இதுநாள்வரை தெரிந்திருந்தது. இப்போது, இவர்கள் அவ்வார்த்தைகளின் முழு அர்த்தத்துடன் அல்லவா பேசுகிறார்கள்!? இது அதிசயமில்லையா? சூழ்நிலை மாற்றங்களும், தேவைகளும் மந்திரவித்தைகளையல்லவா செய்கின்றன! உல்லாசமாக உயர பறந்துகளித்த மனிதர்கள், இப்போது தவழ்கிறார்கள், நடப்பதற்குத்துடிக்கிறார்கள். பறிபோன சுவாசம் மீண்டும் வேண்டுமாம் இவர்களுக்கு. நான் என்னதான் செய்ய ?''

பரிவாலும் குழப்பத்தாலும் ஆழ்ந்த வெள்ளாடு அசையாமல் நின்றது. கிரகத்தில் ஏற்பட்டமாற்றத்தால், அதற்கு பேசும் ஆற்றல் வந்திருந்தது. ஆனால் காயம் பட்ட சொற்களை நாக்கில்வைத்து சுழற்றி எறிய வெள்ளாட்டினால் முடியவில்லை. அதனுடைய மௌனம் தொடர்ந்தது.

*** *** ***

அதிகாலை பலமான குளிர்காற்று வீசியது. இரத்தத்தில் தோய்ந்தது, மயக்கத்தில் ஆழ்ந்திருந்த வெள்ளாடு மெதுவாக அசைந்தது. இரத்தம் படிந்திருந்த கண்ணிமைகளை மெதுவாகத் திறந்தது. இரத்தத் தூள்களை உதிர்த்தவண்ணம் இடது கண் திறந்து கொண்டது. வலதுகண் ஏன் திறந்து கொள்ளவில்லை என்பதை அதனால் அறிந்து கொள்ளமுடியவில்லை. ஆனால் அந்த இடத்தில் பயங்கரமாக வலித்தது. இடது காதுகள் ஏதோ கனத்தது: பட்டறையின் ஊதுலை தன் தலைக்குள்ளே இருப்பதாய் உணர்ந்தது. எரிவையும், வலியையும் தாங்கமுடியாமல் முனகியது. தான் கனவு கண்டுகொண்டிருந்தது ஒருகணம் ஞாபகத்தில் வந்து சென்றது. அதைப் பற்றி தொடர்ந்து எண்ணுவதற்கு அதனால் முடியவில்லை. கண்ணை மூடி உடலின் முழுவலியையும் ஒருமுறை முழுமையாக உணர்ந்தது. மீண்டும் கண்ணைத் திறந்தது. எழும்ப முயற்சித்தது முடியாமல் மீண்டும் நிலத்தில் சாய்ந்தது. அப்போது அடிவானில் ஒரு பொருள் கண்ணுக்குத் தட்டுப்பட்டது. பசுமையும், அழகும், எழிலும் கொண்ட எமது நீலக்கரம் மேலெழுந்து வந்து கொண்டிருந்தது. இது அம்மூன்று மனிதர்களுக்கும் விடுமுறைகாலம். அவர்கள் இனி வெளியே வரமாட்டார்கள். எனவே, எழும்பும் முயற்சியைக் கைவிட்டு, படுத்துக் கொண்டே வானேறிவரும் நீலப்பந்தைத் துயரத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது.

## அருள் சின்னையா

## ''இலட்சியங்களுக்கு நான் உண்மையற்றவளாக இருப்பதை விட மடிந்து போவதே மேல்''

**- ரோஸா லக்ஸ்ஸம்பர்க்**

**''சிறைக்காவலனின் கடினமான காலடிகளின் கீழ் சிக்குண்ட ஈரமண் அரைபடும் ஓசை ஒரு எளிய கவிதை போன்றது-அதனை எப்படிக் கேட்பது என்று தெரிந்து கொண்டால்'' -றோஸா லக்ஸம்போக்**

ஜேர்மனியச் சிறையில் சிறைபட்டிருந்த போதும் கூட வாழ்க்கையை அர்த்த முடையதாகவும், தனித்துவத்துடனும் எதிர்கொண்ட றோஸா லக்ஸம்பேர்க் பற்றிய படமொன்றை அண்மையில் பார்க்கமுடிந்தது.

இத்திரைப்படத்தை நெறிப்படுத்தியிருக்கறார் ஜேர்மனியின் புகழ்பெற்ற பெண் நெறியாளரான மாக்ரெட்டா வொன் ரெட்டா.

இத்திரைப்படத்தில் பெரும்பாலும் றோஸா ஜேர்மனியில் வாழ்ந்த 1898-1919 வரையான காலப்பகுதியையே மாக்ரெட்டா வெளிக் கொணர்ந்திருக்கிறார்.

றோஸாவின் சிறுபராயம் குறித்த தகவல்கள் போதுமானதாக இருக்காததே பிரதான காரணம். றோஸாவைப் பற்றி எழுதியவர்கள் கூட அவரின் ஆரம்பகாலங்களைப்பற்றி பெரிதாக அறிந்திருக்கவில்லை. 1871 இல் றோஸா பிறந்ததாக ஒரு குறிப்பு.

ரஷ்ய-போலந்து எல்லையிலுள்ள சமோஸ்க் என்ற கிராமம்தான் றோஸாவின் பூர்வீகம். மரபார்ந்த யூதமத வைதீகத் தன்மையிலிருந்தும், பிற்போக்குத்தனங்களில் இருந்தும் விலகி, முற்போக்கான தாராளவாத சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட யூதக் குடும்பம் ஒன்று தான் அவரது பாரம்பரியம்.



போலந்து அப்போது ரஷ்யப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. வார்சோவின் முதற்தரப் பள்ளிகள் ரஷ்ய அதிகாரிகளின் குழந்தைகளையும், ரஷ்யமயமான போலந்துக் குடும்பங்களின் சில குழந்தைகளையும் மட்டுமே தமது பள்ளிகளில் அனுமதித்தன. யூதக் குழந்தைகளுக்கு முற்றாகவே அனுமதி மறுக்கப்பட்டது.

மற்றைய பள்ளிகளில் கூட மாணவர்கள் தமது தாய்மொழியான போலீஸ் மொழி பேசுவது தடைசெய்யப்பட்டிருந்தது.

இது றோஸாவின் பாடசாலைக்காலம். ரஷ்யப் பேரசின் ஆற்றவொணா ஒடுக்குமுறை!

மறுபுறத்தே ஜெர்மனிய, போலந்து, ரஷ்ய இலக்கியங்களுடன் றோஸாவுக்கு இருந்த ஈடுபாடும், அவரது வீட்டில் ஆதிக்கம் செலுத்திய ஷில்லரின் சுதந்திரம் பற்றிய கருத்துக்களும் அவரது சிந்தனைத் தளத்தை விரிபடுத்தின.

இந்தச் சூழ்நிலை றோஸாவைக் கலகக்காரராக்கியது. அவரைப் புரட்சிகர இயக்கங்களை நோக்கி உந்தித் தள்ளியது.(புரட்சிகர இயக்கங்களுடன் இருந்த தொடர்பு காரணமாக சிறந்த மாணவர்களுக்கான தங்கப்பதக்கம் அவருக்கு வழங்கப்படவில்லை.) பாடசாலையை விட்டு நீங்கிய றோஸா புரட்சிகர சோசலிஸக் கட்சியில் சேர்ந்தார்.

இதேவேளை ரஷ்யாவிலும் போலந்திலும் இருந்த புரட்சிகர இயக்கங்கள் நெருக்கடியைச் சந்தித்தன. ரஷ்ய உயர் குடியினரால் நடத்தப்பட்டு வந்த தேசியப் புரட்சிகர இயக்கம் சிதைந்து கொண்டிருந்தது. அதே வேளை நம்பிக்கை அளிக்கக் கூடியதாக உருவாகிவந்த தொழிலாளர் கட்சியில். றோஸா இணைந்து கொள்கிறார்.

* ஜாரிசத்தின் ஒடுக்கு முறையில் இருந்து மக்களை விடுவித்தல்.

* போலந்து மக்களை அன்னிய ஆட்சியின் ஒடுக்குமுறையில் இருந்து விடுவித்தல்.

* சிறுபான்மையினரான யூதமக்களை மிகக் கொடூரமான ஒடுக்கு முறையில் இருந்து விடுவித்தல்.

இந்த வரலாற்றுப் பொறுப்பை றோஸாவும் தோழர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அதற்காகப் பணியாற்றுகின்றனர். பொலிஸாரோ இவருக்கும் இரகசிய இயக்கத்துக்குமான தொடர்பை மோப்பம் பிடித்து விடுகின்றனர். கைது செய்யப்பட்டால் தூக்கிலிடப்படலாம் அல்லது சைபீரியாவுக்கு நாடு கடத்தப்படலாம் என்பதால் நண்பர்களின் வற்புறுத்துலுக்கிணங்க நாட்டை விட்டு வெளியேறி சுவிற்சிலாந்துக்கு செல்கிறார்.

1897இல் சுவிஸிலிருந்து பிரான்ஸ்க்கு செல்கிறார்.

1898 மே மாதம் ஜேர்மனியை அடைகிறார்.

றோஸா லக்ஸம்பர்க் என்ற இத்திரைப்படம் இதற்குப் பின்னரான ஜேர்மனியில் றோஸா வாழ்ந்த காலப்பகுதியையே பெருமளவுக்கு பிரதிபலிக்கிறது.

'' பாட்டாளிகளின் உலகம் தழுவிய சகோதரத்துவம் என்பது பூமியின் மிக உயர்ந்ததும், மிகப்புனிதமானதுமான ஒன்று: அதுதான் என்னுடைய வழிகாட்டும் நட்சத்திரமாகவும், இலட்சியமாகவும், தந்தை நாடாகவும் இருக்கிறது. இந்த இலட்சியங்களுக்கு நான் உண்மையற்றவளாக இருப்பதைவிட மடிந்து போவதே மேல்'' - ஒரு விவாகத்தின் போது றோஸா கூறியது இது.

தனது இந்தக் கொள்கைகளுக்காக அவர் அயராது பாடுபடுகிறார். இதற்காகவே பலமுறை சிறை செல்கிறார்.

ஒரு ஆசிரியராக, அரசியல் பத்திரிகையாளராக, சிறந்த பேச்சாளராக, நூலாசிரியராக, தத்துவவாதியாக, புரட்சிவாதியாக, பல்வேறு பரிமாணங்களில் றோஸாவின் வாழ்க்கை வெளிக்கொணரப்படுகிறது.

1889இல் நடைபெற்ற இரண்டாம் அகிலத்தில், உழைக்கும் பெண்கள் பிரச்சினையை மார்க்சிய நோக்கில் முன்வைத்த கிளாரா ஜெட்சினுடன் அவருக்கு ஏற்பட்ட நட்பு.

ஆண்களுக்கு மட்டுமே உரியது என்று கருதப்பட்ட அரசியலில் றோஸா ஈடுபட்டதால் றோஸாவுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு, என றோஸாவின் வாழ்கையின் முக்கியமான அனைத்து விடயங்களையும் தந்திருக்கிறார் இயக்குனர் மாக்ரெட்டா.

1919 ஜனவரி.

றோஸா செங்கொடி' என்ற பத்திரிகையில் ஆசிரியராக இருக்கிறார். இது ஜெர்மனிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவான பத்திரிகை. அரசுக்கெதிரான கிளர்ச்சி வீதியெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜெர்மனியப் படைகள் நர வேட்டையாடிக் கொண்டிருக்கின்றன. கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு றோஸா மீதும், அவரது தோழர்கள் மீதும் சுமத்தப்பட்டது. அவர்கள் தலைமறைவானார்கள். றோஸா, லீப்நெக்ட் ஆகியோருடைய தலைக்கு ஒரு இலட்சம் மார்க்குகள் தருவதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனவரி 16இல் அரசசார்புப் பத்திரிகையான Vo-vwarts றோஸாவும், லீப்நெக்ட்டும் கைது! என்று செய்தி வெளியிடுகிறது. மதியப் பதிப்பில் லீப்நெக்ட் தப்பியோடும் போது சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும், றோஸாவை மக்கள் அடித்துக்கொன்று விட்டனர் என்றும் செய்தி வெளியாகியது.

ஆனால் உண்மையோ தலைகீழாகவிருந்தது. லின்ட்னர் என்பவன் தலைமையிலான இராணுவத்தினரே லீப்நெக்ட்டைக் கைது செய்கின்றனர். கைது செய்யப்பட்ட லீப்நெக்ட் கடுமையாகத் தாக்கப்படுகிறார். பின்னர் பலவந்தமாக அவரை ஓடுமாறு பணிக்கிறார்கள். அவர் சில அடிகள் எடுத்து வைத்ததும் பின்னாலிருந்து சுட்டுக் கொல்கின்றனர்.

லீப்நெக்ட்டைத் தாக்கிய ஒட்டோரத் என்ற இராணுவத்தினனே றோஸாவையும் துப்பாக்கியால் பின்புறத்தில் தாக்குகிறான். இறுதியில் தலையில் துப்பாக்கியால் சுட்டு லீச்டென்ஸ்டீன் பாலத்திலிருந்து லாண்ட்வெர் ஆற்றில் தூக்கி எறிகின்றனர்.

மக்களோ அரசின் வழமையான பொய் வதந்தி தான் இது என்றபடி றோஸாவுக்காகக் காத்திருக்கின்றனர்.

- அசேகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# களங்கட்டி மீன்பிடி

# கடற்தொழில் திணைக்களம் கண் திறக்குமா?

திருகோணமலை மீன்பிடித்துறையில் கணிசமான பங்கை வகித்து வரும் கட்டுவலை அல்லது களங்கண்டி எனப்படும் மீன்பிடிப் பொறிமுறைக்கு எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது. திருமலைப் பிரதேசத்தில் உட்துறைமுகம், சீனக்குடா ஆகிய பகுதிகளிலும் இத்தொழில் நடைபெறுகிறது. இலங்கை ரீதியாகப் பார்க்குமிடத்து யாழ், பறையூர், கரையூர், மன்னாரை அண்டிய பகுதிகளிலும் இத்தொழில் காணப்படுகின்றது.

இத் தொழில் ஒரு மரபு ரீதியான பொறிமுறையைச் சார்ந்ததாகும். வலைகள் கம்புகள் என்பவையே இத் தொழிலின் மூலதனம். பெருங்கடலின் நேரடி அலை வீச்சுக்கு உள்ளாகாத சீராக ஆழத்தை நோக்கிச் செல்லும் மெல்லிய சரிவுகொண்ட கடற்பரப்பிலே இத்தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

திருகோணமலையில் இத்தொழில் சுமார் அறுபது வருடப் பழமை வாய்ந்தது. இதன் ஆரம்பம் உட்துறைமுகக் கடற்பரப்பாக அமைந்திருந்தது. இன்று வேறுபகுதிகளுக்குப் பரவியுள்ளது. நல்லபிள்ளை அப்பா எனப்படும் கறகோரி, அவர் மகன் பர்னாந்து, சின்னத்தம்பி செல்லையா ஆகியோரே இத் தொழிலை இங்கு அறிமுகப் படுத்தியவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களின் வாரிசுகளாகப் பரந்துள்ள சுமார் நூறு குடும்பங்கள் இன்னும் இத் தொழிலையே நம்பி வாழ்கின்றன.

இத் தொழிலின் சிறந்த பொறிமுறைகளாகும். கரைக்கு உலாவரும் மீன் கூட்டங்கள் தங்கள் திசைநாடித் திரும்பும்போது வேலிவலைகளைக்கண்டால் மேற்கொண்டு செல்லமுடியாமல் அவ்வேலியை அண்மித்தபடியே ஆழப்பகுதியை நோக்கிச் செல்ல அவை பெருக்கடா என்ற வடிவமைப்புக்குள் வந்து சேர்ந்து விடுகின்றது. வேலி திசையை அண்மித்து வரும் மீன்கள் தப்பிவிடாத படி திசைமயக்கத்தை ஏற்படுத்த சிறகு வலைகள் உதவுகின்றன. பெருக்குடாவுக்குள் வட்டமிடும் மீன்கள் இறுதியில் ஓவன்னாப் பகுதியை வந்து சேர்ந்து விழுகின்றன. இந்த ஓவன்னாப் பகுதி ஒரு வழிப் பாதையாகும். ஏறத்தாழ சைக்கிள் டியூப்பில் காற்றை தேக்கி வைக்க உதவும் ''வால்வ்'' முறையைப் போன்றது. இம் மீன்கள் அடுத்தநாட் காலையில் உயிருடன் அள்ளப்படுகின்றன.

இம் மீன்கள் பிடிபட்டு ஒரு சில நிமிடத்திலேயே கரைக்கு வநகது விடுவதால் இவற்றுக்கு சந்தையில் எப்போதுமே கிராக்கி அதிகம். திருமலை மீன் சந்தையில் வேறு வழிகளில் பிடிக்கப்படுகின்ற மீன்களைக் கூட ''கட்டுவலை மீன்கள்'' என்று வியாபாரிகள் கூறிவிற்று வருவது சாதாரண நிகழ்வு. அந்த அளவிற்கு இந்த மீன்களுக்கு கிராக்கி அதிகம்.



இக் கட்டுவலையானது கரையிலிருந்து சுமார் பதினைந்து முழ ஆழம்வரையும் மேற் கொள்ளப்படுகிறது. நன்றாகச் சீவிப் பதப்படுத்தப் பட்ட காட்டுத்தடிகளின் உதவியுடன் கடலில் வேலிபோல் அமைக்கப்படுகிறது இவ்வலை கரையிலிருந்து ஆழத்தை நோக்கிச் செல்லும் நீண்ட வேலிகளும் அதன் முடிவில் பெருக்குடா, ஓவன்னா எனப்படும் இரு வட்டவடிவங்களும், இவற்றுக்கு உதவி புரியும் சிறகு எனப்படும் வடிவமுமே

இத் தொழிலின் சாதகங்களாக,

- சுவையான உடன் மீன்கள் கிடைத்தல்
- கரையிலேயே மேற்கொள்ளப் படுவதால் ஆபத்து இன்மை.
- தேய்மானங்கள், இழப்புக்கள் குறைவு.
- உடலுழைப்பு (ஏனையவற்றிலும்) குறைவு.
- ஒரு தடவை வலை கட்டப்பட்டால் இரண்டு மூன்று வாரங்கள் வரை மீன் பெறக் கூடிய தன்மை.
- மீன்களின் 'அறியாமை'யில் வகுக்கப்பட்ட இலகு பொறிமுறை என்பதால் இரை போன்றவை தேவைப்படாமை, என்பவற்றைக் கொள்ளலாம்; எனினும் பாதகங்களாக.
- பெருகிவரும் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்க முடியாமல் இடம் மட்டுப்படுத்தப்பட்டமை.
- நாட்டின் சூழ்நிலை காரணமாக உடைந்து போன கம்புகளுக்கு மாற்றுக் கம்புகள் பெறமுடியாமை.
- இராப் பகல் காவலிருக்க முடியாமையினால் மீன்கள், வலைகள், கம்புகள் திருட்டுப் போகும் தன்மை.
- பிறதொழிலாளர்களால் வேண்டுமென்றே ஏற்படுத்தக்கூடிய திருட்டு என்பவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

கட்டுவலைத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ''அரசடி புனித சூசையப்பர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் '' பதிவு செய்யப் பட்ட அமைப்பின் கீழ் தங்கள் தொழிலைப் பாதுகாக்கப் போராடுகிறார்கள். இதன் தலைவராக இரத்தினம் பாக்கியராசா என்பவர் செயற்படுகிறார்.

இவர் தமது தொழில் நிலமைபற்றிக் கூறுகையில் 1977ல் எங்கள் ஒற்றுமைக்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கம், தற்போது தொழிலைப் பாதுகாக்க வேண்டிய தேவையை முதன்மையாகக் கொண்டு இரண்டாண்டுக்கு முன்னரே பதிவு செய்யப்பட்டது. கரையிலே எமது தொழில் அமைந்துள்ளதால் குறிப்பிட்ட தூரத்துக்கு நைலோன் வலை விடும் தொழிலைத் தடை செய்ய வேண்டும் என விரும்புகிறோம்.

இவர்கள் எமது வலைக்கு அண்மித்து தமது வலைகளை விடுவதால் மீன்கள் கரையை நோக்கிவருவது தடைப்படவே·நாங்கள் பட்டினியால் வாடவேண்டியுள்ளது.

அடுத்து நாட்டின் சூழ்நிலை காரணமாக எமது தொழிலுக்கு இன்றி அமையாத காட்டுக்கம்புகளைப் பெறமுடியாதுள்ளது. இது ஒரு பிரதான கஷ்டம். மற்றும் வங்கிகள், வேறு நிறுவனங்கள் என்பவற்றை எடுத்துக்கொண்டால் மீன்பிடி என்றவுடன் இயந்திர வள்ளங்களும் வலைகளுமே என்ற கோட்பாட்டை மாற்றிக் கொள்வதாக இல்லை. இதன் காரணமாக எமக்கு அவர்களிடமிருந்து உதவிகள் கிடைப்பது மிக அரிதாகவே உள்ளது.

இவற்றை எல்லாம் நாம் சுய நம்பிக்கையுடன் நடந்து கொண்டாலும் கடற்படையினர் அச்சத்தால் எமக்கு நம்பிக்கை சிதறடிக்க வைக்கிறது. எங்கள் வலை நிரந்தரமாக கடலில் விடப்பட்டிருந்தால்தான் எங்களுக்கு வருமானம். கடற்படையிடம் எவ்வளவோ கெஞ்சியும் தமது பாதுகாப்பு காரணங்களுக்காக இதை அனுமதிக்கவில்லை. இதனால் எமது குடும்பங்கள் பல தொழில் இழந்து வாடுகின்றன. மீன்பிடித் தொழில் என்றால் இயந்திரப்படகும் வலைகளுமே என்று கருதும் உதவி திணைக்களங்கள் கூட எமக்கு உதவவோ நிவாரணம் வழங்கவோ முன்வரவில்லை. நேவியை (கடற்படைத்தளம்) அண்மித்தே எமது தொழில்கள் இருப்பதனால் அவர்கள் தமக்கு பாதுகாப்பு பிரச்சினை என்கிறார்கள். எமக்கு பட்டினிப் பிரச்சினை. வேறு தொழில்களில் எமது தொழிலாளர்களை ஈடுபடுத்த போதிய பணவசதி எம்மிடம் இல்லை. அன்றாடம் உழைத்துக் கஞ்சிகுடிக்கும் நாமும் குழந்தைகளும் மெல்ல மெல்லச் சாவதனை யாரும் உண்கிறார்களில்லையே என்பதுதான் என் கவலை என்று மனம் நொந்து கூறுகிறார் பாக்கியராசா.

அமைதியான குடும்பங்கள் அவலச் சுழியில் அமிழ்ந்து போகாமலிருக்க கடற்தொழில் திணைக்களம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

**-விவேகி**

---

# "மன்சூரின் கட்டிடத்துக்கு நான் உதவுவதா?"

**-பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா**

மட்டக்களப்பில் இருக்கும் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளும் கூட்டணியின் மூன்று எம்.பி.க்களுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் என பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இதன்படி ஹிஸ்புல்லா காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய முஸ்லிம் பிரதேசங்களுக்கும், பொன் செல்வராசா களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை ஆகிய பிரதேசங்களுக்கும் ஜோசப் மட்டக்களப்பு, ஆரையம்பதி, வவுணாதீவு ஆகிய பிரதேசங்களுக்கும், துரைராஜசிங்கம் செங்கலடி, வாழைச்சேனை, வாகரை ஆகிய பிரதேசங்களுக்கும் பொறுப்பாக உள்ளார்கள் என்றும் தெரியவருகிறது.

இந்த ஏற்பாட்டின்படி இவர்களே அவ்வப்பகுதியின் பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவர்களாக இருப்பார்கள். எந்தப்பணமாக இருந்தாலும் இவர்கள் சொல்லும் வேலைத்திட்டங்களுக்குத் தான் செலவழிக்கவேண்டும். இவர்கள் சொல்லுபவர்களுக்குத் தான் கொந்தராத்துக்கள் கொடுக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஜோசப் பரராஜசிங்கம் முன்னணியில் உள்ளார்.கொந்தராத்துக்கள் அனைத்தும் அவரின் மைத்துனருக்கே கொடுக்கப்படுகின்றன. அவரின் நெருங்கிய உறவினர்களுக்கே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன என்றும் பரவலாகப் பேசப்படுகின்றது.

இவர்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்டுள்ள அதிகாரமானது இவர்கள் தங்களை சகல வழிகளிலும் வளர்த்துக் கொள்வதற்கே வழி அமைத்துள்ளது. அதாவது' இவர்கள் தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக அரச அதிகாரிகள் பலியிடப்படுகின்றனர். மறுபுறத்தில் இவர்களுடைய அபிவிருத்திப் பணிகளைப் பார்க்கும் போது அபிவிருத்தியை விட தமது சொந்த நலன்களில் அக்கறையுடன் இருப்பதையே தெளிவாகக் காட்டுகின்றது. ஒவ்வொரு வருடத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக ரூபா 25 லட்சம் அரசினால் வழங்கப்படுகின்றது. இவர்கள் இப்பணத்தை சரியான முறையில் பயன்படுத்தத் தெரியாமல் அவதிப்பட்டதை கடந்த காலத்தில் கச்சேரியில் நடைபெற்ற கூட்டங்களில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அபிவிருத்தியடைய வேண்டும் எனக்கருதுபவர்கள், யார் ஆரம்பித்த வேலையாய் இருந்தாலும் அதை முடித்து அதன் பயனை மக்கள் அனுபவிக்கக் கொடுக்க வேண்டும். ஆனால் இவர்களிடம் அந்த மனோபாவம் அறவே அற்றுக் காணப்படுகின்றது. உதாரணமாக கடந்த அரசில் அமைச்சராக இருந்த மன்சூர் காத்தான்குடியில் கட்டிய அரபுக்கல்லூரிக்குரிய பெரிய கட்டிடமொன்று முடிப்பதற்குத் தேவையான பணம் இல்லாமையால் அப்படியே இருக்கின்றது. இவ்விடயத்தை கடந்த மாதம் கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் ஹிஸ்புல்லாவிடம் தெரிவித்த போது மன்சூர் கட்டிய கட்டிடத்திற்கு என்னால் உதவி செய்ய முடியாது எனப் பட்டவர்த்தனமாகக் கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் கடந்த கால பாராளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கப்பட்டு நிதி போதாமையால் கட்டி முடிக்கப்படாத 29 பாடசாலைக் கட்டிடங்கள் உள்ளன. இவ்வருடத்தில் தமக்குரிய நிதியில் இருந்து எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு சதம் தானும் இக்கட்டிடங்களை முடிக்க ஒதுக்கீடு செய்யவில்லை. ஆனால் தாங்கள் புதிதாகப் பாடசாலைகளைக் கட்ட திட்டம் கொடுத்துள்ளார்கள். அதுவும் பல வருடத்திட்டம். இவர்களைப் பொறுத்தவரையில் அடுத்த அரசில் கூட பதவிக்கு வருவதை உறுதிப்படுத்திக்கொண்டே செயற்படுகிறார்கள் போல் தெரிகிறது. நாளை பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டால் இவர்கள் நடுத்தெருவில். அப்போது இவர்கள் ஆரம்பித்த பல வருடத் திட்டத்திற்கு என்ன நேரும் என்பதைப் புரிந்து கொள்ளாமலே செயற்படுகின்றார்கள் போல் தெரிகிறது. இந்த உண்மையைக் கச்சேரிக் கூட்டத்தில் திடடமிடல் அதிகாரி ஒருவர் வெளிப்படையாகக் கேட்டபோது பாராளுமன்ற உறுப்பினர்களின் முகத்தில் அசடு வழிந்ததை நன்றாகவே காணக்கூடியதாக இருந்தது. அத்தோடு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் த.வி.கூட்டணிக்கு பெரு வெற்றியைத் தேடித்தந்த போரதீவு, வாகரை, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பிரதேசங்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கான காரணத்தை இவர்கள் இப்படிக்கூறினார்கள். எங்களுடைய பணத்தில் ஆரம்பிக்கும் வேலைகளை நாங்கள் போய் திறப்பு விழா செய்ய முடியாத இடங்களில் ஆரம்பித்தால் நாங்கள் பணம் கொடுத்தும் என்ன பயன்?

இவர்களுடைய பாஷையில் இவர்கள் வேலைகளுக்குப் பணம் ஒதுக்குவது இவர்கள் போய் திறப்பு விழா செய்வதற்கே தவிர மக்களுக்காக அல்ல.

***"வாழ்க எங்கள் தலைவர்கள்!"***

**-சத்தியேந்திரா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 'இதயசங்கமம் ஈ.பி.ஆர்.எல்.எப்.இனதல்ல!'
-பாஸ்கரன்

இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி வரும் 'இதய சங்கமம்' நிகழ்ச்சி தொடர்பாக கடந்த இதழில் வெளியான இதழில் குறிப்பிட்டிருந்தது போல தாங்கள் ஈ.பி.ஆர் எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும் அதிலிருந்து எப்போதோ விலகிவிட்டதாகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களான சிதம்பரப்பிள்ளை சிவகுமாரும், பாஸ்கரனும் மறுப்புத் தெரிவித்துள்ளார்கள்.

இந்தநிகழ்ச்சி எந்தவொரு அரசியற் கட்சிக்கும் வழங்கப்படவில்லை, இந்நிகழ்ச்சிகள் எந்தவொரு அரசியற் கட்சியின் நோக்கங்களைப் பிரதிபலிக்கவுமில்லை என்றும் இந்நிகழ்ச்சியை இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையே நடாத்தி வருகிறது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்திருக்கிறார்கள்

ஆயினும், இந்நிகழ்ச்சி, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் வழமையான நிகழ்ச்சிகள் போலல்லாது, விசேடமாக, முறையற்ற முறையில் வெளியாருக்கு வழங்கப்பட்டே நடைபெற்று வருகிறது என்றும், இவ்வாறான ஒரு முறையிலேயே முன்னர் இந்நிகழ்ச்சஈ.பி.டி.பியினருக்கு வழங்கப்பட்டிருந்தது என்பதும் குறித்து எமது செய்தி இன்னமும் சரியாகவே உள்ளது. இச்செய்திக்கு மற்றெல்லாரையும் விட பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையே சார்ந்தது.

## தமிழ்...

எல்.எப், ரெலோ ஆகியவையும் இதே நிலைப்பாட்டையே பெருமளவுக்குக் கொண்டிருப்பது வரவேற்கத் தக்க விடயம் என்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகளை வெறும் போக்குக் காட்டி மறுதலித்து வந்ததை இவ்வாறான ஒருமைப்பாடான கோரிக்கை முறியடிக்கும் எனவும், இக் கோரிக்கைகளை முஸ்லீம் காங்கிரசும் ஆதரித்திருப்பது தமிழ் முஸ்லீம் மக்களின் அரசியல் உரிமையைப் பெற்றுக் கொள்வதில் தமிழ் முஸ்லீம் கட்சிகளது உறுதிப்பாடுபற்றி அரசு தரப்பினர் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் என்றும் கருத்துத் தெரிவித்த தமிழ் அரசியல் அவதானி ஒருவர், ஆனால் இவர்கள் கடந்த காலங்களைப் போல விலை போகாமல் தாம் வைத்த கருத்துக்களுடன் உறுதியாக நிற்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் இவ்வாறான கோரிக்கை ஒன்றைத் தனியாகச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

## ஜனாதிபதி...

கப்பட்டு தேர்தலில் நிற்கும் உரிமையை இழந்திருந்தார் என்பது தெரிந்ததே.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரம் மிக்க இக்குழுவின் முடிவு பல ஐ.தே.க. முக்கியஸ்தர்களுக்கு பாரிய நெருக்கடியை கொடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் பழிவாங்கல், அதிகார துஷ்பிரயோகம், ஊழல், மோசடி போன்ற ஏதாவது ஒன்றில் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவரது குடியியல் உரிமைகளை பறிக்குமாறு ஜனாதிபதிக்கு பிரேரிக்கும் உரிமையையும் அதிகாரத்தையும் இந்த ஆணைக்குழு கொண்டுள்ளது!

இந்த ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதிபதி (Supreme Court) பிரியந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்ற (Appeal Court) நீதிபதி ஹெக்டர் யாப்பா, உயர் நீதிமன்ற (High Court) நீதிபதி எப்.என்.டி. ஜயசூரிய ஆகியோர் இவ்விசாரணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஆறு மாதகாலத்துள் இந்த ஆணைக்குழு தனது விசாரணையை முடித்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், இக்காலஎல்லை போதாத பட்சத்தில் அதை நீடிக்கும் வாய்ப்பும் உண்டு எனத்தெரிவிக்கப்படுகிறது.

அன்று ஸ்ரீ.ல.சு.கவை பழிவாங்க ஐ.தே.க. பாவித்த அதே ஆயுதத்தை இன்றைய அரசு கையிலெடுத்துள்ளது. விசாரணைகள் முறையாக நடந்து உண்மைக்குற்றவாளிகள் தண்டிக்கப்படுதல் முக்கியம். ஆயினும், அரசியல் பழிவாங்கலாக இந்த விசாரணை போய்விடக்கூடாது என்பதே இலங்கை மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## சமாதான...

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தனிப்பட்டரீதியில் நல்லெண்ண முயற்சியில் யாழ் சென்றிருந்த ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், சண்டே ஒப்சேபர் ஆசிரியர் அஜித்சமரனாயக்க, மேர்ஜ் தலைவர் சார்ளி அபேசேகர, வணபிதா கென்னத் பெனாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி உயான் கொட ஆகியோர் புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் இவ்விடுதலைக்கு முக்கிய பங்காற்றி உள்ளன என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு மீதான பொருளாதாரத் தடையை நீக்கி தம்மை விடுவிக்க உதவுமாறு அரசிடம் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை பொலிஸார் நடத்திய போதும், அரசு இது தொடர்பாக எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று கைதிகளை விடுவிக்கும் நிகழ்ச்சியில் பேசிய விடுதலைப்புலிகள் அரசியல் துணைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, இக் கைதிகளை விடுவித்த கையோடு, ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் புலிகள் காலக் கெடு விதித்திருப்பதாக கூறப்பட்ட செய்தி தொடர்பாக கருத்து தெரிவித்த நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பேச்சுவார்த்தைக்கான கதவுகளைப் புலிகள் மூடிவிடவில்லை என்றும்,இது தொடர்பாகத் தொடர்ந்தும் பேச்சுக்கள் தொடரும் என்றும் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு அரசு தரப்பில் எழுதப்பட்ட கடிதங்களில் காணப்படும் வார்த்தைப் பிரயோகங்களும், அவை குறிப்புணர்த்தும் விடயங்களும் புலிகளைச் சந்தேகம் கொள்ள வைக்கும் விதத்தில் அமைந்திருப்பதாகப் புலிகள் தரப்பில் சுட்டிக் காட்டியதை அங்கிருந்து வந்த சமாதான விரும்பிகள் சிலர் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாகவும், இது தொடர்பாகத் தொடர்ந்து பேச அவர்களின் உதவியை ஜனாதிபதி கோரியதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், நிலைமை மோசமடையாமல் பாதுகாப்பதில் தாம் அக்கறையாக இருப்பதாக அரசு தரப்பில் இருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிப்பதுடன், யுத்தம் ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் உடனடியாக இல்லை என்றும் தெரிவிக்கின்றன.

## இப்படியும்...

கைத் தரத்தையே அனுபவித்து வருகின்றார்கள் என்பதையும், அவர்களுக்கான விசேட கவனிப்புக்கள் அவசியம் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அதற்குத் தீர்வாக நீங்கள் கேட்கும் 'பிரதேச அதிகார அலகு' என்பதை வழங்கினால் இந்நாட்டில் என்ன தான் மிஞ்சும்? இதற்கு மாற்றாக ஏதேனும் வழங்கினால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?''

சென்றிருந்த ம.ம.மு பிரதிநிதிகள்: '' நீங்கள் எதைத் தருவீர்கள் அல்லது நாங்கள் வைக்கும் கோரிக்கைக்கு மாற்றீடாக எவற்றை வழங்குவீர்கள் என்பதை தெரிவுக்குழு சார்பாக நீங்கள் முன்வைத்தால். நாங்கள் அதனைப் பரிசீலித்து பதிலளிக்கின்றோம்'' தெரிவுக் குழுவின் இன்னோர் கேள்வி: ''அப்படியான நிர்வாக அலகை வழங்குவதற்கு ஏதுவான வகையில் மலையக மக்கள் தொடர்ச்சியான நிலப்பரப்பில் செறிவாக இல்லையே?

ம.ம.மு பிரதிநிதிகள் 50%க்கும் குறைவான முஸ்லீம் மக்கள் வாழும் ஒரு பிரதேசத்தில் முஸ்லீம் நபர்வாக அலகொன்றை ஏற்படுத்த முடியுமானால் ஏன் 50%க்கும் அதிகமாக மலையக மக்கள் வாழும் பிரதேசத்தில் நிர்வாக அலகொன்றை அமைக்க யோசிக்கக்கூடாது?'' குறிப்பிட்ட சில விடயங்களை தெரிவுக்குழு விவரித்து விட்டு கலைந்து விட்டதாகத் தெரிகிறது.

இந்தத் தெரிவுக்குழுவில் மலையக மக்கள் தொடர்பான யோசனைகளை முன்வைத்திருக்கின்ற புதிய ஜனநாயக கட்சி, மலையக மக்கள் முன்னணி இரண்டுமே தெரிவுக்குழுவின் இவ்வகையான கேள்விகளுக்கு முகம் கொடுத்திருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. இத் தெரிவுக்குழு உண்மைகளை ஆராய்ந்து அரசுக்கு ஒரு தீர்வை சிபார்சு செய்வதற்கு பதில் சாட்சியமளிக்கும் கட்சிகளின் அபிப்பிராயங்களை பெருக்கு கேட்டு கொண்டிருக்கிறதோ என்ற ஐயத்தை இத் தெரிக் குழுவின் அணுகு முறை காட்டுவதாக விசாரணைக்கு சென்ற பிரதிநிதிகளில் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவுக்குழு முன்னிலையில் இதுவரை எதுவித யோசனைகளையும் முன்வைக்கவில்லை என்றும் தனக்கு எதிர் தரப்பிலுள்ள கட்சிகள் மலையக மக்கள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்திருப்பதால் தமது கோரிக்கைகளை முன்வைக்கா விட்டால் அதை அவர்கள் தமக்கு எதிராக அரசியல் ரீதியாக பயன்படுத்தி விடுவார்கள் என்ற பயத்தில் தற்போது அதற்கான நடவடிக்கைகளை ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## ஒன்றும் புதிதாக...

புதிய அரசியலமைப்பின்படி அரசியலமைப்புப் பேரவையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், மாகாணங்களின் முதலமைச்சர்களால் தெரிவு செய்யப்படும் ஒரு முதலமைச்சர், பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்படும் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், இரண்டு ஒய்வு பெற்ற நீதியரசர்கள் அங்கம் வகிப்பார்கள். இதில் சிறுபான்மையினர் இருப்பதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை. இலங்கையின் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் சிறுபான்மையினரைப் பாதிக்கும் ஒரு சட்டம் கொண்டு வரப்படும் போது பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் ஒரு பக்கமாகப் போய்விடுகிறது. அப்படியொரு நிலை வரும்போது சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கு இந்த அரசியலமைப்பு சபையில் வாக்களிக்க எவரும் இருக்க மாட்டார்கள்.

உதாரணமாக, அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட போது இரண்டு கட்சியும் சேர்ந்துதான் வாக்களித்தன. ஆனால் சிறிமாவோவினுடைய குடியியல் உரிமைகளைப் பறிக்கும் போது த.வி.கூட்டணி எதிர்த்து வாக்களித்தது. இதில் த.வி.கூட்டணியின் கருத்து சிறிமாவோவின் குடியியல் உரிமையைப் பறிப்பது என்பது ஜனநாயகத்தைப் பாதிக்கிறது என்பது. ஆனால் எதிர்க்காட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது ஜனநாயகத்தைப் பாதிக்காதா என்பதுதான் கேள்வி. இதிலும் பெரும்பான்மைக்கட்சி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்குப் பதில் இனவாத ரீதியில்தான் பார்த்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

***ஆக, இந்த யாப்பு எந்தளவுக்கு சிறுபான்மை இனங்களின் பிரச்சினையைக் கருத்திற் கொண்டு வரையப்பட்டிருக்கிறது?***

உண்மையில் நூற்றுக்கு நூறுவீதமாக இதனை இப்போது நாம் சொல்ல முடியாது. ஏனெனில் அதன் முதலாவது அத்தியாயம் வரையப்படாமலே உள்ளது. மக்கள், அரசு, இறைமை பற்றிய அத்தியாயம் நிரப்பப்படவில்லை. பிராந்திய அலகுகள் எப்படி அமையப் போகின்றதென்பதும் தெரியாது. சமஷ்டி இதனுள்ளடங்குமா என்பதும் தெரியவில்லை. ஆனால் ஏற்கெனவே நான் கூறியபடி இவற்றுள் நீதிமுறை மீளாய்வு இல்லை, இரண்டாவது சபை இல்லை. உத்தியோபூர்வ மொழி தொடர்பான திருப்தியான ஏற்பாடு இல்லை. பிரஜாவுரிமைச் சட்டம் குறைபாடுடையதாகவே இருக்கிறது. மற்றையது. அரசியலமைப்புக்கு முரணாக ஏற்கெனவே இருக்கும் சட்டங்களும், இனிவரப்போகும் சட்டங்களும் வலிவுடையதாகவே இருக்கப்போகின்றன. எனவே இவ்வளவையும் வைத்து நோக்கும் போது சிறுபான்மை இனங்களைப் பொறுத்த வரையில் இதுவரை உள்ள நிலைமை தொடரும் என்பதே புலனாகின்றது.

சங்கரன்

## வி.பி...

பட்டுப் பேசினார்.) அத்துடன் தாமும் - சிறிமா அம்மையாரை - பண்டத்தரிப்புக்குச் கூட்டிச்சென்று 1 1/2 மணிநேரம் மாலை போடுவித்ததாகச் சொன்னார். இவற்றையெல்லாம் குமார் பொன்னம்பலம் ஏ'வதானமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

விநோதன் பலாலியிலிருந்து சுன்னாகம் வரை செல்ல, மோதிலால் பண்டத்தரிப்புக்குப் போனார். மீண்டும் வி.பியைக் காணவில்லை!

வி.பியின் மகன் நமுனுகுலன் பேச வந்தார். எங்கள் குடும்பத்தின் சார்பில் இரக்கமாகக் கேட்கிறேன் என - அவர் அப்பாவின் அவாக்களைக் கூறினார்.

அப்பாவை வெளியேற்றிய கம்யூனிஸ்ட்டுகள் பின்னர் கூட்டணி சின்னத்திலேயே நவரத்தினத்தை பாராளுமன்றம் கொண்டு வந்தார்கள் என்றார்.

வாசு என்று நல்லவர் ஒருவர் இருந்தார். கே.பி.சில்வா என்ற ஒரு நல்லவர் இருந்தார் என்று சரித்திரம் சொல்லாமல் - கம்யூனிஸ்ட் கட்சி என்று ஒரு நல்ல கட்சி இருந்தது என்று சரித்திரத்தைப் படையுங்கள் - என்றார்!

சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில் நமுனுகுலன் தகப்பனைப் போல் நல்ல பேச்சாளரென்றும் தம்முடன் சேர்ந்து பாராளுமன்றத்துக்கு வரவேண்டும் என்றார். அவரும் தனது யாழ் விஜயத்தை விநோதன் காலம் - மோதிலால் காலம் என 'வரலாற்றுப் பின்னணிகளுடன்' பேசினார்.

விநோதன் அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். பேச்சாளர்கள் உரையாற்ற செலவழித்த நேரத்திலும் பார்க்க விநோதன் ஒவ்வொரு இடைவெளியிலும் அதிக நேரம் உரையாற்றினார். இடையிடை சபையினரை 'மோடர்கள்' என்றும் குறிப்பிட அவர் தவறவில்லை.

த.வி.கூ. தலைவர் மு.சிவசிதம்பரம் கூறியது போல விழா வி.பியின் விழாவாக இருந்ததை விட ஒரு சிலரின் புகழ் பாடும் தனிப்பட்ட விழாவாக இருந்தது. போகிற போக்கில் சிவசிதம்பரம் அவர்கள் மோதிலால் நேருவையும் தாக்கினார். ''பாராளுமன்றத்தில் பெயர், ஊர் தெரியாதவர்கள் இருப்பதாக மோதிலால் நேரு கூறினார். ஏன், நீலன் திருச்செல்வம் இலங்கையில் மாத்திரமல்ல: சர்வதேச ரீதியாகப் புகழ் பெற்றவர்'' என்றார். நீலன் சர்வதேச ரீதியாக எதில் புகழ் பெற்றவர் என்பதைத்தான் குறிப்பிடவில்லை. சிவசிதம்பரம் இன்னொரு கருத்தையும் கூறினார்: '' இளைஞர்கள் எதற்காக ஆயுதம் தூக்கினார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அதனை நாம் தெளிவாக அறிந்து கொண்டோமானால், அவர்களை ஆயுதங்களைக் கீழே போடுங்கள் என்று வற்புறுத்த முடியாது'' என்றார்.

எப்படியோ ஒரு திருவிழா பார்த்த திருப்தி.

## முஸ்லீம் மக்களும்...

தான், முஸ்லீம் காங்கிரசுக்கும், பரந்துபட்ட முஸ்லீம் மக்களுக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை எனக் கருதலாம். உண்மையில் இந்த பிரதிநிதித்துவம் முஸ்லீம் எதிர்கால சந்ததி கடனாகத் தந்த வரப்பிரசாதமல்லவா? வரலாற்றுக்கும் எதிர்கால சந்ததிக்கும் அமைச்சர் எம்.எச்.எம்.அஸ்ரஃப் அவர்கள் என்ன பதில் வைத்திருக்கறார் என்பதை தயவுடன் தெரிவித்தருவாரா?

முஸ்லீம் இளைய தலைமுறையே உன்னை மூடிக்கிடக்கிற பச்சைப் பொய், நீலப் பொய், பலவர்ணப் பொய்களை விலக்கிக் கொண்டு இளைய சூரியனைப் போல உதித்தெழுந்து வா!

இருளில் நடக்கின்ற உனது அரசியலின்மீது ஒளியைப்பாய்ச்சு!

முஸ்லீம்களது இலட்சியம் பதவி, முஸ்லீம் மக்களது கோரிக்கை உதவி என்கிற இழிநிலையை மாற்றி அமை!

1915ம் ஆண்டு கலவரத்தினோடு தென்பகுதியில் ஏற்பட்ட மேல் வர்க்க முஸ்லீம்களது சரணாகதித்துவங்களைச் சுட்டெரி!


உனது தமிழ், சிங்கள, மலையக நண்பர்களை அடையாளம் கண்டு கொண்டு ஒரு புதிய வரலாற்றை ஆரம்பித்துவை!

எனது பேனா என்றும் உனது காலடிச்சுவடுகளை மகிமைப்படுத்த காத்திருக்கிறது......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR
# சரிநிகர்



சரிநிகர்
4, ஜெயரட்ன மாவத்தை,
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 5
தொலைபேசி 584380

பிரதம ஆசிரியர் - சேரன்

## நல்ல நோக்கமும் நரகத்துக்கான பாதையும்

**''மீண்டும் ஒரு முறை யுத்தம் வரப்போகிறதா?''**

**விடுதலைப் புலிகளின் மார்ச் 28ம் திகதி காலக்கெடு விதித்த கடிதம் பத்திரிகைகளில் வெளியானதை ஒட்டி அனைத்து மக்கள் மத்தியிலும் எழுந்துள்ள அச்சமூட்டுகின்ற கேள்வி இது.**

**'சமாதானப் பேச்சுக்கள் முடிவுற்றுத் திரும்பவும் யுத்தம் தொடங்கி விடுமானால்...' என்று, நினைக்கவே அச்சமூட்டுகின்ற எண்ணத்தை எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாததாகக் கடந்த இரு வாரகால நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.**

**வடக்குக் கிழக்கு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்ட பின் முதன் முதலாக இத்தகையதொரு கேள்வி மக்கள் முன் குறிப்பாக வடக்குக் கிழக்குத் தமிழ்,முஸ்லீம் மக்கள் முன் எழுந்து நிற்கிறது.**

**'வாராது வந்துதித்த மாமணியைத் தோற்போமா?' என்ற ஆதங்கம் அனைத்து ஜனநாயகவாதிகள் மத்தியிலும் எழுந்து நிற்கிறது.**

**வடக்குக் கிழக்கின் தமிழ், முஸ்லீம் மக்களும், இந்த உலகெங்கும் வாழ்கின்ற அனைத்து மக்களையும் போல அமைதியாகவும், சமாதானமாகவும், கௌரவமாகவும் வாழ விரும்புகிறார்களே ஒழிய, யுத்தத்தை அவர்கள் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை.**

**அவர்கள் மட்டுமல்ல, இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களான சிங்கள மக்களும் கூட யுத்தத்தை விரும்பவில்லை.**

**ஒரு சில இனவாதிகளும், யுத்தத்தினால் இலாபம் அடைபவர்களும் மட்டுமே யுத்தத்தை விரும்புவார்கள். ஆயுத வியாபாரிகளும், அதிகார வெறியர்களுமே யுத்தத்தை ஆதரிப்பார்கள்.**

**அரசியல் ரீதியாகத் தீர்த்துவிடக் கூடிய ஒரு நாட்டின் இனப்பிரச்சிக்கான ஆயுதப் போரில், அந்த நாட்டின் இளஞ் சந்ததியை அவமாகக் காவு கொடுப்பதில் அவர்களுக்கு மட்டுமே இன்பம் காண முடியும்.**

**ஆனால், நாட்டில் நிலவும் இனப்பிரச்சினையின் ஆழம், அது மக்களின் மனதில் ஏற்படுத்தியுள்ள வடுவின் பருமன், இனங்களிடையே வளர்ந்துள்ள பரஸ்பர சந்தேகம் என்பவற்றைக் கணக்கில் எடுக்கத் தவறும் பலர், சமாதானத்தை என்னதான் மனதார நேசித்தாலும், அதற்காகத் தாம் எடுக்கும் முயற்சிகளால், யுத்தத்தை உருவாக்கத் துணைபோய் விடுகிறார்கள்.**

**இந்தத் துரதிர்ஷ்டமான நிலை எமது நாட்டுக்கும் கூட வந்துவிடும் ஆபத்து இருக்கிறது.**

**சமாதானம், சமத்துவமற்ற, சுயகௌரவத்தை மதிக்காத ஒரு நிலையில் உருவாக முடியாது என்ற பள்ளிப் பாடத்தையாவது அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.**

**நரகத்துக்கான பாதையும் நல்ல நோக்கத்திற்காகவே போடப்படலாம் என்று ஒரு முறை லெனின் எழுதினார்.**

**வெறுமனே நல்ல நோக்கங்கள் மட்டும் நல்ல முடிவைத் தந்து விடுவதில்லை.**

**எமது நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும் என்ற நல் நோக்கம் மட்டும் போதாது; அதற்கான யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.**

**மக்களின் பெயரால், அவர்களின் நல் வாழ்வின் பெயரால் எமது நாட்டின் எதிர்காலச் சந்ததியின் பெயரால் சமாதானத்திற்காக உழைக்க வருபவர்கள், தேசிய இனங்களின் உரிமைகளின் அவசியத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.**

**யுத்தத்தினால் இதுவரை சாதித்ததெல்லாம் வெறும் இறப்பும், அழிவும்தான்.**

**இந்த அரசாங்கமும் இதையே மக்களுக்குத் தரவேண்டும் என்பதற்காக மக்கள் அதைத் தெரிவு செய்யவில்லை.**

**இதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டால் சரி!**

## தாயகம் திரும்பிய அகதிகள்: அதிகாரிகளிடம் சிக்கித் தவிக்கும் பரிதாபம்!

புதிய நம்பிக்கையுடன் தாயகம் திரும்பிய அகதிகளுக்கு வரவேற்பே பேரிடியாக அமைந்துள்ளது. பட்ட இன்னல் போதும்; புது வாழ்வு தொடங்குவோம் என்று முகம் மலர வந்தவர்களுக்கு இறங்குதுறையிலேயே துவேஷத்தனமான வரவேற்பு கிடைத்தது.

திருமலை அரசாங்க அதிபர் திரு எச்.டி.சந்திரதாச தான் ஒரு அரசாங்க அதிபர் என்பதையே மறந்து மூன்றாந்தர சிங்கள அதிகாரியாக நடந்து கொண்டமை புனர்வாழ்வை எதிர்பார்த்தோர் மத்தியில் கிலேசத்தை உண்டுபண்ணியுள்ளது.

என்றுமில்லாதவாறு துறைமுகத்தில் வைத்தே அகதிகளின் பொதிகளை வீடியோ செய்த சந்திராதாச தொடர்ந்து துவேசத்தனமானதும் இறுக்கமானதுமான போக்கையே அகதிகள் விஷயத்தில் கடைப்பிடித்து வந்துள்ளார். இதற்கு முன்னர் அரசாங்க அதிபராக இருந்த திரு.டபிள்யு.கொடவலயை நன்றியுடன் நினைவு படுத்துமளவுக்கு கேவலமாக நடந்து கொள்கின்றார் சந்திராதாச.



முன்னெப்போதும் நடைபெறாத சம்பவம் அரசாங்க அதிகாரிகள் தலையீடு. அரச கொள்கைத் துவேசமும் அடாவடித்தனமும் என்று வியக்குமளவுக்கு சுங்க அதிகாரிகள் அடாவடித்தனமாக நடந்துள்ளனர். கொண்டு வரப்பட்ட பொதிகளுக்கு சுங்கத் தீர்வை விதிக்க வேண்டுமெனக் கூறி அவர்கள் உடமைகளை எல்லாம் முகாமின் நடு முற்றத்தில் ஒன்றாகக் குவித்திருக்கிறார்கள்.

இச்செய்திகள் பொதிகளைக் கொண்டுவந்தோருக்கு பாதிப்பை உருவாக்கியது. திருடர்கள் தில்லுமுல்லுக்காரர்களுக்குச் சாதகமாய் போய்விட்டது. முகாமுக்கு முன்னால் உள்ள லொட்ஜ் ஒன்றில் ஒரு கும்பல் தங்கியிருந்து, பொதிகளை வரியின்றி இலேசாகக்கடத்தி வெளியே கொண்டு தருவதாகப் பேரம் பேசி பலரிடம் பணம் பெற்றிருக்கிறது. உண்மையில் சிலரது பொதிகள் இவ்வாறு கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இந்தக் கைங்கரியத்துக்கு சுங்கஅதிகாரிகளும் பொலிசாரில் சிலரும் உதவி அளிப்பதாக முகாமில் உள்ளவர்கள் பேசிக் கொள்கிறார்கள். இரவுக் கடமையிலேயே சில பொலீசார் திடீரென்று உடல் பருத்த சம்பவங்களும் நடந்துள்ளன என அவர்கள் கூறுகின்றார்கள். இது மாத்திரமல்ல சில கெட்டித்தனமான அதிகாரிகள் அகதிகள் பொதிகளையும் உடைத்து திருடியிருக்கின்றார்கள்.

இதற்கு முதல் பல தடவைகள் கப்பலில் தாயகம் திரும்பியோர் வந்த போதிலும், இதனை விடபாது காப்பு குறைவான இடத்தில் தங்க விடப்பட்ட போதும் இடம் பெறாத அடாவடித்தனங்கள், திருட்டுக்கள் இம் முறை ஏன் நிகழ்ந்தது என்று மக்கள் ஏங்குகிறார்கள். இது அரசாங்க அதிபரின் நிருவாகத் திறமையா அல்லது பொலீசாரும் சுங்கத்தினரும் முகாமுக்குள் நுழைந்ததால் ஏற்பட்ட பெருந்தன்மையா என தாயகம் திரும்பியோர் கொதித்துப் போகிறார்கள்.

ஒரு சில பண முதலைகள் தாயகம் திரும்புவோர் ஊடாகப் பொருட்களும் கடத்துகிறார்கள் என்ற கூற்றில் உண்மைகள் இருந்த போதிலும், அவற்றைத் தரம் பார்த்து தண்டம் விதிக்கும் ஆற்றல் அதிகாரிகளுக்கு இல்லாதபடியால் பொதுவாக சகல அகதிகளுமே பாதிக்கப்பட்ட பரிதாப நிலைமை தோன்றுகிறது.

இது சம்பந்தமாக ஈ.பி.டி.பி, ரெலோ அமைப்புக்கள் தலையிட்ட போதிலும் த.வி.கூ இரா.சம்பந்தன் முகாமுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்து அமைச்சர் பீரிசுடன் தொடர்பு கொண்ட பிறகே நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது. அகதிகள் மனோநிலையை உணரக்கூடிய நன்கு தமிழ்த் தெரிந்த உயர் சுங்க அதிகாரியொருவர் அனுப்பப்படுவார் என்று அமைச்சர் இரா.சம்பந்தனுக்கு உறுதியளித்ததோடு, இடம்பெற்ற மோசடி குறித்தும் விசாரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மக்களின் வெறுப்பு அரசாங்க அதிபர் மேல் தான்!

**வி**

## அம்பாறை: ஐ.தே.க கைவிரிப்பு!

தொட்டலங்க குண்டுவெடிப்பில் காலமான ஐ.தே.க எம்பிக்களான காமினி விஜயசேகர, ஜி.எம் பிரேமச்சந்திரா ஆகியோரின் வெற்றிடங்கள் பத்திரிகையாளர் தினேஷ் தொடங்கொட,சரத் கோங்காஹே ஆகியோரின் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

இவ்வெற்றிடம் தொடர்பாக ஐ.தே.க மூத்த உறுப்பினர்களான ஏ.ஸி.எஸ்.ஹமீத்(ஐ. தே. க. தவிசாளர்), எம்.எச் முஹம்மத் ஆகியோரின் வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பது தெரிகிறது. அவ்வெற்றிடங்களில் ஒன்றை கிழக்குமாகாண ஐ.தே.க பிரமுகர்களில் ஒருவரை நியமிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி டி.பி விஜயதுங்காவை இவர்கள் வேண்டியிருந்தனர். அவரும் அதற்கான சம்மதத்தைத் தெரிவித்ததைத் தொடர்ந்து கிழக்கிலிருந்து ஒரு முஸ்லீம் எம்.பி நியமிக்கப்படவுள்ளார் என்பது பரவலாகப் பேசப்பட்டது. அதற்காகப் பலரின் பெயரும் பிரேரிக்கப்பட்டது.

கிழக்கில் ஐ.தே.க சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் மன்சூர்,முஸ்தபா,மஜீத் மற்றும் ஷேகு இஸ்ஸதீன் இவர்களது பெயர்களே முன்னணியில் இருந்தன. திகாமடுல்ல தொகுதியில் முஸ்லீம் காங்கிரஸின் ஆதிக்கத்தினைக் குறைக்கு முகமாகவே அப்பகுதியிலிருந்து ஐ.தே.க முஸ்லீம் எம்.பி ஒருவரை நியமிக்க கோரிக்கை விடப்பட்டுக் கொண்டிருந்தது. எனினும் இக் கோரிக்கை தற்போது புறக்கணிக்கப் பட்டு வேறு எம்.பிக்கள் அதிலும் வயதில் குறைந்த ஒருவரும் நியமிக்கப்பட்டிருப்பது ஐ.தே.கவுக்குள் அதிருப்தியை வளர்த்துள்ளது.

முஸ்லீம் ஒருவர் நியமிக்கப்படாவிட்டால் கட்சியிலுள்ள தங்கள் பதவியைத் துறக்கப்போவதாக ஹமீதும்,முஹமதும் கூறியதாகக் கதைகள் உலாவின. தான் உத்தியோகபூர்வமாக அவ்வாறு எதையும் தெரிவிக்கவில்லை என பின்னர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் தெரிவித்திருக்கிறார்.

தற்போது எல்லாம் முடிந்துபோன நிலையிலும் ஒரு முஸ்லீம் எம்.பியை நியமிப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டும் வருகின்றன. இதற்காக, தயாரத்தின, கலப்பதி, பக்மீமன ஆகியோரில் ஒருவர் இராஜினாமாச் செய்ய வேண்டப்படுவார் என்றும், அவ்விடத்திற்கு ஏ.ஆர் மன்சூர் நியமிக்கப்படலாம் என்றும் பேசப்படுகிறது. காமினிதிசானாயக்காவுக்கு எம்.பி பதவி வழங்குவதற்காக தேசியப் பட்டியல் முஸ்லீம் எம்.பி.ஆமித் வழிவிட்டுக் கொடுத்ததும் இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கது.

**பா**

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள் ...க்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.